T/300/0322

# பணம்
# MONEY




வே. கருணாகரன்
B.A.Hons, Dip in Ed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அன்பளிப்பு → உதயன் நூலகம்
T|300|322

# பணம் £

# MONEY

## பொருளியல்

## (புதிய பாடத்திட்டம்)












**2000**

**வே. கருணாகரன்**

B.A.Hons. Dip in Ed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **SUBJECT :** | Economics |
| **TITLE :** | Money |
| **AUTHOR :** | V. Karunaharan |
| **ADDRESS :** | 215K, Navalar Road,<br>Jaffna. |
| **LANGUAGE :** | Tamil |
| **PAGES :** | 80 + IV |
| **FIRST EDITION :** | February 2000 |
| **COPY RIGHT :** | Mrs. Sayanthi Karunaharan |
| **PRINTER :** | Gangai Offset Computer Print<br>(Near Brown Road) Navalar Road, Jaffna. |
| **PRICE:** | 120/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/300/322

# முன்னுரை

மனிதன் பணத்தைக் கண்டுபிடித்து கொடுக்கல் வாங்கலிலும், பிறபொருளாதார நடவடிக்கைகளிலும் பயன்படுத்தத் தொடங்கியபின்னர் பொருளாதாரத்தில் புரட்சி ஏற்பட்டது. மனிதனின் கண்டுபிடிப்பாகிய பணம் இன்று மனிதனையே ஆட்டிப்படைக்கின்றது

- *பணம் பத்தும் செய்யும்*
- *பணம் பாதாளம் மட்டும் பாயும்*
- *பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்*

என்ற பழமொழிகள் இன்றைய உலகில் பணத்திற்குரிய செல்வாக்கை விளக்குகின்றன. எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளிலும் பணம் ஊடுருவி நிற்பதைக் காண்கின்றோம். உடலின் இயக்கத்திற்கு குருதியோட்டம் துணையாவதைப்போல பொருளாதாரத்தின் இயக்கத்திற்கு பணவோட்டம் இன்றியமையாததாகின்றது. இதனாலேயே இன்றைய பொருளாதாரத்தைப் "பணப்பொருளாதாரம்" (Monetary Economy) என்று கூறுகின்றனர்.

- இத்தகைய முக்கியத்துவம் பெறும் பணம் என்பது பற்றி **க.பொ.த. உயர்தரப் பொருளியல்** பாடத்திட்டத்திற்கு அமைவாக, பொருளடக்கத்தில் உள்ளவாறு எட்டு உபஅலகுகளாக வகுத்து விளக்கப்பட்டுள்ளது.
    - நாணயத்தளம், பணப்பெருக்கி, உட்கிடைப்பணம், E-Money போன்ற சில மேலதிக விடயங்கள் **பிற்சேர்க்கையாக** இணைக்கப்பட்டுள்ளன.
    - கடந்தகாலப் பரீட்சை **வினாக்கள்**, பயிற்சி வினாக்கள் என்பன உபஅலகுகளின் இலக்கங்களைக் குறிப்பிட்டு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் அவசியமானவற்றிற்கு **விடைகளும்** வழங்கப்பட்டுள்ளன.
- **இந்நூலை சுயமாக கற்க முடியும். உபஅலகுகளை ஒவ்வொன்றாகக் கற்று** அவ்வப்போதே இறுதியிலுள்ள அவ் அலகுக்குரிய கடந்தகாலப்பரீட்சை வினாக்கள், பயிற்சி வினாக்கள் என்பவற்றிற்கு விடை எழுதிப் பயிற்சி பெறல் வேண்டும்.
    - அவற்றிற்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகளைப் பார்த்துச் சரியென உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சில வினாக்களுக்கு விடைகள் வழங்கப்படவில்லை. அவற்றுக்கான விடைகளை அவ் உபஅலகைத் திரும்ப வாசிப்பதன் மூலம் பெறமுடியும்.
    - ஒரு உபஅலகுக்குரிய வினாக்களுக்கு விடையளிக்க முடியுமென்ற நிலைவந்த பின்னரே அடுத்த பகுதியைக் கற்கவும்
    - பிற்சேர்க்கை விடயங்களைக் கற்றபின் **இறுதியாக மீட்டல்** வினாக்களிற்கு விடையளிக்கவும்.
- விசேட கவனஞ்செலுத்தவும், ஞாபகத்திலிருத்தவும் வசதியாக முக்கியமான சொற்கள் தடித்த எழுத்தில் **(Bold letters)** அச்சிடப் பட்டுள்ளன. அவற்றிற்கு விசேட கவனம் செலுத்தி ஞாபகப்படுத்திக் கொள்க.
- பொருளியல் II வினாத்தாளில் **முதலில் வரும் வினாக்கள்** பணம் பற்றியதாக அமைவதால், இதில் நன்றாக தெளிவு பெற்றிருப்பதன் மூலம் வினாத்தாளைப் பார்த்தவுடன் **உற்சாகமாக** விடையளிக்க முடியும்.
    - முதல் விடையை சிறப்பாக முன்வைப்பதன் மூலம் மதிப்பீட்டாளருக்கும் விடைத் தாள் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை உருவாக்கி **கூடிய புள்ளிகளைப் பெற** உதவும்.
- இந்நூல் வணிகக்கல்விப் பாடத்திற்கும் உதவுவதால் இருபாடங்களில் புள்ளிகளைப் பெற உதவுகின்றது.
    - GAQ, B. A., B.Com. மற்றும் வங்கிசார்பரீட்சைகளுக்கும் இந்நூல் பயன்படக் கூடியதாகும்

என்னைக் கருவியாகப் பாவித்து இந்நூலினை உருவாக்கிய இறைவனை வணங்கி, இதற்கு உதவிய சகலருக்கும் இறையருள் பாலிக்க வேண்டி இதனை நிறைவு செய்கிறேன்.

வே. கருணாகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| I. | பண்டமாற்றுப் பொருளாதாரம் | 01 |
| II. | பரிமாற்று ஊடகமொன்றின் தேவை, பணத்தின் தோற்றம் - வளர்ச்சி | 04 |
| III. " | வரைவிலக்கணம் | 09 |
| IV. " | பண்புகள் | 10 |
| V. " | தொழிற்பாடுகள் | 11 |
| VI. " | வகைகள் | 18 |
| VII. " | கேள்வி | 29 |
| | A வரைவிலக்கணம் | |
| | B வகைகள் | |
| | C வட்டிவீத நிர்ணயம் | |
| | D சேமிப்பு – பணத்தின் கேள்வி வேறுபாடு | |
| VIII. " | நிரம்பல் | 41 |
| | A வரைவிலக்கணம் | |
| | B முக்கியத்துவம் | |
| | C வகைகள் | |
| | D நிர்ணயிக்கும் காரணிகள் | |
| | E இலங்கையின் பண நிரம்பல் | |
| | கடந்தகாலப் பரீட்சை வினாக்கள் | 52 |
| | பயிற்சி வினாக்கள் | 57 |
| | விடைகள் (கடந்தகாலப் பரீட்சை) | 65 |
| | விடைகள் (பயிற்சி வினா) | 66 |
| | பிற்சேர்க்கை : | |
| | $M_{2b}$ மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் | 69 |
| | நாணயத்தளம் | 71 |
| | பணப்பெருக்கி | 73 |
| | பௌதிகப் பணமும் உட்கிடைப் பணமும் | 74 |
| | இலத்திரனியல் பணம் (Electronic Money) | 75 |
| | மீட்டல் வினாக்கள் | 76 |
| | விடைகள் (மீட்டல் வினா) | 79 |
| | உசாத்துணைகள் | 80 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I

# பண்டமாற்றுப் பொருளாதாரம் (Barter Economy)

❋ இன்றைய பொருளாதாரத்தைப் "பணப்பொருளாதாரம்" என அழைக்கின்றோம். பணம் என்ற கருவி அறிமுகப்படுத்த முன்னர் பண்டமாற்றுப் பொருளாதாரமே நிலவியது. பணத்தின் தோற்றத்திற்கான காரணம் பணத்தின் பணிகள், அதன் முக்கியத்துவம் என்பவற்றை விளங்கிக் கொள்வதற்கு முதலில் பண்டமாற்றுப் பொருளாதாரம், அதிலுள்ள பிரச்சனைகள் பற்றி அறிந்து கொள்வது அவசியமாகும்.

❋ மிகப் பழங்காலத்தில் மனிதன் வேட்டையாடி, மீன்பிடித்து, ஆடு மாடுகளை மேய்த்து வாழ்ந்தான். அக்காலத்தில் தனது உழைப்பால் கிடைத்த பொருள்களைக் கொண்டு உண்டும், உடுத்தும் வாழ்ந்தான். மற்றவர்களைச் சாராத **கற்காலப் பொருளாதாரத்தில்** பொருள்களின் கொடுக்கல் வாங்கல்களுக்குத் தேவை இருக்கவில்லை.

❋ எப்பொழுது மனிதன் தனக்கு வேண்டியவற்றையெல்லாம் தானே உற்பத்தி செய்து கொள்ளாமல் **தொழிற்பிரிப்பின்** (Division of labour) அடிப்படையில் ஏதாவது ஒன்றைமட்டும் தனது திறமைக்கேற்ப உற்பத்தி செய்யத் தொடங்கினானோ அப்பொழுதே பண்டமாற்றுத் தோன்றியது.

❋ "ஒருவன் அல்லது சமூகம் தமது மொத்த உற்பத்தியில் தமக்குத் தேவையான பங்கினை எடுத்துக்கொண்டு, மிகுதியைத்தமக்குத் தேவையான வேறு ஒரு பண்டத்தினைப் பெறுவதற்காக **பண்டத்திற்குப் பதிலாகப் பண்டம் பரிமாறப்பட்ட பொருளாதாரமே பண்டமாற்றுப் பொருளாதாரம்** எனப்படும்"

உதாரணம்:- விவசாயி ஒருவன் தான் உற்பத்தி செய்த மொத்த நெல்லில் தமக்குத் தேவையான பங்கினை எடுத்துக் கொண்டு, மிகுதி நெல்லினைத் தமக்குத் தேவையான கலப்பை, மண்வெட்டி, உடை என்பவற்றைப் பெறுவதற்காகப் பரிமாற்றம் மேற் கொள்ளப்பட்ட பொருளாதாரமே பண்டமாற்றுப் பொருளாதாரம் எனலாம்.

- பண்டமாற்றுமுறையில் **நேரடிப்பரிமாற்றம்** (Direct exchange) இடம் பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிலுள்ள பிரச்சனைகள் / குறைபாடுகள் :

1. **பரிமாற்று ஊடகம் இன்மை**

பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிமாற்றூடகம் இருக்கவில்லை. எனவே பண்டத்திற்குப் பண்டம் பரிமாற்றப்பட்ட போது பின்வரும் பிரச்சனைகள் தோன்றின.

❋ **(அ) இரட்டைத் தேவைப் பொருந்துகையின்மை**

பண்டமாற்றிற்கு இரட்டைத்தேவைப் பொருந்துகை (Double Concidence of wants) அவசியமாகும். துணிவைத்திருக்கும். ஒருவருக்கு ஆடு தேவைப்பட்டு, ஆடு வைத்திருக்கும் ஒருவருக்கு துணிதேவையானால் பண்டமாற்று எளிதாக நடைபெறும். ஆனால் துணிவைத்திருப்பவருக்கு ஆடும், ஆடு வைத்திருப்பவருக்கு நெல்லும் தேவைப்படுமானால் பண்டமாற்று இடம்பெற முடியாமல்போகும். தேவையான ஒருவரை தேடும் செலவு (Search Costs) காணப்பட்டது. பண்டமாற்று முறையில் தேவைகளுக்கு கிடையில் இரட்டைப் பொருந்துகையின்மை பரிமாற்றிற்குத் தடையாக இருந்தது.

**(ஆ) பிரிபடாத்தன்மை**

இரு நபர்களது தேவைகள் இணைந்தபோதும் கூட சில பொருட்கள் பிரிபடாத தன்மையினைக் கொண்டிருந்ததாலும் பரிமாற்றம் இடம் பெறமுடியாதிருந்தது.

- உதாரணமாக: ஓர் ஆட்டை வைத்திருக்கின்ற ஒருவன் அதற்குப்பதிலாக அரிசி, காய்கறி, எண்ணெய், துணி ஆகியவற்றை வெவ்வேறு ஆட்களிடமிருந்து பெறவிரும்புகிறாரென வைத்துக் கொள்வோம். அவனால் ஆட்டைப் பிரித்துக் கொடுக்கமுடியாது, இதனால் பரிமாற்றம் இடம்பெற (அவன் விரும்பிய பொருளைப்பெற) முடியாமல் இருக்கும்.

**(இ) எடுத்துச் செல்வது** கடினமாக அமைந்தமை.

(ஈ) பரிமாற்றத்திற்கு **நீண்டகாலம்** எடுத்தமை – காலமும், சக்தியும் விரயமானது.

2. *பொதுவான பெறுமான அளவை (கணக்கீட்டு அலகு) இன்மை.*

எனவே ஒவ்வொரு பொருளின் பெறுமதியையும் மற்றப்பொருளின் அளவில் (சார்புவிலை) கூற வேண்டியிருந்தது.

உதாரணமாக: 1 மாடு = 2 ஆடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் ஒரு பொருளுக்கு **ஏராளமான பரிமாற்றுப்பெறுமதிகள்** காணப்பட்டன. இதன் விளைவுகள் :

அ) பெறுமானங்களை ஒப்பிடுவது கடினமாக இருந்தது.

ஆ) கணக்குவைக்க முடியாதிருந்தது.

இ) இரு பொருட்களும் சமமதிப்பில்லாதவிடத்து பண்டமாற்று இடம்பெற முடியாதிருந்தது.

## 3. *பெறுமானத்திரட்டுக் கருவியின்மை*

எனவே மக்கள் தமது செல்வத்தைப் பொருட்களாகத் தான் (தானியங்கள், உயிரினங்கள்) திரட்டி வைக்க முடிந்தது. அதன் விளைவுகள்:

அ) பராமரிக்கச் செலவுகள் ஏற்பட்டமை

ஆ) எளிதில் அழிவடைந்தமை

இ) செல்வத்தை இடத்திற்கிடம் நகர்த்துவது கடினமானமை

ஈ) சேமிக்க முடியாமை

## 4. *பிற்போடப்பட்ட கொடுப்பனவுக்கருவி இன்மை*

கடன் ஒரு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு ஒரு பொதுவான கருவி இல்லாமையால் **கடன்கொடுக்கல் வாங்கல்கள், ஒப்பந்தங்கள்** இடம் பெற முடியவில்லை

## *மேற்காட்டிய நிலமைகள் எல்லாம் சேர்த்து*

- பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்கள் விரிவடைவதற்குத் தடையாக அமைந்தது.
- பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்தியது.

இவ்வகையில் பண்டமாற்றுப் பொருளாதாரமானது சுயதேவைப்பூர்த்தியை நோக்கமாகக் கொண்ட ஓர் மூடப்பட்ட பொருளாதாரமாக விளங்கியது. எனவே பணத்தின் உபயோகமில்லாத இப்பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் **தொழிற் பிரிப்பு, சிறப்புத்தேர்ச்சி** (Specialisation), **பேரளவு உற்பத்தி** (Large Scale Production) **சர்வதேச வர்த்தகம்** (Internationl Trade) **நாணயமாற்று** (Exchange) என்பன **விருத்தியடையவில்லை.** எனவே இது **திறனற்ற** (Inefficient) பொருளாதாரமாக விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு:** பண்டமாற்றுப் பொருளாதாரமொன்றின் பிரதான பிரச்சனைகளைச் சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

i) தேவைகளுக்கிடையில் இரட்டைப்பொருந்துகையின்மை
ii) பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல் விரிவடைவதற்குத் தடையாக அமைந்தது
iii) பொருளாதார வளர்ச்சி மட்டுப்படுத்தப்படல்.

# II

# பரிமாற்று ஊடகமொன்றின் தேவை

❋ பண்டமாற்றுப் பொருளாதாரமொன்றிலுள்ள (மேற்காட்டிய) **பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப்** பரிமாற்று ஊடகம் ஒன்று அவசியம். (விளக்கம் அளிக்குக)

❋ பரிமாற்ற நடவடிக்கைகளை **இலகுபடுத்துவதற்கு** ஊடகமொன்று அவசியம்.

## *பணத்தின் தோற்றம்.*

பணம் **தோன்றுவதற்குக் காரணம் பண்டமாற்றுப் பொருளாதாரத்திலுள்ள குறைபாடுகளாகும், தேவை கண்டு பிடிப்புகளின் தாய்** என்பது பணத்தைக் கண்டுபிடித்ததற்கும் பொருந்தும். பண்டமாற்றுமுறையிலுள்ள பல்வேறு குறைகளைப் போக்கப் பணம் கண்டு பிடிக்கப்பட்டது. மனிதனின் கண்டு பிடிப்புக்களில் பணம் தான் மிகவும் அடிப்படையானது.

- "ஒவ்வொரு அறிவியல்துறைக்கும் அடிப்படையான கண்டுபிடிப்பொன்று உண்டு. பொறியியல்துறையில் சக்கரமும், விஞ்ஞானத்தில் நெருப்பும், அரசியலில் வாக்குச் சீட்டும் அடிப்படையான கண்டுபிடிப்புக்கள். அதேபோன்று பொருளாதாரத்தில், வர்த்தகத்தில், மனிதனின் சமூகவாழ்வு முழுமையிலும் **பணம் ஓர் இன்றியமையாத கண்டுபிடிப்பாகும்.** இதன் அடிப்படையிலேயே ஏனைய யாவும் அமைந்திருக்கின்றன." என்று கிரௌதர் (Growther) கூறுகின்றார்.

## *பணத்தின் வளர்ச்சி*

பணம் எந்த உருவத்தில் எப்படித்தோன்றியதென்று திட்டவட்டமாகக் கூறமுடியாது விட்டாலும், பணத்தின் வளர்ச்சியில் பின்வரும் **நான்கு நிலைகளை** அவதானிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பண்டப்பணம்
↓
2) உலோகப் பணம்
↓
3) காகிதப் பணம்
↓
4) கடன் பணம்

## 1) *பண்டப் பணம்* **(Commodity Money)**

"ஏதாவதொரு பண்டம் பணமாகப் பயன்படுத்தப்பட்டால் அது பண்டப்பணமாகும்" முதலில் பல்வேறு வகையான பண்டங்கள் பணமாகப் பயன்படுத்தப்பட்டன

❋ வேட்டையாடி வாழ்ந்த காலத்தில் **விலங்கின் தோல்களும்**
❋ ஆடு, மாடு மேய்த்து வாழ்ந்த காலத்தில் **ஆடு, மாடுகளும்**
❋ வேளாண்மை செய்து வாழ்ந்த காலத்தில் **தானியங்களும்,**
❋ கடற்கரையில் வாழ்ந்த மக்களால் **சிப்பிகளும் முத்துக்களும்**
❋ ஆபிரிக்காவில் வாழ்ந்த மக்களால் **யானைத்தந்தங்களும்,**
❋ பசுபிக் தீவுகளில் வாழ்ந்த மக்களால் **சிலவகைக் கற்களும்,**
❋ ஐஸ்லாந்தில் வாழ்ந்த மக்களால் **கருவாடுகளும்.**
❋ சில சந்தர்ப்பங்களில் **எலும்புத்துண்டுகளும்**
❋ சிலசந்தர்ப்பங்களில் **அடிமைகளும்** (Slaves) கூட பணமாகப் பயன்படுத்தப் பட்டன.

இவை,
A) அளவிலும் தன்மையிலும் வேறுபட்டதாலும்,
B) காலத்தால் மாற்றத்திற்குட்பட்டதாலும்,
C) அழியக்கூடியவையாக இருந்ததாலும்,
D) பகுக்க இயலாமையாலும்
E) சுமக்க முடியாமையாலும்

நடைமுறையில் பல சிக்கல்கள் எழுந்தன. இவை உலோகத்தைப் பணமாகப் பயன்படுத்தத் தூண்டின.

## 2) *உலோகப் பணம்* **(Metallic Money)**

"**ஏதாவது உலோகத்தாலான பணம்** உலோகப்பணமாகும்" பொருளாதாரத் தொடர்புகள் விரிவடைந்த நிலையில் **தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு** போன்ற உலோகங்கள் பணமாகப் பயன்படுத்தப்பட்டன.

- நாணயங்களின் அளவு, உருவம், தரம், நிறை, ஆகியவற்றை முறைப்படுத்தி **அரசு தனது முத்திரையுடன்** வெளியிடத் தொடங்கிய பிறகு உலோகப் பணம் சிறப்பான இடத்தைப் பெற்றது. உலோகப் பணத்தில் பின்வரும் (பரிமாற்றூடகத்தின்) **சிறப்பான தன்மைகள்** காணப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) சுமக்கப்படும் தன்மை (Portability)
ஆ) பிரிபடக் கூடிய தன்மை (Divisibility)
இ) அருமைத் தன்மை (Scarcity)
ஈ) ஒருமித்த தன்மை (Uniformity)
உ) நெடுவாழ்வுத் தன்மை (Durability)

எனினும் பின்வரும் **தீமைகளும்** காணப்பட்டன.

A) எளிதாகத் திருடிச்செல்ல வாய்ப்பளித்தது
B) இடத்திற்கிடம் நகர்த்துவது கடினமாயிருந்தது

இவை கடதாசியைப் பணமாகப் பயன்படுத்தத் தூண்டின.

## 3) *காகித (கடதாசி)ப்பணம்* ***(Paper Money)***

"**காகிதத்தாலான பணம்** காகிதப்பணமாகும்"

உலோகப்பணத்தில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக உலோகப்பணத்திற்குப் பதிலாக புகழ் பூத்த செல்வந்தர்களின் முத்திரைக் காகிதங்களைக் கொண்டு செல்லும் பழக்கம் இதுவே பின்னர் அரசு காகிதப்பணத்தை வெளியிடுவதற்கு முன்னோடியாக அமைந்தது. முதன்முதலில் **கி.பி.807 இல் சீனாவில்** காகிதப் பணம் புழக்கத்திற்கு வந்தது. தற்போது அரசுக்குப் பதில் மத்தியவங்கிகளே பணத்தை வெளியிடுகின்றன.

- இப்பொழுது உலகெங்கிலும் உலோகப் பணத்தை விட காகிதப்பணமானது பலமடங்கு **அதிகளவில்** பயன்படுத்தப்படுகிறது. இலங்கையில் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தில் நாணயத்தாளின் பங்கு 96% ஆகும்.
- இவை **அடையாள நாணயங்களாகும்.** அதாவது நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு ஏற்பட்ட செலவிலும் (உள்ளீட்டுப் பெறுமதியிலும்) பார்க்க, அவற்றின் முகப்பெறுமதி உயர்வாகும்.


## 4) *கடன் பணம்* ***(Credit Money)***

வங்கிமுறையின் வளர்ச்சியின் காரணமாக இப்பொழுது **காசோலை** (Cheque) **பயணிகள் காசோலை** (Travellers Cheque), **வங்கி வரைபு** (Bank Note) **கடன் அட்டை** (Credit Card) **மாற்றுண்டியல்** (Bill of Exchange) போன்றவை பணமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவையே கடன்பணமாகும். இவை இன்று நாணயங்களைவிடப் பரந்தளவில் பணமாகப் பயன்படுத்தப் படுகின்றன.

பணத்தின் வளர்ச்சி பின்வரும் ***மூன்று படி நிலைகளாகவும்*** விளக்கப்படுகிறது.

1) பண்டப் பணம்
↓
2) பிரதிநிதித்துவ நியமப் பணம்
↓
3) அடையாளப் பணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. பண்டப்பணம் (Commodity Money)

(ஏற்கனவே விளக்கப்பட்டது)

பண்டப்பணமானது பொதுவாக உள்ளீட்டுப் பெறுமதி (Intrinsic Value) உடையவை.

## 2. பிரதிநிதித்துவ நியமப் பணம் (Reprsentative)

தங்கம், வெள்ளி போன்றன களவாடப்படக் கூடியவை, களஞ்சியப்படுத்தி பாதுகாப்பது கடினமானது. எனவே விலைமதிப்புள்ள உலோகங்களை **நகைத்தொழிலாளரிடம்** பாதுகாப்பிற்காக வைப்பிலிடும் வழக்கம் ஏற்பட்டது. அதற்காக **தங்கப்பற்றுச் சீட்டு** வழங்கப்படும். இந்தமுறை வங்கி முறையாக மாறி **வங்கிவரைபு** (Bank note) அல்லது **கடதாசிப்பணம்** (Paper Money) என்ற நிலைக்கு மாறியது.

❋ இத்தகைய தாள்கள் கொடுக்கல் வாங்கல் ஊடகமாக **ஏற்றுக் கொள்ளப்படக் காரணம்**, தேவைப்படும் போது தங்கமாக மாற்றவும் முடியும். இதனால் இவை உள்ளீட்டுப் பெறுமதி கொண்டவையாகவும், பண்ட உடமையுரிமையைப் பிரதிநிதித்துவப்படுத்துபவையாகவும் விளங்குகின்றன.

- **தங்க நாணயத்திட்டத்தின் கீழ்** தங்கத்தை ஒதுக்காக வைத்து அதன் பெறுமதி கொண்ட நாணயம் வெளியிடப்பட்டது. அது பிரதிநிதித்துவ பணம் எனப்படும். இவை (தங்கமாக) "மாற்றத்தகு பணம்" ஆகும்.

## 3. அடையாளப்பணம் (Token Money)

"உருவாக்குவதற்குப் பயன்படுத்திய **உள்ளீட்டுப் பெறுமதி** (intrinsic Value) யிலும் பார்க்க அதன் **முகப்பெறுமதி** (Face Value) கூடுதலாக காணப்படுவது அடையாளப்பணமாகும்."

> உள்ளீட்டுப் பெறுமதி < முகப்பெறுமதி

❋ நவீன பணத்தின் முக்கிய வடிவங்களாக அமையும்,

- வங்கி வைப்புக்களும் (Bank Deposits)
- நாணயங்களும் (Currency)

தற்போது அடையாளப் பணமாகவே விளங்குகின்றன.

❋ **வங்கி வைப்புக்கள்** பெறுமானத்திரட்டாக உள்ள போதும் காசோலை வரைவதன் மூலம் கொடுக்கல் வாங்கல் ஊடகமாகப் பயன்படுத்தலாம். வங்கிகள் கடன் வழங்குவதன் மூலம் வைப்புப்பணத்தை உருவாக்குகின்றன. இவை அடையாளப் பணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ மத்திய வங்கி வெளியிடும் தாள் உலோக **நாணயங்களும்** (Cash /Currency) தற்போது **தூய அடையாளப் பணங்களாக** விளங்குகின்றன. அரச கட்டளையைத் தாங்கியிருப்பதால் பணமாக ஏற்றுக் கொள்ளப்படுவதால் நாணயங்கள் **கட்டளைப்பணம்** (Fiat Money) ஆகும். அதாவது இவை சட்டத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட காரணத்தினால் ஏற்றுக் கொள்ளப் படுபவையாகும். ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் இருக்கும் அனைவரும் கொடுக்கல் வாங்கலில் சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய சாதனமுமாகும். எனவே இது **சட்டநியமம்** (Legal Tender) எனப்படும்.

உதாரணம் : நடைமுறையில் புழக்கத்திலுள்ள - தாள் நாணயங்கள்
- குற்றி நாணயங்கள்

# III

# பணத்தின் வரைவிலக்கணம்
# Definition of Money

நாம் அனைவரும் அறிந்த, பயன்படுத்துகின்ற பணத்திற்கு எல்லோரும் ஏற்றுக் கொள்கின்ற ஒரு வரைவிலக்கணம் இதுவரை உருவாகவில்லை. ஏனெனில் பணத்தின் எல்லா இயல்புகளையும் உள்ளடக்கி ஓர் வரைவிலக்கணம் வகுப்பது ஓர் எளிய செயலன்று. ஆனால் ஒவ்வொரு பொருளியல் அறிஞரும் தம் கண்ணோட்டத்தின் படி சில வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர்.

❋ **கொடுக்கல் வாங்கல்களுக்காக பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் சாதனம்** பணம் ஆகும்" என்பது பரவலாகப் பயன்படுத்தப்படும் வரைவிலக்கணமாகும்.

❋ இதே போன்று **கிரௌதர்** (Growther)
"எப்பொருளாயினும் அது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பலவகைப் பொருட்களையும் சேவைகளையும் வாங்கப் பயன்படுமானால் அது பணம் எனப்படும்" என்கிறார்.

❋ மேற்கூறப்பட்ட வரைவிலக்கணங்கள் இரண்டும் பணமானது பரிமாற்று ஊடகம் என்ற தொழிற்பாட்டினை மட்டுமே மேற்கொள்கின்றது என்ற கருத்தினைத் தருகின்றது. ஆனால் பணமானது பல்வேறுபட்ட தொழிற்பாடுகளை இன்றைய பொருளாதாரத்தில் மேற்கொள்கின்றது. எனவேதான் வாக்கர் (Walker) பணத்தின் பணிகளைக் கருத்தில் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் என்பது பணம் எதைச் செய்கின்றதோ அது தான் (Money is what money does) என்று கூறுகின்றார். இதன்படி "பரிமாற்று ஊடகமாகவும், கணக்கீட்டு அலகாகவும், பெறுமானத்திரட்டாகவும், பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமமாகவும் பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் படும் சாதனம் பணம் ஆகும்"

# IV

# பணத்தின் (பரிமாற்று ஊடகத்தின்) பண்புகள் (Characteristics of Money)

யாதேனும் ஒரு பொருள் பரிமாற்று ஊடகமாகச் சிறந்தமுறையில் தொழிற்பட வேண்டுமாயின் அது பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1. பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுதல் (Acceptability)
   - இது பணம் கட்டாயம் கொண்டிருக்க வேண்டிய **அடிப்படைப் பண்பாகும்.**

2. எளிதாக கொண்டு செல்லமுடிதல் (Portability)

3. சிறிய அலகுகளாகப் பிரிக்கக்கூடியதாக இருத்தல் (Divisibility)
   - பெரிய பெறுமதியையோ, சிறிய பெறுமதியையோ செலுத்தக்கூடியதாக கூடிய, குறைந்த பெறுமதியுடைய பல்வேறுபட்ட நாணய அலகுகளாக இருத்தல்.

4. ஓரளவு அருமையானதாக இருத்தல் (Scarcity)
   - பணமாகப் பயன்படுத்தப்படும் பொருள் ஏராளமாக இருந்தால் பணத்தின் பெறுமதி குறைவடையும். அதேபோல அப்பொருள் மிகவும் அருமையான பொருளாகவும் இருக்கக்கூடாது. அவ்வாறிருந்தால் கொடுக்கல் வாங்கலில் சிரமங்கள் தோன்றும்.

5. போலிகள் இல்லாதிருத்தல் (Counterfeit)
   - கள்ளப்பணம் உருவாகாதவாறு சில விசேட தன்மைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. இலகுவாக எல்லோராலும் அடையாளம் காணக்கூடியதாக இருத்தல் (Cognisability)
   - ஒவ்வொரு நாணத்தாளும், உலோகக் குற்றியும் வேறு பெறுமதிகொண்ட ஏனைய நாணயத்தாள், நாணயக்குற்றிகளிலிருந்து இலகுவாக வேறுபடுத்தி அறியக்கூடியதாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஒரே மதிப்புள்ள எல்லா நாணயங்களும் ஒரே தன்மை கொண்டிருத்தல் (Uniformity / Homogenity)

8. நெடுவாழ்வுத் தன்மையுடையதாக இருத்தல் (Durability)

- தாள் நாணயங்களும், உலோக நாணயங்களும் கைக்குக் கை மாறிச் செல்லும் போது தாக்குப் பிடிக்கக்கூடிய விதமாக நீண்டகாலம் பாவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

குறிப்பு: **இலங்கையிலுள்ள** நாணயங்களில், 6வது, 7வது, 8வது பண்புகள் ஓரளவு இல்லாதிருப்பதை விளங்கிக் கொள்க.

# V

# பணத்தின் தொழிற்பாடுகள் (Functions of Money)

பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட **ஒவ்வொரு குறைபாட்டையும் நீக்கும் வகையில்** பணத்தின் தொழிற்பாடுகள் அமைந்துள்ளன. இன்றைய பொருளாதாரத்தில் பணம் பின்வரும் **நான்கு பிரதான தொழிற்பாடுகளை** ஆற்றுகின்றது.

1. பரிமாற்றூடகமாகச் / செலாவணி ஊடகமாகச் செயற்படல்
2. கணக்கீட்டு அலகாகச் / பெறுமான அளவையாகச் செயற்படல்
3. பெறுமானத் திரட்டாகச் / பெறுமானக் களஞ்சியமாகச் செயற்படல்
4. பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமமாகச் செயற்படல்

குறிப்பு :

❋ இவற்றில் முதல் இரண்டும் **"முதன்மைத் தொழிற்பாடுகள்"** எனவும், அவற்றின் அடிப்படையில் தோன்றியவையாதலால் இறுதியிரண்டும் **"வருவிக்கப்பெற்ற [வழி வந்த] தொழிற்பாடுகள்"** எனவும் அழைக்கப்படுகின்றன.

❋ **பணம்** என்பதனை **வரைவிலக்கணப்படுத்துவதற்கு** அவசியமான இரு **முக்கிய தொழிற்பாடுகள் 1வதும், 3வதும்** ஆகும். (கிட்டிய பணம், பணப்பதிலீடு என்பவை இந்த இருதொழிற்பாடுகளையும் ஒருங்கே கொண்டவையல்ல.

- விளக்கம் பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ இவற்றில் முதல் இரண்டும் **பரிமாற்றுத் தொழிற்பாடுகள்** (Exchange Functions) என்றும், இறுதி இரண்டும் **சொத்துத் தொழிற்பாடுகள்** (Asset Functions) என்றும் பாகுபடுத்தப்படுகின்றன.

## *1. ஒரு பரிமாற்று ஊடகம் ( A Medium of Exchange)*

பணத்தினது அடிப்படையான / பிரதான தொழிற்பாடு இதுவாகும். "பண்டமாற்று முறையில் காணப்பட்ட பரிமாற்றத்தின் சிக்கல்களை நீக்கி, அதனை இலகுபடுத்தத்தக்க வகையில் **எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பொதுவான கொடுக்கல் வாங்கல் ஊடகமாகப் பணம் பயன்படுத்தலே** பணத்தின் பரிமாற்று ஊடகத் தொழிற்பாடாகும்"

பண்டங்கள் நேரடியாக ஒன்றுக்கொன்று பரிமாற்றம் செய்வதற்குப் பதிலாகப் **பணத்தை ஊடகமாக** வைத்துப் பரிமாற்றப்படுகிறது.

பண்டம் 1 ⟶ பணம் ⟶ பண்டம் 2

அதாவது ஒரு பண்டத்தை விற்றுப் பணத்தைப் பெற்று அதன்மூலம் வேறு ஒரு பண்டம் கொள்வனவு செய்யப்படுகிறது.

### *இதன் முக்கியத்துவம் / அனுகூலங்கள்*

A) பணம் பரிமாற்றூடகமாகச் செயற்படுவதினால் **பண்டமாற்று பொருளாதாரத்தில்** நிலவிய பின்வரும் **குறைபாடுகள் நீக்கப்பட்டன.**

அ) இரட்டைத்தேவைப் பொருத்தமின்மை.

- பணம் பரிமாற்றூடகமாக செயற்படுவதனால் **விற்பனவும், கொள்வனவும் வேறாக்கப்பட்டது.** எனவே பரிமாற்றம் இடம் பெறுவதற்கு "இரட்டைத் தேவைப் பொருத்தம்" (Double Coincidence of wants) என்ற நிபந்தனை அவசியமற்றதாகியது.

ஆ) பிரிபடாத்தன்மை

- பண்டமாற்றில் பொருட்கள் பிரிபடாத்தன்மையைக் கொண்டிருந்ததால் பரிமாற்றம் இடம்பெறுவது கடினமாயிருந்தது. ஆனால் பணமானது **சிறு சிறு அலகுகளாகப் பிரிக்கக்கூடிய தன்மையைக்** கொண்டிருப்பதனால் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது.

இ) எடுத்துச் செல்வது கடினமாக அமைந்தமை

- பணத்தை **இலகுவாக எடுத்துச்** செல்ல முடிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) பரிமாற்றத்திற்கு நீண்டகாலம் எடுத்தமை

- பணம் பரிமாற்றூடகமாகச் செயற்பட்டதனால் மேற்கூறிய குறைபாடுகள். (அ, ஆ, இ) நீக்கப்பட்டதனால் **விரைவாகப் பரிமாற்றம்** இடம்பெற்றது.
- மக்கள் பண்டமாற்று செய்வதில் அதிக நேரத்தைச் செலவிட வேண்டிய தேவையிருக்காததால் **அதிகநேரம் உற்பத்தியில்** ஈடுபட முடிந்தது. உற்பத்தி அதிகரித்தது.

B) இன்றைய நவீன பொருளாதாரத்தின் சிறப்பம்சங்களான **தொழிற்பிரிப்பு, சிறப்புத்தேர்ச்சி, பேரளவு உற்பத்தி, சர்வதேச வர்த்தகம், நாணயமாற்று** என்பன பணத்தின் பரிமாற்றூடகத் தொழிற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே உருவாகியவையாகும். உலக நாடுகளில் வெவ்வேறு வகையான நாணயங்களும், வேறுபட்ட பெறுமதிகளும் காணப்படுகின்றபோதும் **நாணயமாற்றுவீதத்தின் அடிப்படையில்** அவற்றிடையே ஒரு பொதுப் பெறுமதியுண்டு. இப்பெறுமதியின் அடிப்படையிலேயே நாடுகளுக்கிடையிலான பொருட்கள் சேவைகளது பரிமாற்றம் இடம்பெறுகிறது.

- இவை காரணமாக **உற்பத்தித்திறன் அதிகரித்தது. விரைவான பொருளாதார வளர்ச்சியும்** ஏற்பட்டது.
- உண்மையில் பணம் உருவாக்கப்படாதிருந்தால் ஒவ்வொரு பொருளாதாரமும் தன்னிறைவுப்பொருளாதாரமாகவே இயங்கிக் கொண்டிருக்கும். இத்தகைய பொருளாதாரத்தில் தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி, சர்வதேச வர்த்தகம் நாணயமாற்று என்பவற்றிற்கு இடம் இருந்திருக்காது. பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டிருக்காது.

C) பணத்தின் மாற்றூடகத் தொழிற்பாட்டின் வழியாகவே,

❁ பெறுமானத்திரட்டு
❁ பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமம்

ஆகிய இரு தொழிற்பாடுகளும் உருவாகின.

★★ **பணவீக்க காலத்தில்** பணத்தின் **சுற்றோட்ட வேகமானது** அதிகரிக்கும். ஒரு மாற்றூடகமாகப் பணத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை குறையும்.

2. ***ஒரு கணக்கீட்டு அலகு (A Unit of Account)***
***ஒரு பொதுவான பெறுமான அளவை (A Common measure of value)***
***ஒரு பெறுமான நியமம் (A standard of value)***

"பணம் எல்லாப் **பண்டங்களின் பெறுமதியையும் அளக்கும் கருவியாகப்** பயன்படுத்தலே பணத்தின் கணக்கீட்டு அலகுத் தொழிற்பாடாகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் பண்டங்களில் பெறுமதி பண்டங்களின் அடிப்படையிலேயே அளவிடப்பட்டது. இந்நிலையில் ஒவ்வொரு பண்டத்திற்கும் ஏராளமான பரிமாற்றுப் பெறுமதிகள் காணப்பட்டது. ஆனால் பணத்தின் தோற்றத்தினைத் தொடர்ந்து பொருட் **பெறுமதிகள் ஒருமுகப்படுத்தப் பட்டன.** இன்று பொருட்களின் பெறுமதி பணத்தின் அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றது. இவ்வகையில் கணிப்பிடப்பட்ட பெறுமதியே **விலை** எனப்படும். அதாவது "ஒரு பொருளின் பணவடிவிலான பெறுமதியே விலையாகும்." இவ்விலையினை அடிப்படையாகக் கொண்டே இன்று கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறுகின்றன. "நீளத்தை அளக்க மீற்றர்கோல் இருப்பதைப் போல் இன்று பொருளின் மதிப்பை அளந்து கூறப் பணம் இருக்கிறது"

## *இதன் முக்கியத்துவம்*

பொதுவான பெறுமான அளவையாகப் பணம் தொழிற்படுவதனால் பொருளாதாரத்திற்குப் பின்வரும் அனுகூலங்கள் காணப்படுகின்றன :

A) பண்டங்களுக்குத் **தனிவிலை** நிர்ணயிக்கப்படுகிறது. எனவே **பெறுமானங்களை** ஒப்பிடுவது எளிதாகின்றது.

B) **கணக்குவைத்தல்** எளிதாகின்றது. ஒரு வியாபார ஸ்தாபனத்தின் கொள்வனவு, விற்பனை, இலாபநட்டங்களைக் கணிப்பிடமுடிகின்றது. இதனால்,
- கணக்கியல் தோற்றம் பெற்றது.
- வர்த்தகம் வளர முடிந்தது.

C) **விலைப்பொறிமுறைப் பொருளாதாரம்** தோற்றம் பெற்றது.

D) **விலை மட்டங்களையும்,** அவற்றின் மாற்றங்களையும் அளவிடமுடிந்தது.

E) பொருளாதாரத்தின் **மொத்தக் கேள்வியைக்** கணிக்க முடிந்தது.

F) நாட்டின் **தேசிய வருமானம், சென்மதி நிலுவை, வரவுசெலவுத்திட்டம்** போன்றவற்றைத் தயாரிக்கவும், திட்டமிட்டு நாட்டை முன்னேற்றவும் முடிந்தது.

❁ **பணவீக்க காலத்தில்** பணத்தின் பெறுமதி குறைவதால் பொதுவான பெறுமான அளவையாக மக்கள் அதனை ஏற்றுக் கொள்வது பிரச்சனைக்குரியதாகும்.

## 3. *ஒரு பெறுமானத்திரட்டு* ***( A Store of value)***
## *ஒரு செல்வத்தின் களஞ்சியம்* ***(Store of Wealth)***

"**எதிர்கால** கொடுக்கல் வாங்கல், பாதுகாப்பு, முதலீட்டு, நோக்கங்களுக்காக **இன்று** மக்கள் தமது கொள்வனவு சக்தியினை (Purchasing Power) பணத்தின் வடிவத்தில் திரட்டி வைத்திருத்தலே பணத்தின் பெறுமானத் திரட்டுத் தொழிற்பாடாகும்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தின் அறிமுகத்தினைத் தொடர்ந்து **விற்பனவு, கொள்வனவு என்பன பிரிந்து** வைக்கப்பட்டன. எனவே இவை இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் மக்கள் தமது கொள்வனவு சக்தியினை எதிர்காலத்தேவை கருதி பணத்தின் வடிவத்தில் திரட்டி வைத்திருக்க முற்படுகின்றனர். இதனையே பணத்தின் பெறுமானத் திரட்டுத் தொழிற்பாடு குறிக்கிறது.

## *இதன் முக்கியத்துவம்*

மக்கள் தமது செல்வத்தினைப் பணம் தவிர்ந்த வேறு வடிவங்களிலும் வைத்திருக்க முடியும்.

உதாரணம் :

- காணிகட்டடம் போன்ற சொத்துக்கள்
- சேமிப்பு நிலையான வைப்புக்கள்
- பங்கு மூலதனம்

மேற்கூறப்பட்ட **நாணயமற்ற சொத்துக்களின் வடிவத்தில்** மக்கள் தமது செல்வத்தினை வைத்திருக்கும் போது முறையே வாடகை, **வட்டி,** பங்கிலாபம் போன்ற **வருமானங்களை உழைக்க முடியும்.**

- ஆனால் பணவடிவில் வைத்திருந்தால் எவ்வித வருமானத்தையும் உழைக்க முடியாது. பணத்தை வைத்திருப்பதற்கான **அமயச் செலவு** நாணயமற்ற சொத்துக்களின் வடிவில் வைத்திருப்பதன் மூலம் பெற்றிருக்கக் கூடிய **வாடகை, வட்டி பங்கிலாபம்** போன்ற **வருமானங்களை இழப்பதாகும்.**

- பணத்தை வைத்திருப்பதனால் வருமானம் ஏதும் கிடைக்காத போதும், மக்கள் தமது செல்வத்தின் ஒரு பகுதியைக் காசு நிலுவையாகத் (பணமாகத்) பணமாகத் திரட்டி வைத்திருப்பதற்கு பின்வருவன **காரணங்களாகும்.**

A) பணம் **பூரண நிறைவான [100%] திரவத்தன்மை** (Perfect liquidity) கொண்டிருத்தல்

- பணத்தினை மற்றைய சொத்துக்களிலிருந்து வேறுபடுத்தும் **பிரதான இயல்பு/அம்சம்** இதுவாகும்.

  "திரவத்தன்மை என்பது **சிரமமின்றியும்** (காலதாமதம் இன்றியும்) **முதல் இழப்பின்றியும் பணவடிவில் மாற்றக்கூடிய சொத்தின் தன்மையைக்** குறிக்கின்றது"

- திரவத்தன்மையைக் கொண்டிருப்பதாலும், எந்த ஒரு பொருளையும் **கொள்வனவு செய்ய உதவுவதாலும், கொடுக்கல் வாங்கல் நோக்கம்** (Transaction Motive) கருதி மக்கள் செல்வத்தின் ஒரு பகுதியைப் பணமாக வைத்திருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.) **பாதுகாப்பு நோக்கம்** (Precautionary Motive) கருதியும்

- அதாவது எதிர்பாராது ஏற்படும் செலவுகளுக்காகவும் (நோய், விபத்து, விருந்தினர் வருகை) மக்கள் பணத்தை வைத்திருப்பர்.

C) **ஊக நோக்கம்** (Speculative Motive) கருதியும்,

- அதாவது அதிக வருவாயுள்ளவற்றில் முலீடுசெய்யும் நோக்கத்துடன் மக்கள் பணத்தை வைத்திருப்பர்.

D) பணநிலுவைகளை **வைத்திருக்கும் வசதி, எடுத்துச்செல்லும் வசதி** காணப்படல்

E) **நாணயமற்ற சொத்துக்களின் சந்தைப் பெறுமதி** தொடர்பான **நிட்சயமற்ற தன்மை.**

இக்காரணிகள் பணத்தின் பெறுமானத்திரட்டுத் தொழிற்பாட்டை **ஊக்குவிக்கின்றன.** பணம் பெறுமானத்திரட்டுக் கருவியாகத் தொழிற்பட்டதால் பொருளாதாரத்தில் பின்வரும் **அனுகூலங்கள்** ஏற்பட்டன.

அ) சேமிப்பு அதிகரித்தது
↓
ஆ) முதலாக்கம் அதிகரித்தது
↓
இ) உற்பத்தி அதிகரித்தது
↓
ஈ) பொருளாதார வளர்ச்சி விரைவுபட்டது

### *வரையறைகள்*

பெறுமானத் திரட்டுத் தொழிற்பாட்டை நிறைவேற்றுவதில் பணத்தின் வரையறைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

A) **பணவீக்கம்** - நாட்டில் உயர்ந்த பணவீக்கம் (பொதுவிலைமட்ட உயர்வு) நிலவும் போது பணத்தினது கொள்வனவு ஆற்றல் (பெறுமதி) தீவிரமாக வீழ்ச்சியடைவதால் மக்கள் பணத்தினைப் பெறுமானத்திரட்டாக கருதாது விடுவர். எனவே பணவீக்க காலத்தில் பெறுமானத்திரட்டுத் தொழிற்பாடு குறைந்து காணப்படும்.

B) நாட்டில் **யுத்தநிலைமை** நீடிக்கும் போது பொருட்பற்றாக்குறை காணப்படுவதால் மக்கள் பணத்தை பெறுமானத் திரட்டாக வைக்க விரும்பமாட்டார்கள். பொருளாகவே வைக்க விரும்புவார்கள்.

C) பணத்தின் **திரவத்தன்மை முற்றாக இழக்கும் சூழ்நிலையிலும்** - அதாவது பணம் முற்றாகப் பெறுமதி அற்றதாகிவிடும் நிலையிலும் பெறுமானத்திரட்டாக வைத்திருக்க விரும்பமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் : - ஈராக் - குவைத் யுத்தத்தின் போது குவைத் "தினார்" நாணயத்தின் பெறுமதி முற்றாக இழந்தது (Money Freeze)

D) பணச் சந்தையில் **நாணயமல்லாத சொத்துக்களை காசாக மாற்றுவது** இலகுவானால் பணத்தை வைத்திருப்பது விரும்பப்பட மாட்டாது.

## 4. ஒரு பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமம். (A Standard of Deferred Payment)

"ஒரு காலத்தில் பெற்றதைப் பின்னொரு காலத்தில் மீளளிப்பதற்கு (கடன் நடவடிக்கைகளிற்கு) நம்பகமான சாதனமாகப் பணம் விளங்குதலே பணத்தின் பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமத் தொழிற்பாடாகும்." இத்தொழிற்பாட்டினைப் பணம் இருவழிகளில் மேற்கொள்கிறது:

அ) இன்று கொள்வனவு செய்த **பொருட்கள், சேவைகளின்** பெறுமதியை, எதிர்காலத் திகதி ஒன்றில், உறுதியான முறையில் செலுத்துவதற்கு ஒரு கருவியாகப் பணம் பயன்படுகிறது.

ஆ) **பணத்தையே** கடனாகப் பெற்று எதிர்காலத்தில் **வட்டியோடு** திருப்பிச் செலுத்துவதற்கு ஓர் ஊடகமாகப் பணம் பயன்படுகின்றது.

- பொதுவான பெறுமான அளவையாகவும் பணம் தொழிற்படுவதால் வட்டியைக் கணிப்பிட முடிகிறது.

### இதன் முக்கியத்துவம்

பணம் ஒரு பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமமாகத் தொழிற்படுவதனால் பொருளாதாரத்தில் பின்வரும் **அனுகூலங்கள்** ஏற்படுகின்றன.

A) இன்றைய உற்பத்திப் பொருட்களை எதிர்காலப் பொருட்களுக்கு மாற்றிக் கொள்ளமுடிகிறது.

B) வர்த்தகம் வளர முடிகிறது

C) உள்நாட்டிலும், வெளிநாடுகளுடனும் கடன் நடவடிக்கைகள், ஒப்பந்தங்கள் இடம் பெற முடிகிறது.

D) வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், முதலீட்டு நிறுவனங்கள் வளர முடிகிறது.
- பணச்சந்தை வளர்ச்சியடைய முடிகிறது.

E) இவற்றின் வழி பொருளாதாரம் விரைவான வளர்ச்சியடைய முடிகிறது.

இத்தொழிற்பாட்டினை சிறப்பாகச் செய்வதற்குப் **பணத்தின் பெறுமதி உறுதியாக** இருத்தல் வேண்டும். ஒரு காலத்தில் பெற்றதைப் பின்னொரு காலத்தில் திருப்பிக் கொடுக்கும் போது பெற்றவனுக்கோ, கொடுத்தவனுக்கோ இழப்பு ஏதும் ஏற்படுதல் கூடாது. பணத்தின் பெறுமதி உறுதியாக இருப்பின் அவ்வாறு பேணமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ பணவீக்க / பணச்சுருக்கக் காலத்தில் பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமமாக பணம் நம்பகத்தன்மையை இழக்கும்.

- பணவீக்கம் கடன் கொடுத்தவனுக்கு பாதகமாகவும், கடன் பெற்றவனுக்குச் சாதகமாகவும் அமைவதால் கடன் நடவடிக்கைகள் பாதிக்கப்படும்.
- *பணச்சுருக்கம்* கடன் கொடுத்தவனுக்கு சாதகமாகவும், கடன் பெற்றவருக்கு பாதகமாகவும் அமைவதால் கடன் நடவடிக்கைகள் பாதிக்கப்படும்.

❋ மேற்கூறப்பட்ட தொழிற்பாடுகளை ஆற்றும் **பணம் என்பது இல்லையயானால்** இன்றைய பொருளாதாரம் என்ன ஆகும் என்பதைச் சிறிது கற்பனை செய்து பார்த்தால் அதனுடைய இன்றியமையாத்தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

❋ பணநிரம்பலானது ஒரு பொருளாதாரத்தின் மொத்தக்கேள்வி, விலைமட்டம் என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற நெறிப்படுத்துகின்ற, கட்டுப் படுத்துகின்ற ஆற்றல் மிக்க சக்தியாக விளங்குகின்றது. எனவே இன்றைய பொருளாதாரத்தின் சீரான முன்னேற்றத்திற்கு பணக்கொள்கை சிறப்பானதாக அமைவது அவசியமாகிறது.

*குறிப்பு:* ❁ "இன்றைய பொருளாதாரத்தில் *பணத்தின் முக்கியத்துவத்தினை* விளக்குக" என்ற வினாவிற்கு 4 தொழிற்பாட்டிலும் கூறப்பட்ட முக்கியத்துவங்களை தனித்தனி சுருக்கமாகக் குறிப்பிட்டு, இறுதியாக மேற்குறிப்பிட்ட முக்கியத்துவத்தையும் குறிப்பிடுக.

❁ "பணத்தின் தொழிற்பாடுகளைப் *பணவீக்கம்* எவ்வாறு பாதிக்கும்" என்ற வினாவிற்கும் 4 தொழிற்பாட்டிலும் கூறப்பட்ட பணவீக்கப் பாதிப்புக்களைக் குறிப்பிடுக.

# VI

# பணத்தின் வகைகள்
# *(Kinds of Money)*

நவீன பொருளாதாரத்தில் பயன்படுத்தப்படும் பணமானது அதன் **தன்மையின் அடிப்படையில்** பல்வேறு வகையாக பாகுபடுத்தப்படுகின்றது. இவற்றிடையே நுணுக்கமான வேறுபாடுகள் உள்ளன. அத்தகைய வேறுபாடுகளை அறிந்து கொள்ளும் வகையில் பணத்தின் பல்வேறு வகைகளும் இங்கு ஒவ்வொன்றாக விளக்கப்படுகிறது.

❋ பணத்தின் வகைகளும்- அவை பற்றி விளக்கப்படவுள்ள உபதலைப்புக்களும் வருமாறு

1. சட்டப்பணம்/ புழக்கப்பணம்/ உயர்வலுப்பணம்/ நாணயங்கள் (சட்ட இறைமை) (நாணயத்தாள்)

★★ சட்டப்பணம் ஏற்கப்படாத சந்தர்ப்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. வங்கிப் பணம் / வைப்புப் பணம் / கேள்வி வைப்புக்கள் / நடைமுறைக் கணக்கு / காசோலைகள்

★★ சட்டப்பணம் - வங்கிப் பணம் வேறுபாடு

★★ பணம் - நாணயம் வேறுபாடு

03. போலிப்பணம் / குவாசிப்பணம்

★★ சேமிப்பு, தவணை வைப்பு போலிப்பணமாக கருதக் காரணங்கள்

★★ முக்கியத்துவம் / கணிப்பிடுவதன் அவசியம்.

04. கிட்டிய பணம் / அண்மிய பணம்

★★ முக்கியத்துவம் / கணிப்பிடுவதன் அவசியம்.

★★ பணம் - அண்மிய பணம் வேறுபாடு

05. குறுகிய பணம் / ஒடுங்கிய பணம் / பணம்

06. விரிந்த பணம் / அகன்ற பணம் / பரந்த பணம்

07. பிரதிப்பணம் / பணப்பதிலீடுகள் / பணப்பிரதியீடுகள்

★★ வேறுபாடு:- பணம் - கிட்டிய பணம் - பணப் பதிலீடுகள்

08. நியமப்பணம் / முழுப்பெறுமதி நாணயம்

09. அடையாளப் பணம் / அடையாள நாணயம்

★★ பெறுமதியற்ற கடதாசிப்பணம் பொருட்கள் சேவைகளின் கொள்வனவிற்கு கையாளப்படுவதற்கான காரணங்கள்

10.கட்டளைப்பணம்

11.உள்நாட்டுப்பணம்

12.வெளிநாட்டுப்பணம் / வெளிநாட்டு நாணயமாற்று

(பின்வரும் பணவகைகள் பணத்தின் வளர்ச்சி பற்றிய பகுதி – 11 இல் விளக்கப்பட்டுள்ளது.)

13. பண்டப்பணம்

14. உலோகப் பணம்

15. கடதாசிப்பணம்

16. கடன் பணம்

17. பிரதிநிதித்துவ நியமப் பணம்

---

1. சட்டப்பணம் / சட்டஇறுபதி (LegalTender) / புழக்கப்பணம் / உயர்வலுப்பணம் (High powered money) / நாணயங்கள் (Currency) / காசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசினால் அங்கீகரிக்கப்பட்டு மத்தியவங்கியினால் வெளியிடப்படும் தாள், *உலோக நாணயங்கள்* சட்டப்பணமாகும்."

- இவை *சட்டத்தினால் அங்கீகாரம்* அளிக்கப்பட்ட காரணத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுபவையாகும். குறிப்பிட்ட நாட்டின் அரசியல் எல்லைக்குள் இருக்கும் அனைவரும் கொடுக்கல் வாங்கலில் சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய சாதனமாகும். இதனை எவரும் மறுக்கமுடியாது. உதாரணம் : இலங்கையில் ரூபா, அமெரிக்காவில் டொலர்.
- இது **பூரண திரவத்தன்மை** (100%) வாய்ந்ததாகும். அதாவது காலதாமதமின்றியும், முதல் நட்டமின்றியும் கொடுக்கல் வாங்கலுக்கு நேரடியாகப் பயன்படுத்தலாம்.
- சட்டப்பணம் பின்வரும் 2 கூறுகளை உள்ளடக்கியது
  அ) தாள் நாணயங்கள்
  ஆ) உலோக (குற்றி) நாணயங்கள்
- குறிப்பிட்ட நாட்டின் *மத்தியவங்கியால்* இவை வெளியிடப்படுகின்றன. மத்தியவங்கி தனது *சொத்துக்களை* அடிப்படையாகக் கொண்டு இவற்றை வெளியிடுகின்றது. மத்திய வங்கியின் சொத்துக்களிற்கும் நாணய வெளியீட்டிற்குமிடையே *நேரான தொடர்புண்டு.*
- இவை *பணநிரம்பலின்* ஒரு பகுதியாக கருதப்படுகிறது.

## ❋ *சட்டப்பணம் ஏற்கப்படாத சந்தர்ப்பங்கள்*

*பணத்தின் சிறப்பியல்புகளை* இழக்கும் போது சட்டப் பணமும் ஏற்கப்படாத நிலை தோன்றும். அத்தகைய சந்தர்ப்பங்களாவன:

A) அரசாங்கம் பணத்திற்கான சட்டரீதியான அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்.
B) இனங் காணமுடியாதவாறு சிதைதல்
C) சுமந்து செல்லும் தன்மையை இழத்தல்

*உதாரணம்:* 1, 2, 5 சதங்கள் 5 ரூபா நடவடிக்கைக்கு மேல் கொடுப்பனவு செய்யமுடியாது. எனவே அவை "வரையறுக்கப்பட்ட சட்டமுறைப் பணம் (Limited legal Tender)" எனப்படும்

(இதேபோல எந்த அளவு கொடுப்பனவுக்கும் பயன்படுவது *"வரையறையற்ற* சட்டமுறைப்பணம் (Unlimited legal Tender)" எனப்படும். இவை ஏற்கப்படும் தன்மைப்படியான சட்டமுறைப்பணத்தின் இருவகைகளாகும்.)

2. வங்கிப் பணம் (Banking Money)
வைப்புப் பணம் (Deposites Money)
கேள்வி வைப்புக்கள் (Demand Deposites)
நடைமுறைக் கணக்கு (Current Account)
காசோலை (Cheque)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வர்த்தக வங்கிகளிலுள்ள *கேள்வி (நடைமுறை) வைப்புக்கள்* வங்கிப் பணமாகும்."

- "வைப்பாளர்களினால் கேட்கப்பட்டவுடன் பெறுமதி இழப்பின்றியும், காலதாமதமின்றியும் உடனடியாக வர்த்தக வங்கிகளினால் மாற்றிக் கொடுக்கப்பட வேண்டிய வைப்புக்களே கேள்வி வைப்புக்களாகும்."

- வர்த்தக வங்கிகளிலுள்ள *கேள்வி வைப்பைப் பணமாக கருதக்காரணம்* சட்டப்பணத்தைப் போல் இதுவும் பூரண திரவத்தன்மை கொண்ட ஒரு சொத்தாக இருப்பதனாலாகும். அதாவது கேள்வி வைப்பிலிருந்து பணத்தை மீளப்பெறுகின்ற போது முதல் நட்டமோ, காலதாமதமோ ஏற்படுவதில்லை. காசோலை வரைவதன் மூலம் உடனடியாகப் பணத்தை மீளப்பெறக்கூடியதாக உள்ளது. எனவே **கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்வதற்கு அவற்றை காசோலையினூடாக மாற்ற முடிவதனால்** கேள்விவைப்பும் *பணத்தின் / பணநிரம்பலின் ஒரு பகுதியாகக்* கொள்ளப்படுகின்றது.

## ★★சட்டப்பணம் – வங்கிப்பணம் என்பவற்றிக்கிடையிலான வேறுபாடுகள்

| சட்டப்பணம் (நாணயங்கள்) | வங்கிப்பணம் (காசோலை) |
|---|---|
| 1. "மத்திய வங்கியினால் வெளியிடப் படும் தாள், உலோக நாணயங்கள் சட்டப்பணமாகும்." | "வர்த்தக வங்கிகளிலுள்ள கேள்வி வைப்புக்கள் வங்கிப் பணமாகும்". |
| 2. 100% திரவத்தன்மையுடையது | அதனைவிட திரவத்தன்மை குறைந்தது. |
| 3. நேரடியாக கொடுக்கல் வாங்க லுக்குப் பயன்படுத்தலாம் | காசேலை வரைவதன் மூலம் பயன் படுத்தலாம். |
| 4. அரச அங்கீகாரமுடையது | அரச அங்கீகாரமற்றது |
| 5. சட்டப்படி எல்லோரும் ஏற்றல் | இருசாராரும் பரஸ்பர நம்பிக்கையுடன் ஏற்றல் |
| 6. அங்கீகரித்த நிறுவனம் அதாவது மத்திய வங்கியால் வெளியிடப்படல் | வர்த்தக வங்கியில் கேள்வி வைப்பினை வைத்துள்ளவரால் வெளியிடப்படல் |
| 7. பாதுகாப்பு குறைந்தது | பாதுகாப்பு கூடியது |

## ★★பணம் - நாணயம் வேறுபாடுகள் :-

A) "*பணத்தினது* தொழிற்பாடுகளை ஆற்றக்கூடிய, பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய *அனைத்துச் சாதனங்களும் பணமாகும்*"
உதாரணம் :- தாள், உலோக நாணயங்கள், காசோலை

- "அரசினால் அங்கீகரிக்கப்பட்டு, மத்திய வங்கியினால் வெளியிடப்படும் *சட்டப்பணமே நாணயங்களாகும்*"
உதாரணம் : தாள், குற்றி நாணயங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B) பணம் ***100%*** ***திரவத்தன்மை***யைக் கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை

- ஆனால் நாணயங்கள் 100% திரவத்தன்மை கொண்டவையாகும்.

C) பணத்திற்கு *அரச அங்கீகாரம்* அவசியமன்று
உதாணம் : காசோலை

- ஆனால் நாணயங்களுக்கு அரச அங்கீகாரம் அவசியமாகும்.

D) பணமாகப் பயன்படும் எல்லாச் சாதனத்தையும் சட்டப்படி எல்லோரும் ஏற்க வேண்டும் என்பதில்லை. பரஸ்பர நம்பிக்கையுடன் ஏற்றால் போதும்.
உதாரணம் : காசோலை

- ஆனால் நாணயங்களைச் சட்டப்படி எல்லோரும் ஏற்கவேண்டும்

E) பணம் *மத்திய வங்கியால் மட்டும்* வெளியிடப்படுவதில்லை.
உதாரணம் : காசோலை

- ஆனால் நாணயங்கள் மத்திய வங்கியால் மட்டுமே வெளியிடப்படும்

## 3. போலிப்பணம் / குவாசிப்பணம் (Quasi Money)

"குறுங்கால முன்னறிவித்தலின் பேரில் மாற்றப்படக் கூடிய, *வர்த்தக வங்கிகளிலுள்ள* தனியார் துறையின் *சேமிப்பு வைப்புக்கள், தவணை* (நிலையான) வைப்புக்கள் என்பனவே போலிப் பணமாகும்".

போலிப்பணம் = சேமிப்புவைப்பு + தவணை வைப்பு

$$QM = SD + TD$$

QM = போலிப்பணம்
SD = சேமிப்பு வைப்பு (Saving Deposites)
TD = தவணை வைப்பு (Term Deposites)

- இவை வருமானம் உழைக்கக் கூடிய, உயர்திரவத்துள்ளை கொண்ட சொத்துக்களாகும். ஆனால் அவை சட்டப்பணம், வங்கிப்பணம் என்பவற்றைப் போல பூரணதிரவத்தையுடையனவல்ல.

★★ *சேமிப்பு, தவணை வைப்புக்களைப் பணமாகக் கருதுவதற்கான காரணங்கள் :*

*1960களின் பிற்பகுதிகளிலிருந்து இலங்கையின் வர்த்தக வங்கித் தொழிலில்* ஏற்பட்ட மாற்றங்களைத் (வெளிநாட்டு வங்கிகளை உள்நாட்டில் திறப்பதற்கு அரசு அனுமதி வழங்கியதன் மூலம் ஏற்பட்ட போட்டியினைத்) தொடர்ந்து 1970களின் இறுதியில் சேமிப்பு வைப்புக்கள், நிலையான வைப்புக்கள் என்பனற்றை *இலகுவில் மாற்றிக் கொள்ள முடிந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ *சேமிப்பு வைப்புக்களைக்* காசோலை மூலம் மாற்ற முடியாததால், இதைநேரடியாகப் பணமாகப் பயன்படுத்த முடியாது. வைப்பிலுள்ள பணத்தினைப் பெற முன்னறிவித்தல் கொடுத்தல், குறிப்பிட்ட காலத்தில் எத்தனை தடவைகள் பெறுதல், ஒரே தடவையில் எவ்வளவு தொகை பெறுதல் என்பன தொடர்பான கட்டுப்பாடுகள் இது வரை காணப்பட்டு வந்தது. ஆனால் *1980களின் ஆரம்பத்தில்* சேமிப்பு வைப்புகளைப் பொறுத்த வரை:

A) இக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன :

- மீளப்பெறும் பத்திரத்தை நிரப்பிக் கொடுப்பதன் மூலம் பணத்தை உடனடியாகப் பெறமுடிந்தது.
- எத்தனை தடவையும் பெறமுடியும்
- எவ்வளவு தொகையும் பெற முடியும்

B) சேமிப்பு வைப்பினை *கேள்வி வைப்பாக மாற்றி* தன்னிச்சையாக பணத்தைப் பெறமுடிந்தது.

C) *தன்னியக்க கூற்றுப் பொறிகள்* (Automated Teller Machines) அறிமுகப்படுத்தப்பட்டமை.

எனவே சேமிப்புவைப்புக்கள் *திரவத்தன்மை வாய்ந்தவையாக இருப்பதால், போலிப்பணமாகவும், விரிந்தபணத்தின் ஒருபகுதியாகவும்* கொள்ளப்படுகிறது.

❋ தவணை / கால வைப்புக்களைப் பெறுத்தவரை காசோலைகளினால் மாற்ற முடியாததுடன், ஒரு குறிப்பிட்ட கால முதிர்ச்சியை உடையவையாகும். இவ்வைப்புக்களைப் பெற முன்னறிவித்தல் கொடுத்தல், முதிர்ச்சிக்கு முன் பெற முடியாமை போன்ற கட்டுப்பாடுகள் காணப்பட்டன. ஆனால் *1980களின் ஆரம்பத்தில்*

A) இக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

- காலமுதிர்வுக்கு முன்பே சேமிப்பு வைப்பாக மாற்றி பணத்தைப் பெற முடிந்தது.
- இவ்வைப்புகளுக்கெதிராக கடன்களையும் இலகுவாகப் பெற முடிந்தது.
- கேள்வி வைப்பில் மேலதிகப்பற்று பெற முடிந்தது
- நாணயத்தாளின் பண்புகொண்ட வைப்புச் சான்றிதழ் அறிமுகப் படுத்தப்பட்டது.

எனவே தவணை வைப்புகளும் *திரவத்தன்மை வாய்தவையாக இருப்பதால், போலிப்பணமாகவும், விரிந்தபணத்தின் ஒரு பகுதியாகவும்* கொள்ளப்படுகிறது.

## ★★ *போலிப்பணத்தின் முக்கியத்துவம் / கணிப்பிடப்பட வேண்டிய அவசியம்.*

போலிப்பணமானது வருமானத்தை உழைக்கும் சொத்துக்களாக விளங்குவதுடன் இன்று *உயர்ந்த திரவத்தன்மையையும்* கொண்டிருக்-கின்றன. இன்று *செலவிடும் தேவைக்கேற்ப* அவையும் குறுங்காலத்தில் பணமாக மாற்றிப் *பயன்படுகின்றன.* எனவே நாட்டின் பொருட்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகள் மீதான *மொத்தக் கேள்வியில்* போலிப்பணமும் செல்வாக்குடையதாகும். எனவே நாட்டின் பண நிரம்பலைக் கட்டுப்படுத்தி, விலை மட்டத்தை உறுதிப்படுத்த மத்தியவங்கி மேற்கொள்கின்ற *நாணயக்கொள்கை வெற்றியளிக்க* வேண்டுமாயின் போலிப்பணத்தின் அளவையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இவ்வகையில் திட்டமிடலை மேற்கொள்ளும் போது போலிப்பணம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

## 4. கிட்டிய பணம்/ அண்மிய பணம் **(Near Money)**

*"விரைவாகவும், எளிதாகவும், குறைந்த முதல் நட்டத்துடன் அல்லது முதல் நட்டமின்றி பணமாக மாற்றக்கூடிய* வருவாய் உழைக்கக்கூடிய குறுங்காலச் சொத்துக்களே அண்மிய பணமாகும்"

எனவே *"உயர்ந்த திரவத்தன்மையுள்ள குறுங்கால திரவச் சொத்துக்களே* அண்மிய பணமாகும்"

- அண்மிய பணம் என்பது *வருவாய் உழைக்கத்தக்க சொத்து* வடிவமாகும். ஆனால் அவை *நிலையான* சொத்துக்களாகவும் *இருப்பதில்லை.*
  உதாரணம்:
  - சேமிப்பு வைப்புக்கள், நிலையான வைப்புக்கள்
  - திறைசேரி உண்டியல்கள், மாற்றுண்டியல்கள்
  - வைப்புச் சான்றிதழ்கள், வரி ஒதுக்குச் சான்றிதழ்கள்

❋ அண்மிய பணமானது சட்டப்பணம், வங்கிப் பணம் என்பவற்றைப் (குறுகிய பணம், பணம்) போல பூரண திரவத்தன்மை வாய்ந்தவையல்ல. அவற்றை விடத்திரவத்தன்மை குறைந்தவை. எனினும் நிலையான சொத்துக்களைப் போல பணமாக்குவதில் சிக்கல் கொண்டவையுமல்ல. அவற்றைவிட *உயர்ந்த திரவத் தன்மை* கொண்டவையாகும்.

❋ இவை பணமாக மாற்றப்பட்ட பின்னரே பரிமாற்று ஊடகமாகத் தொழிற்படும். இவை நேரடியாக

a) பரிமாற்றூடகமாக தொழிற்படுவது *இல்லை*

b) *பெறுமானத்திரட்டாக* தொழிற்படுகின்றது.

★★ *கிட்டிய பணத்தின் முக்கியத்துவம் / கணிப்பீடுவதன் அவசியம்*

(குறிப்பு:- போலிப்பணத்தின் முக்கியத்துவத்தை ***போலிப்பணம்*** என்பதற்கு பதில் கிட்டிய பணம் ***என மாற்றி*** எழுதுக.)

| | |
|---|---|
| காசு / நாணயங்கள்<br>காசோலை } பணம் | ⟶ பூரண திரவத்தன்மை |
| போலிப்பணம்<br>கிட்டிய பணம் } | ⟶ உயர் திரவத்தன்மை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★★ பணம் - அண்மிய பணம் வேறுபாடுகள்

| | பணம் | அண்மிய பணம்/ கிட்டிய பணம் |
|---|---|---|
| 1. | "கால தாமதமின்றியும், முதல் நட்டமின்றியும் கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் சாதனம் பணமாகும்"<br>இது சட்டப்பணத்தையும், வைப்புப் பணத்தையும் உள்ளடக்கியது.<br>உ-ம்: இலங்கைரூபா, காசோலை | "விரைவாகவும், எளிதாகவும் குறைந்த முதல் நட்டத்துடன் அல்லது முதல் நட்டமின்றி பணமாக மாற்றக்கூடிய, வருவாய் உழைக்கக் கூடிய குறுங்காலச் சொத்துக்களே அண்மிய பணமாகும்.<br>உதாரணம்: சேமிப்புவைப்பு தவணை வைப்பு, திறைசேரி உண்டியல், மாற்றுண்டியல், வைப்புச் சான்றிதழ் வரி ஒதுக்குச் சான்றிதழ் |
| 2. | பூரண (100%) திரவத்தன்மை வாய்ந்தது- அதாவது உடனடியாக மாற்றப்படக்கூடியது.<br>(இது பிரதான வேறுபாடு) | அதைவிட திரவத்தன்மை குறைந்தது. அதாவது அண்மிய பணம் விரைவாகப் பணமாக்குகையில் முதல் நட்டம் ஏற்படலாம். |
| 3. | வருவாய் உழைக்காதது | வருவாய் உழைக்கக் கூடியது |
| 4. | குறுகிய பணத்தினுள் அடங்கும். | குறுகிய பணத்தினுள் அடங்காது. |
| 5. | *நேரடியாகப்* பரிமாற்றூடகமாக தொழிற்படும். | நேரடியாக பரிமாற்றூடகமாகத் தொழிற்படுவதில்லை. பணமாக மாற்றிய பின்னரே பரிமற்றூடகமாகத் தொழிற்படும். |

## 5. குறுகிய (ஒடுங்கிய) பணம் (Narrow Money) $M_1$

"அரசு வங்கிகள் தவிர்ந்த *பொதுமக்களிடமுள்ள தாள் உலோக நாணயங்களும், பொதுமக்களின் பேரில் வர்த்தக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்களும்* குறுகிய பணமாகும்."

- அதாவது சட்ட (உயர்வலு)ப் பணமும், வங்கிப் பணமும் சேர்ந்தது குறுகிய பணமாகும்.

குறுகிய பணம் = நாணயங்கள் + *கேள்வி வைப்புக்கள்*

$$M_1 = C + DD$$

M1 = குறுகிய பணம்
C = நாணயங்கள் (சட்டப்பணம்)
D D = கேள்வி வைப்பு (வங்கிப்பணம்)

இது பூரண திரவத்தன்மை (100%) வாய்ந்தது.

- பொதுவாக பணம் எனக் கருதப்படுவது இதுவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. விரிந்த / அகன்ற / பரந்த பணம் (Broad Money) $M_2$

குறுகிய பணத்துடன் அண்மிய பணத்தையும் கூட்ட வருவது விரிந்த பணமாகும்

$$M_2 = M_1 + \text{அண்மிய பணம்}$$

$M_2$ = விரிந்த பணம்
$M_1$ = குறுகிய பணம்

*இலங்கையில்* விரிந்தபணம் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

- அரசு, வங்கிகள் தவிர்ந்த *பொதுமக்களிடம் உள்ள தாள் உலோக நாணயங்களும்,* பொதுமக்களின் *(தனியாரின்) பேரில் வர்த்தக வங்கி*களிலுள்ள கேள்வி வைப்பு, சேமிப்பு வைப்பு, தவணை வைப்பு என்பனவும் விரிந்த பணமாகும்"
- அதாவது சட்டப்பணம், வங்கிப் பணம், போலிப்பணம் ஆகிய மூன்றும் சேர்ந்தது விரிந்த பணமாகும்.
- குறுகிய பணத்துடன் போலிப்பணத்தையும் கூட்ட வருவது விரிந்த பணமாகும்.

- $M_2 = C + DD + SD + TD$
- $M_2 = C + DD + QM$
- $M_2 = M_1 + SD + TD$
- $M_2 = M_1 + QM$

$M_1$ = ஒடுங்கிய பணம்
$M_2$ = விரிந்த பணம்
C = நாணயம்
D D = கேள்வி வைப்புக்கள்
S D = சேமிப்பு வைப்புக்கள்
T D = தவணை வைப்புக்கள்
Q M = போலிப் பணம்

## 7. பிரதிப் பணம்/பணப்பதிலீடுகள்/பணப்பிரதியீடுகள் (Money Substitutes)

"கொடுக்கல் வாங்கல்களின்போது பணத்திற்குப் (காசு, காசோலைக்குப்) பதிலாகத் தற்காலிகமாகப் பயன்படுத்தப்படும் சாதனங்களே பணப் பதிலீடுகளாகும்."

உதாரணம் : கடன் அட்டைகள் ( Credit cards)
மாஸ்டர் அட்டைகள் (Master Cards)

- இவை பரிமாற்றூடகமாகத் தொழிற்படுகின்றன. ஆனால் பொறுமானத் திரட்டாக (சேமிப்பு கருவியாக) தொழிற்படுவதில்லை.
- இவற்றின் பாவனை அதிகரிப்பது **சட்டப்பணத்தின் சுழற்சி வேகத்தைக்** குறைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அபிவிருத்தியடைந்த நாடுகளில் இவற்றின் பாவனை அதிகரித்துள்ளது. இதனால் **காசுப்புழக்கமற்ற சமூகம்** (Cashless Society) உருவாகி வருகிறது.

## ★★ *பணம் - கிட்டிய பணம் - பணப்பதிலீடு வேறுபாடு*

| பணம் (குறுகிய பணம்) | கிட்டிய பணம் | பணப்பதிலீடுகள் |
|---|---|---|
| எண்ணக்கரு விளக்கம் | எண்ணக்கரு விளக்கம் | எண்ணக்கரு விளக்கம் |
| ❋ பரிமாற்றூடகமும்<br>❋ பெறுமானத் திரட்டும் | ❋ போதிய திரவத்தன்மை யின்மையால் பரிமாற்றூடகமல்ல<br>❋ ஆனால் பெறுமானத்திரட்டு | ❋ பரிமாற்றூடகம்<br>❋ ஆனால் பெறுமானத் திரட்டுஅல்ல (கிட்டிய பணத்திற்கு நேர் எதிர்) |
| உ-ம்:- காசு<br>காசோலை | உ-ம் சேமிப்பு வைப்பு<br>தவணை வைப்பு<br>திறைசேரி<br>உண்டியல்<br>மாற்றுண்டியல்<br>வைப்புச் சான்றிதழ் | உ-ம் கடன் அட்டைகள்<br>மாஸ்டர்அட்டைகள்<br>சீபாங் அட்டைகள் |

## 8. *நியமப் பணம் / முழுப்பெறுமதி நாணயம்* **(Full bodied Money)**

"ஒரு நாணயத்தினை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட *உள்ளீட்டின் பெறுமதியும்* (Intrinsic Value) அந்த நாணயத்தின் முகப் பெறுமதியும் (Face Value) சமனாக இருப்பதே முழுப்பெறுமதி நாணயமாகும்"

| உள்ளீட்டுப் பெறுமதி = முகப்பெறுமதி |
|---|

உதாரணம்: புழக்கத்திலிருந்து விலகிய தங்க நாணயங்கள்
வெள்ளி நாணயங்கள், 5000 ரூபா தங்க நாணயகுற்றி

- உள்ளீட்டுப் பெறுமதியைவிட முகப்பெறுமதி குறைவாகும் நிலை ஏற்படும் போது அந்நாணயம் பரிமாற்றூடகமாக பயன்பட முடியாது போகும்.

## 9. *அடையாளப் பணம் (நாணயம்)* **(Token Money)**

"ஒரு நாணயத்தை உருவாக்குவதற்குப் பயன்படுத்திய உள்ளீட்டின் பெறுமதியிலும் பார்க்க அந்நாணயத்தில் இடப்பட்டுள்ள முகப்பெறுமதி கூடுதலாகக் காணப்படுவது அடையாள நாணயமாகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| உள்ளீட்டுப் பெறுமதி | < | முகப்பெறுமதி |

அவற்றின் உற்பத்திச் செலவுக்கும், முகப்பெறுமதிக்கும் தொடர்பில்லை, அவற்றின் *முகப்பெறுமதி சட்டத்தினாலேயே* நிர்ணயிக்கப்படுகின்றது. இதனால் உற்பத்திச் செலவிலும் பார்க்க அவற்றின் பெறுமானம் உயர்வாக இருக்கும்.

- மக்கள் இதனை ஏற்கக் காரணம் அரச உத்தரவாதம் இருப்பதனாலாகும்.

  உதாரணம் :- புழக்கத்திலுள்ள தாள், குற்றி நாணயங்கள்.

❋ *தனக்கென எவ்வித பெறுமதியுமற்ற கடதாசிப் பணமானது, பெறுமதி மிக்க பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யக் கையாளப்படுவதற்கான காரணங்கள்:*

A) அது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருப்பது.
B) அரச உத்தரவாதம் இருப்பது.
C) அருமையாக இருப்பது ஆகியனவாகும்

இத்தகைய முகப்பெறுமதியை மட்டுமே கொண்டுள்ள கடதாசிப் பணமே மாற்றூடகமாக அதிகளவில் பயன்படுகிறது.

## 10. *கட்டளைப் பணம்* (Fiat Money)

"*அரசினது கட்டளையைத் தாங்கியிருப்பதனால்* பணமாக ஏற்றுக் கொள்ளப் படுவது கட்டளைப் பணமாகும்"
உதாரணம் :- தாள், உலோக நாணயங்கள்

- இவை சட்டத்தினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதனால் ஏற்றுக் கொள்ளப்படுபவையாகும்

## 11. *உள்நாட்டுப் பணம்* (Local Money)

"ஒரு நாட்டின் அரசியல் **எல்லைக்குள்** பயன்படுத்தப்படுகின்ற குறிப்பிட்ட நாட்டு மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட சட்டப்பணமும் (தாள், உலோக நாணயங்கள்), வர்த்தக வங்கிகளிலுள்ள வங்கிப் பணமும் (கேள்வி வைப்புக்களும்) உள்நாட்டுப் பணமாகும்"
உதாரணம் :- இலங்கையில் ரூபா, காசோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 *வெளிநாட்டுப்பணம் / வெளிநாட்டு நாணயமாற்று* **(Foreign Exchange)**

"வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் பரிமாற்றப்படும் ***வேற்று நாட்டு நாணயங்களைக்*** குறிக்கும்"
**உதாரணம்** :- அமெரிக்கடொலர், ஸ்டேர்ளிங்பவுண்.

- வெளிநாட்டு நாணயமானது:
  a) ஏற்றுமதியால் பெறப்படலாம்
  b) கொடையாகப் பெறப்படலாம்
  c) கடனாகப் பெறப்படலாம்
  d) முதலீடாகப் பெறப்பலாம்

குறிப்பு:- "பணத்தின் வகைகளைக் குறிப்பிட்டு, அவற்றை இனங்காண்க" எனக் கேட்கப்படின் அவை ஒவ்வொன்றிற்கும் உதாரணம் கொடுக்கப்பட வேண்டும்.)

# VII

## பணத்தின் கேள்வி / திரவத்தேர்வு / திரவத்தன்மை முன்னுரிமை

## Demand for money / Liquidity Preference

| | |
|---|---|
| A | **வரைவிலக்கணம்** |
| B | **வகைகள்** |
| C | **வட்டி வீத நிர்ணயம்** |
| D | **சேமிப்பு ~ பணத்தின் கேள்வி வேறுபாடு** |

### A) வரைவிலக்கணம்

"குறிப்பிட்ட காலப்பகுதியில் மக்கள் **வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவே** பணத்திற்கான கேள்வியாகும்"

- மக்கள் தமது செல்வத்தினை நாணயமற்ற சொத்துக்களின் வடிவத்தில் வைத்திருப்பின் வட்டி போன்ற வருமானங்களை உழைக்க முடியுமாயினும், எவ்வித வருமானத்தையும் உழைக்காது பணத்தின் வடிவில் திரட்டி வைத்திருப்பதற்கு காரணம் பணத்தின் திரவத் தன்மையாகும். எனவே பணத்திற்கான கேள்வி என்பது திரவத் தன்மைக்கான தெரிவாக அமைவதால் "திரவத்தேர்வு" எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**B)** வகைகள்

கெயின்ஸ் (Keyens) குறிப்பிட்ட பணத்திற்கு கேள்வி எழுவதற்கான *காரணிகள் / தூண்டுதல்கள்* ( Reasons / Motives)

1) கொடுக்கல் வாங்கல் (புழக்க) நோக்கக்கேள்வி
2) முன்னெச்சரிக்கை (பாதுகாப்பு) நோக்கக்கேள்வி
3) உத்தேச (ஊக) நோக்கக் கேள்வி

1. பணத்தின் கொடுக்கல் வாங்கல் (புழக்க) நோக்கக் கேள்வி **($MD_T$)**

## (Transaction Demand for money) $MD_T$

"மக்கள் **நாளாந்தக் கொடுக்கல் வாங்கல்** நோக்கம் கருதி வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவே பணத்தின் கொடுக்கல் வாங்கல் நோக்க கேள்வியாகும்."

- வருமானமும் செலவும் ஒரேகாலத்தில் நிகழ்வதில்லை. வருமானம் பெறுவதில் ஒருகால இடைவெளி காணப்படுகிறது. ஆனால் செலவு எல்லாக் காலங்களிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. எனவே மக்கள் தாம் பெறுகின்ற வருமானத்தில் ஒரு பகுதியினை செலவு செய்யும் நோக்கம் கருதி பணமாக வைத்திருக்க விரும்புகின்றனர். இவ்வாறு வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவே பணத்திற்கான கொடுக்கல் வாங்கல் கேள்வி ஆகும்.
- அதாவது *திட்டமிட்ட செலவுக்காக* (Planned Expenditure) வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு இதுவாகும்.

### இதனை நிர்ணயிக்கும் காரணிகள்

A) வருமானம் (+ தொடர்பு)
B) வருமானம் பெறும் கால இடைவெளி (+ தொடர்பு)
C) நாட்டின் பொதுவிலைமட்டம் (+ தொடர்பு)
D) புதிய நிதியியல் கண்டு பிடிப்புக்கள் (Financial Inovation) (உ-ம்) கிட்டிய பணம், பணப் பதிலீடுகள் (– தொடர்பு)

***A) இது பிரதானமாக வருமானத்தின் (y) ஒரு தொழிற்பாடாகும்.***


$$MD_T = F(y)$$

$MD_T$ – பணத்தின் கொடுக்கல் வாங்கல்கேள்வி
F – தொழிற்பாடு
Y – வருமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்திற்கும் (y) கொடுக்கல் வாங்கல் நோக்கக் கேள்விக்கும் ($MD_T$) இடையில் **நேரானதொடர்பு** காணப்படும். அதாவது "வருமானம் அதிகரிக்கும் போது கொடுக்கல் வாங்கல் நோக்கக் கேள்வியும் அதிகரிக்கும். மாறாக வருமானம் குறையும் போது கொடுக்கல் வாங்கல் நோக்கக் கேள்வியும் குறையும்" இதனை வரைபடம் காட்டுகிறது





B) *வருமானம் பெறும் கால இடைவெளிக்கும்* பணத்தின் கொடுக்கல் வாங்கல் கேள்விக்குமிடையில் *நேரான தொடர்பு* காணப்படுகிறது.

உதாரணம்:- ஒருவர் வாராந்தம் 1400 ரூபா பெறுகிறார் எனவும் அதனை நாளாந்தம் கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டும் சமமாக செலவிட்டு முடிக்கிறார் எனவும் கொள்வோமாயின் அவரது சராசரி கொடுக்கல் வாங்கல் பணக்கேள்வி 700 ரூபாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கால இடைவெளி அதிகரிப்பின் அதாவது மாதாந்தம் இவ்வருமானத்தைப் பெறின் (5600 ரூபா) அவரது சராசரி கொடுக்கல் வாங்கல் பணக்கேள்வி 2800 ரூபாவாக அதிகரிக்கும். இதனை பின்வரும் வரைபடம் காட்டுகிறது.




C) நாட்டின் *பொது விலை மட்டத்திற்கும்* பணத்தின் கொடுக்கல் வாங்கல் கேள்விக்குமிடையில் நேரான தொடர்பு காணப்படும் அதாவது .............(விளக்கம்)

D) *புதிய நிதியியல் கண்டுபிடிப்புக்கள்* அதாவது *கிட்டிய பணம், பணப்பதிலீடுகள்* காணப்படும் போது அவ்வடிவில் செல்வத்தை பேணுவதால் பணத்திற்கான கேள்வி குறையும். எனவே இவற்றிற்கும் பணத்தின் கேள்விக்கம் இடையில் *எதிரான தொடர்பு* காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2) பணத்தின் முன்னெச்சரிக்கை (பாதுகாப்பு) கேள்வி **($MD_P$)**

## Precautionary Demand for money

"எதிர்பாராமல் ஏற்படும் செலவினங்களைத் தாங்கிக் கொள்வதற்காக மக்கள் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவே பணத்தின் பாதுகாப்புக் கேள்வியாகும்"

- அதாவது திட்டமிடப்படாத செலவுக்காக (Unplanned Expenditure) வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு இதுவாகும்.

உதாரணம்:- எதிர்பாராத விபத்து, சுகயீனம், மரணம், கார் பழுதடைதல், விருந்தினர் வருகை, வீடு திருத்தம்


### *இதனை நிர்ணயிக்கும் காரணிகள்*

A) வருமானம் (+ தொடர்பு)
B) வருமானம் பெறும் கால இடைவெளி (+ தொடர்பு)
C) நாட்டின் பொதுவிலை மட்டம் (+ தொடர்பு)
D) எதிர்நோக்கும் ஆபத்துத் தன்மை (+ தொடர்பு)
E) புதிய நிதியியல் கண்டு பிடிப்புக்கள்:
(உ+ம் : கிட்டிய பணம், பணப்பதிலீடு (− தொடர்பு)

இது பிரதானமாக *வருமானத்தின் ஒரு தொழிற்பாடாகும்*

$$MDp = F(Y)$$

MDp − பணத்தின் பாதுகாப்பு கேள்வி
F − தொழிற்பாடு
Y − வருமானம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ❋ *பணத்தின் செய்வினை நிலுவைக் கேள்வி* ($MD_{T+P}$)
## ***Demand for Active Money Balances***

"பணத்தின் கொடுக்கல் வாங்கல் கேள்வியும் ***பாதுகாப்புக் கேள்வியும் இணைந்தது*** பணத்தின் செய்வினை நிலுவைக் கேள்வியாகும்".

$$MD_T + MD_P = MD_{T+P}$$

| |
|---|
| பணத்தின் கொடுக்கல் வாங்கல் கேள்வி + பாதுகாப்புகேள்வி = பணத்தின் செய்வினை நிலுவைக்கேள்வி |

- இது பிரதானமாக வருமானத்தின் (y) தொழிற்பாடாகும் பணத்தின் கொடுக்கல் வாங்கல், பாதுகாப்பு கேள்வியைப் பாதிக்கும் காரணிகளும் இதனைப் பாதிக்கும் (A, B, C, D, E)
- இது ***வட்டி வீதத்துடன் (r) தொடர்பற்றது.***







## 3. பணத்தின் ஊகநோக்க கேள்வி / செயற்பாட்டு நிலுவை (MDs) Speculative Demand for money / Demand for passive(Idle) Money Balances

"*வருமானம் உழைக்கும் நோக்கோடு, நிதிச்சொத்துக்களில் முதலீடு செய்வதற்காக* மக்கள் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவே பணத்தின் ஊக நோக்கக் கேள்வியாகும்"

உதாரணம் : வட்டி, பங்கிலாபம் போன்ற வருமானத்தைத் தரக்கூடிய ஆவணங்கள், பிணைகள், பங்குகள் போன்ற நிதிச் சொத்துக்களில் முதலீடு செய்வதற்காக மக்கள் வைத்திருக்கும் பணத்தின் அளவு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புழக்க, பாதுகாப்பு நோக்கங்களிற்கென ஒதுக்கியது போக *எஞ்சிய வகையில்* ஒதுக்கிக் கொள்ளும் பணத்தின் அளவாகும்.
- இது *பிரதானமாக வட்டிவீதத்தின்* (r) ஒரு *தொழிற்பாடாகும்*

| MDs = F (r) |
|---|

MDs – பணத்தின் ஊகநோக்க கேள்வி
F – தொழிற்பாடு
r – வட்டிவீதம்

பணச் சந்தையில் நிலவும் *வட்டிவீதத்திற்கும்* (r) பணத்தின் ஊகநோக்கக் கேள்விக்கும் (MDs) இடையில் *எதிரான தொடர்பு* காணப்படும் [கீழே குறிப்பு I ஐ பார்க்க]




❋ வட்டிவீதம் $r_1$ என உயர்வாக இருக்கும் போது பணத்தின் ஊகநோக்க கேள்வி குறைவாக இருக்கும். $MD_1$
- ஏனெனில் எதிர்காலத்தில் வட்டி வீதம் குறையும் என எதிர்பார்த்து தற்போது பணத்தை முதலீடு செய்வதனாலாகும்.

❋ வட்டிவீதம் $r_2$ என வீழ்ச்சியடையின் பணத்தின் ஊகநோக்க கேள்வி அதிகரிக்கும் $MD_2$
- ஏனெனில் எதிர்காலத்தில் வட்டிவீதம் உயரும் என எதிர்பார்த்து (முதலிடுவதற்காக) தற்போது பணத்தை வைத்திருப்பதனாலாகும்.

❋ வட்டிவீதம் $r_3$ என மிகக் குறைந்தளவு வீழ்ச்சியடைந்து காணப்பட்டால் பணத்தின் ஊக நோக்க கேள்வியானது $MD_3$ அல்லது அதனைவிடக் கூடியதாக / முடிவிலியாகக் காணப்படலாம்.
- ஏனெனில் நிகழ்காலத்தில் வட்டிவீதம் மிக இழிவான நிலையில் காணப்படுவதனால் எதிர்காலத்தில் வட்டி வீதம் உயரும் என ஊகித்து எல்லோரும் உயர்ந்தளவு பணத்தினை வைத்திருப்பர். எனவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்திற்கான *ஊகநோக்க கேள்விக்கோடு* ஒரு எல்லைக்கு அப்பால் *கிடை அச்சிற்கு சமாந்தரமாக* (முடிவிலி நெகிழ்ச்சியுடையதாக) செல்லும். இதன் கருத்து "இவ் எல்லைக்கு கீழாக வட்டிவீதம் குறையமாட்டாது" என எல்லோரும் எதிர்பார்ப்பதாகும். இவ்வாறு வட்டி வீதம் வீழ்ச்சி-யடையாத நிலை "*திரவப்பொறிநிலை* (Liquidity Trap)" எனப்படும்.

குறிப்பு 1:

✵ எதிர்கால வட்டி வீதத்திற்கும் முறிகளின் (Bonds) விலைக்குமிடையில் *எதிரான தொடர்புண்டு.*

உதாரணம் : தற்போது முறிகளின் விலை 100 ரூபா எனவும் அதன் வருவாய் வீதம் 6% எனவும் கொள்வோம்.

- எதிர்காலத்தில் *வட்டி வீதம் 8% மாக உயரின்* இந்த முறிகளின் *விலை* 75 ரூபாவாக *குறையும்.*

$$\frac{100 \times 6}{8} = 75 \text{ ரூபா}$$

எனவே *மூலதன நட்டம்* (Capital losses) ஏற்படும். (100 – 75 = 25)

- எதிர்காலத்தில் வட்டி வீதம் 5% மாக *குறையின்* இந்த முறிகளின் விலை 120 ரூபாவாக *அதிகரிக்கும்.*

$$\frac{100 \times 6}{5} = 120$$

எனவே *மூலதன நயம்* (Capital gains) ஏற்படும். (120 – 100 = 20)

✵ இவ்வகையில் *எதிர்கால வட்டிவீதம் பற்றிய எதிர்ப்பார்ப்புக்கும்* பணத்தின் *ஊகநோக்க கேள்விக்கும்* இடையில் *நேரான தொடர்பு* இருக்கும்.)

வட்டிவீதம் - பணத்திற்கான கேள்வி ( - ) தொடர்பு
எதிர்கால வட்டி வீதம் - முறிகளின்விலை ( - ) தொடர்பு
எதிர்கால வட்டி வீதம் - பணத்திற்கான கேள்வி ( + ) தொடர்பு

## பணத்திற்கான மூன்று கேள்விகள்

| | | |
|---|---|---|
| பணத்தின் செய்வினை நிலுவைக் கேள்வி | 1) புழக்கநோக்கக்கேள்வி<br>2) பாதுகாப்புநோக்ககேள்வி | பணத்தின் பரிமாற்றூடகத் தொழிற்பாடு |
| பணத்தின் செயற்பாட்டு நிலுவைக் கேள்வி | 3) ஊக நோக்க கேள்வி | பணத்தின் பெறுமானத் திரட்டுத் தொழிற்பாடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *திரவத்தேர்வு/ பணத்திற்கான கேள்வி/ திரவத்தன்மை முன்னுரிமை*
## Liquidity Preference /Demand for money

"செல்வத்தினை வட்டி போன்ற வருவாய் உழைக்கக் கூடிய வேறு நாணயமற்ற சொத்துக்களின் வடிவில் வைத்திருக்காமல் பணமாக வைத்திருக்கும் விருப்பம் திரவத்தேர்வு / பணத்திற்கான கேள்வி ஆகும்"


- புழக்க நோக்கம், பாதுகாப்பு நோக்கம், ஊகநோக்கம் என்பவற்றை ஒன்று சேர்ப்பதன் அடிப்படையிலேயே பணத்திற்கான கேள்வி (MD) / திரவத்தேர்வு (L) ஏற்படுகிறது. (MD = L இரண்டும் பணத்தின் கேள்விக்கான குறியீடுகளாகும் என்பதைக் கவனிக்கவும்)
-

$$MD_T + MD_P + MD_S = L = MD$$

- இது பின்வரும் *இரு பிரதான காரணிகளில்* தங்கியுள்ளது.
  i. வட்டி வீதம் (r)
  ii. வருமான அளவு (y)


$$L = MD = L_{T+P}(y) + L_S(r)$$

- இதனை பின்வரும் திரவத்தேர்வு வளையி (Liquidity Preference Curve) (பணத்தின் கேள்வி வளையி) மூலம் விளக்கலாம்.



(A) (B)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"வட்டி வீதத்திற்கும் பணத்தின் கேள்விக்குமிடையிலான தொடர்பை விளக்குவது திரவத் தேர்வு வளையியாகும்." இத் ***திரவத்தேர்வு வளையி*** ( படம் C) பணத்தின் செய்வினை நிலுவை (படம் A), பணத்தின் செயற்பாட்டு நிலுவை (படம் B) என்பவற்றினை ஒன்றிணைப்பதன் மூலம் பெறப்பட்டதாகும். எனவே மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாக சரிந்து செல்லும்.

- இதன் சரிவு (Slope) ஊகநோக்கக் கேள்வியின் அடிப்படையிலும்,
- அதன் நிலை (Position) பணத்தின் செய்வினை நிலுவையின் (புழக்க, முன்னுரிமை நோக்க கேள்விகளின்) அடிப்படையிலும் நிர்ணயிக்கப்படுகின்றது.


உதாரணம் : வருமானம் அதிகரிப்பதனால் பணத்தின் செய்வினை நிலுவை அதிகரிப்பின் திரவத்தேர்வு வளையி வலப்புறமாக நகரும். மாறாக குறையின் இடப்புறமாக நகரும்.

(மேலதிக விளக்கம் திரவப் பொறிநிலை உட்பட) ஊக நோக்க கேள்வி விளக்கத்தில் உள்ளது)

## *C வட்டி வீத நிர்ணயம்*
## ***The Determination of the Rate of Interest***

வட்டிவீதம் என்பது ***பணத்தின் விலையாகும்***. ஒருபொருளின் விலை எவ்வாறு அதன் கேள்வி நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படுகின்றதோ, அதைப்போன்றே பணத்தின் விலையான வட்டி வீதம் ***பணத்தின் கேள்வி நிரம்பல்களினால்*** நிர்ணயிக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இங்கு பணநிரம்பல் *வட்டி வீதத்துடன் தொடர்பற்றதாகவும் ( பூச்சியநெகிழ்ச்சி) நாணய அதிகாரிகளால் மட்டும்* நிர்ணயிக்கப்படும் ***கொள்கைக் கருவி*** ( Policy Instrument) யாகவும் கொள்ளப்படுகிறது.

❤ நாணய அதிகாரிகள் **பண நிரம்பலை** :

$MS_1$ ஆக நிலைப்படுத்தின் வட்டி வீதம் $r_1$ ஆகவும்,
$MS_2$ அக அதிகரிப்பின் வட்டி வீதம் $r_2$ ஆகவும்
$MS_3$ ஆக அதிகரிப்பின் வட்டி வீதம் $r_3$ ஆகவும் குறையும்
$MS_4$ ஆக அதிகரிப்பின் வட்டி வீதம் $r_3$ இலும் குறைய மாட்டாது.


காரணம் வட்டி வீதம் அதிகரிக்கும் என எல்லோரும் எதிர்பார்ப்பதால் பணத்திற்கான கேள்வி முடிவிலி நெகிழ்ச்சியாக அமைவதனாலாகும். இந்நிலை திரவப்பொறிநிலை எனப்படுகிறது.

| | |
|---|---|
| குறிப்பு : | ◆ பணநிரம்பல் வட்டிவீதத்துடன் தொடர்பற்றது. |
| | ◆ ஆனால் பணநிரம்பல் மாற்றம் வட்டிவீதத்தை மாற்றும். |

❤ இதே போல *கேள்வி மாற்றங்களும் வட்டி வீதத்தில் மாற்றத்தை* ஏற்படுத்தும்.

உதாரணம் : ஏனையவை மாறாத நிலையில் (தேசிய) வருமானம் அதிகரிப்பதனால் பணத்தின் கேள்வி அதிகரிப்பின் ($MD_2$) வட்டி வீதம் அதிகரிக்கும். ($r_2$)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




◆ இதே போல கேள்வி குறையும் போது வட்டி வீதம் குறையும்.

## D சேமிப்பு – பணத்திற்கான கேள்வி வேறுபாடு

❋ *செலவிடப்படாத* வருமானம் சேமிப்பாகும்.

| வருமானம் - செலவு = சேமிப்பு |
|---|

❋ *செலவிடுவதற்காக* சொத்துக்களை பணத்தின் வடிவத்தில் வைத்திருக்க விரும்புவது பணத்திற்கான கேள்வியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIII

# பணநிரம்பல்

## (பணவழங்கல் / பணஅளிப்பு / பணஇருப்பு / பணக்கூட்டுக்கள்)

# Money Supply

## (Money Stock/ Monetaty Aggregates)

*A) வரைவிலக்கணம்*
*B) கணிப்பீட்டின் முக்கியத்துவம் / அவசியம்*
*C) வகைகள்*
*D) நிர்ணயிக்கும் காரணிகள்*
*E) இலங்கையின் பணநிரம்பல் கட்டமைப்பு*

## A) வரைவிலக்கணம்

"குறித்த ஒரு நாட்டில், குறித்த ஒரு கால எல்லைக்குள், *பொது மக்களிடம் புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு* பணநிரம்பல் எனப்படும்."

- இங்கு **பொதுமக்கள்** (Public) என்பது *அரசும் வங்கிகளும்* (மத்திய வங்கி, வர்த்தகவங்கி) *தவிர்ந்த தனியார்துறை* (வீட்டுத்துறை + நிறுவனத் துறை) யிடமுள்ள பணம் என்பதைக் குறிக்கும்.

உதாரணம் மக்கள், கம்பனிகள், கூட்டுறவுச் சங்கங்கள், நியதிச்சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், ஏனைய சங்கங்கள் போன்றன.

குறிப்பு : பணம் என்பதற்குள் உள்ளடக்கும் அம்சங்களைப் பொறுத்து பணநிரம்பலின் வரைவிலக்கணம் வேறுபடும். பணநிரம்பல் வகை பற்றிய அடுத்த பகுதியில் அவ்வரைவிலக்கணங்கள் உள்ளன.

## B) கணிப்பீட்டின் முக்கியத்துவம் / அவசியம்

- பணநிரம்பலில் ஏற்படும் மாற்றம் நாட்டின் **விலைமட்டம், வட்டிவீதம்** என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துவதால் பண நிரம்பல் பற்றிய மதிப்பீடு அவசியமானது முக்கியமானது ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவ்வகையில் பணநிரம்பலானது நாணய கொள்கையின் **இடைநிலை இலக்காக** கொள்ளப்படுவதால் அதன் அளவீடு முக்கியமானது.

## C) வகைகள்

*பொதுமக்களிடமுள்ள பணவகைகளின் அடிப்படையில் பணநிரம்பல் வேறுபாடு* விளக்கப்படும்.

- ஒவ்வொரு நாடும் பணச்சந்தை வளர்ச்சிக்கேற்ப பொதுமக்களிடமுள்ள பல்வேறுபட்ட திரவச் சொத்துக்களை பணநிரம்பலில் உள்ளடக்குவதன் மூலம் இவ்வேறுபாடு மேற்கொள்ளப்படுகிறது. எனவே நாட்டிற்கு நாடு பணநிரம்பலின் வகைகளும், அவற்றின் உள்ளடக்கமும் வேறுபடுகின்றன.

1)

| | | | |
|---|---|---|---|
| பொதுமக்களிடமுள்ள ***நாணயங்கள்*** <br> $M_0 = C$ <br> மிக குறுகிய பணநிரம்பல் $(M_0)$ | வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் பெயரிலுள்ள ***கேள்வி வைப்புக்கள்*** <br> DD | வர்த்தக வங்கிகளிலுள்ள தனியார் துறையின் ***சேமிப்பு வைப்புக்கள்*** <br> SD | வர்த்தகவங்கிகளிலுள்ள தனியார் துறையின் ***தவணை வைப்புக்கள்*** <br> TD |

2) குறுகிய பண நிரம்பல் $(M_1)$      போலிப்பண நிரம்பல் (QM)

↓

3) விரிந்த பண நிரம்பல் $(M_2)$

↓

\+ ஏனைய அண்மிய பணவகைகள்

↓

= (4) மேலும் விரிந்த பணநிரம்பல் ( $M_3, M_4, M_5,$ )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: **இலங்கையில்** $M_2$ மேற்காட்டப்பட்டவாறு கணிப்பிடப்படுகிறது. **பொதுவாக** $M_2 = M_1 +$ அண்மிய பணம் ஆகும். இந்த **அண்மிய பண உள்ளடக்கம் நாட்டிற்கு நாடு வேறுபடும்.** இலங்கையில் SD, TD மட்டும் அண்மியபணமாக இதுவரை சேர்க்கப்பட்டுள்ளது.

## 1) *மிகக் குறுகிய பணநிரம்பல்* ($M_0$)

(சட்டப்பணம்/ புழக்கப்பணம்/ உயர்வலுப்பணம்/ நாணயத்தளம்/ காசுத் தளம்/ தளநாணயம்/ ஒதுக்குப்பணம்)

"குறித்த ஒரு நாட்டில், குறித்த ஒரு கால எல்லைக்குள் *பொது மக்களிடமுள்ள தாள், குற்றிநாணயங்கள்* மிகக்குறுகிய பணநிரம்பல் ஆகும்."

இது *பின்வருமாறு அளவிடப்படும் :*
உதாரணம் இலங்கையில் 1997 டிசம்பரில்

| | (பில். ரூபா) |
|---|---|
| 1) மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட *மொத்த நாணங்கள்* | 53135 . 0 |
| 2) *அரசிடம்* (திறைசேரி, கச்சேரி) உள்ள மொத்தநாணயங்கள் | 0 . 5 |
| 3) *வங்கிகளில்* உள்ள மொத்த நாணயங்கள் | 7455 . 0 |
| பொதுமக்களிடமுள்ள நாணயங்கள் (1) - (2) - (3) | 45679 . 5 |

## 2) *குறுகிய பணநிரம்பல்* ($M_1$) *Narrow Money Supply*

"குறித்த ஒரு நாட்டில், குறித்த ஒரு கால எல்லைக்குள் பொதுமக்களிடமுள்ள தாள் உலோக *நாணயங்களும்,* பொதுமக்கள் பெயரில் வர்த்தக வங்கிகளிலுள்ள *கேள்வி வைப்புக்களும்* குறுகிய பண நிரம்பலாகும்."

$$M_1 = M_0 + \text{வங்கிப்பணம் (DD)}$$

இதில் *வங்கிப் பணமானது **(DD)** பின்வருமாறு அளவிடப்படும்*

| | |
|---|---|
| (மத்திய வங்கியிலும் வர்த்தக வங்கியிலுமுள்ள) *மொத்த கேள்வி வைப்புக்கள்* | 10000 |
| – (மத்திய வங்கியிலும் வர்த்தக வங்கியிலுமுள்ள) *அரச கேள்வி வைப்புக்கள்* | 1000 |
| – (மத்திய வங்கியிலுள்ள வெளிநாட்டு அமைப்புக்களின் வைப்புக்களும், வர்த்தகவங்கி வைப்புக்களும் உட்பட) *வங்கிகளுக்கிடையிலான வைப்புக்கள்* | 2000 |
| = பொதுமக்கள் பெயரில் வர்த்தக வங்கிகளிலுள்ள கேள்வி வைப்புக்கள் (DD) (மேலதிக விளக்கம் பணத்தின் வகைகள் பகுதியி VI உள்ளது) | 7000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3) *விரிந்த பணநிரம்பல்* **($M_2$) (Broad Money Supply)**

குறுகிய பணத்துடன் அண்மிய பணத்தைக் கூட்டுவதன் மூலம் விரிந்த பணநிரம்பலைக் கணிப்பிடலாம்.

$$M_2 = M_1 + \text{அண்மிய பணம்}$$

*அண்மிய பணவகை உள்ளடக்கம் நாட்டிற்கு நாடு பணச்சந்தை நிலமைக்கேற்ப வேறுபடும்.* எனவே விரிந்த பணத்திற்கான வரைவிலக்கணமும் வேறுபடும்.

*இலங்கையில்*

"குறித்த ஒரு கால எல்லைக்குள் பொதுமக்களிடமுள்ள தாள் உலோக நாணயங்களும், பொதுமக்கள் பெயரில் வர்த்தக வங்கிகளிடமுள்ள *கேள்வி வைப்பு, சேமிப்பு வைப்பு, தவணைவைப்பு* என்பன விரிந்த பணநிரம்பலாகக் கொள்ளப்படுகிறது" அதாவது.

| |
|---|
| $M_2 = M_1 +$ *வர்த்தக* வங்கிகளிலுள்ள *தனியார் துறையின்* தவணை சேமிப்பு வைப்புக்கள் |

❋ வர்த்தக வங்கிகளிலுள்ள *தனியார் துறையின் தவணை சேமிப்பு வைப்புக்கள்* என்பதற்குள் பின்வருவன அடங்கும்

A) கூட்டுறவு நிறுவன வைப்புக்கள்
B) அரச கூட்டுத்தாபன வைப்புக்கள்
C) ஏனைய தனியார் துறை வாடிக்கையாளர் வைப்புக்கள்

## 4. *மேலும் விரிந்த பணநிரம்பல்* **($M_3$, $M_4$, $M_5$)**

ஏனைய அண்மிய பணவகைகளான *வர்த்தக வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் வைக்கப்பட்டுள்ள சேமிப்பு, தவணை வைப்பு, திறைசேரி உண்டியல்* போன்ற குறுங்கால நிதிச் (திரவச் ) சொத்துக்களை உள்ளடக்கும்போது அது மேலும் விரிந்த பணநிரம்பலாக மாற்றமடையும்.

உதாரணம் : $M_3$, $M_4$, $M_5$ போன்றவை.

ஐக்கிய இராட்சியத்தில் பண நிரம்பலில் $M_5$ வரை பிரிவுகள் உள்ளன. இவற்றின் உள்ளடக்கம் பணச் சந்தை நிலைமைக் கேற்ப காலத்திற்கு காலம் மாற்றப்படுகிறது. *அங்கு தற்போது உத்தியோக பூர்வ அளவீடாக* $M_2$ குறுகிய பணமாகவும் $M_4$ விரிந்த பணமாகவும் கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| குறுகிய பண நிரம்பல் ($M_1$) | பரிமாற்றூடகத் தொழிற்பாட்டைப் பிரதானமாகக் கொண்டது |
| விரிந்த பண நிரம்பல் ($M_2$) | மேலதிகமாக பெறுமானத்திரட்டுத் தொழிற்பாட்டை பிரதானமாக கொண்டது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ *இலங்கையில்* கணிப்பிடப்படும் பணநிரம்பலின் *பிரதான வகைகள்*

*இலங்கையில் கணிப்பிடல்.........*

1) குறுகிய பணநிரம்பல் ($M_1$) } ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளன.
2) விரிந்த பண நிரம்பல் ($M_2$) }
3) திரட்டப்பட்ட/ சீராக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($M_{2b}$)

## *திரட்டப்பட்ட / சீராக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல்* (**$M_2b$**)
## **Consolidated Broad Money Supply**

- "உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளையும், வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவுகளையும் உள்ளடக்கிய விரிந்த பணநிரம்பல் $M_2b$ ஆகும்."
- 1998 ஜனவரி முதல் இலங்கையில் இது கணிப்பிடப்படுகிறது.
- இதன் உள்ளடக்கம் பின்வருமாறு எடுத்துக் காட்டப்படுகிறது.

$$M_{2b} = M_2 + QM_{NRFC} + RD_{FCBU}$$

இங்கு $M_{2b}$ - சீராக்கம் செய்யப்பட்ட விரிந்த பணநிரம்பல்
$M_2$ - விரிந்த பண நிரம்பல்
$QM_{NRFC}$ - வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள பொது மக்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள்.
$RD_{FCBU}$ - வெளிநாட்டு நாணய வங்கி அலகுகளிலுள்ள உள்நாட்டவர்களின் வைப்புக்கள்.

(குறிப்பு : $M_1$, $M_2$ முன்னர் போலவே கணிப்பிடப்படுகிறது)

பின்வரும் தகவல்களின் அடிப்படையில் $M_1$, $M_2$ $M_{2b}$ என்பவற்றைக் கணிப்பிடுதல் :

1) பொதுமக்கள் வசமுள்ள பணம் (CP) 46000
2) பொதுமக்களுக்குச் சொந்தமான கேள்விவைப்புக்கள் (DDP) 40000
3) வர்த்தக வங்கிகளிலுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான தவணை சேமிப்பு வைப்புக்கள் ($QM_{DBU}$) 202000
4) வதிவிடப் பிரசைகள் அல்லாதோரின் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள தவணை சேமிப்பு வைப்புகள் ($QR_{NRFC}$) 24000
5) வெளிநாட்டு நாணய வங்கி அலகுகளிலுள்ள உள்நாட்டவர்களின் வைப்புக்கள் ($RD_{FCBU}$) 20000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை

- $M_1 = CP + DDP$
  $= 46000 \ \ 40000 = 86000$
- $M_2 = M_1 + QM_{DBU}$
  $= 86000 + 202000 = 288000$
- $M_{2b} = M_2 + QM_{NRFC} + RD_{PCBU}$
  $= 288000 + 24000 + 20000$
  $= 332000$

| | | |
|---|---|---|
| CP | - | Currency of the Public |
| DDP | - | Demand Deposits of the Public |
| $QM_{DBU}$ | - | Quasi Money of Domestic Banking Units |
| $QM_{NRFC}$ | - | Quasi Money of Non - Residents Foreign Currency Accounts |
| $RD_{FCBU}$ | - | Residents Deposits of Foreign Currency Banking Units. |

❋ *விரிந்த பண நிரம்பலை கணிப்பதன் முக்கியத்துவம்*

(பணத்தின் வகைகள் பகுதியில் *போலிப்பணத்தின் / கிட்டிய பணத்தின் முக்கியத்துவம்* இதற்கும் பொருந்தும்)

❋ ***$M_1$ இலும் பார்க்க $M_2$ கூடுதலாக அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் :***

அ) *வட்டிவீதங்கள்* அதிகரிக்கின்ற நிலைமை

ஆ) வர்த்தகவங்கிகள் வழங்குகின்ற வட்டிவீதமானது வரத்தக வங்கி யல்லாத *இதரநிதி நிறுவனங்கள்* (உதாரணம்: NSB) *வழங்குகின்ற வட்டி வீதத்திலும்* உயர்வாகக் காணப்படுகின்ற நிலைமை.

இ) வர்த்தக வங்கித்துறை அல்லாத *ஏனைய துறைகள் மீதான நம்பிக்கை குறைவாக* காணப்படும் போது, அவற்றிலிருந்து முதல் வர்த்தக வங்கிகளை நோக்கி நகர்த்தப்படுகின்ற நிலமை.
உதாரணம் : பங்குச்சந்தை வீழ்ச்சி

ஈ) வர்த்தக வங்கியிலுள்ள சேமிப்பு, தவணை *வைப்புக்களை இலகுவில் மாற்றக் கூடியதான நிலைமை.*
உதாரணம் : தன்னியக்க கூற்று அட்டை வசதி

உ) வர்த்தக வங்கிகளில் *வைப்புத் திரட்டல் வசதிகள் செறிவாக்கப் படுதல்*
- வங்கிக்கிளை விரிவாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## C) *பணநிரம்பல் மீது செல்வாக்குச் செலுத்தும் / நிர்ணயிக்கும் காரணிகள்*

"ஒரு நாட்டின் பணநிரம்பலின் பெறுமதி அதன்மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் பெறுமதிக்குச் சமமானதாகும்"

| |
|---|
| உள்நாட்டுக் காரணிகள் : தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் (NDA) (Net Domestic Assets) |

1) *வங்கிகளின்* உள்நாட்டுக் கடன் வழங்கல் மாற்றமடைதல் (+) (மத்தியவங்கி + வணிக வங்கிகள்)

அ) வங்கிகள் *தனியார்துறைக்கு* வழங்கும் தேறிய கடன்கள் (மத்தியவங்கிக் கடன் கட்டுப்பாடு, பொருளாதார சூழல் காரணமாகும்)

ஆ) வங்கிகள் *அரசுக்கு* வழங்கும் தேறிய கடன்கள் (வ. செ. திட்ட பற்றாக்குறை நிதியீட்டம் காரணமாகும்)

இ) வங்கிகள் அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கும் தேறிய கடன்கள்

❋ மத்தியவங்கி → நாணயவெளியீடு → பணநிரம்பல் மாற்றம் → வணிக வங்கிகளின் கடனாக்கம் மூலமும் → பண நிரம்பல் மாற்றம்

- எனவே தாக்கம் கூடியது

❋ *வணிக வங்கி* → கடனாக்கம் → பணநிரம்பல்

- மத்திய வங்கி கட்னைவிட தாக்கம் குறைவு

2) வங்கிகளின் ஏனைய தேறிய விடயங்கள் / சொத்துக்கள்

| |
|---|
| வெளிநாட்டுக் காரணி : தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் NFA – Net Foreign Assets |

3) மத்திய வங்கியிலும் வணிக வங்கிகளிலுமுள்ள *தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின்* மாற்றம் (+) (சென்மதி நிலுவை சமூலநிலுவை காரணம்)

❋ மத்திய வங்கி → நாணய வெளியீடு → பணநிரம்பல் மாற்றம்

❋ வணிக வங்கி → கடனாக்கம் → பணநிரம்பல் மாற்றம்

(இவை (1), (2), (3) *குறுகிய பணநிரம்பலை* ($M_1$) நிர்ணயிப்பவை) → அதனூடாக விரிந்த பண நிரம்பலையும் நிர்ணயிப்பவை)

4) *வணிக வங்கிகளின் சேமிப்பு வைப்புக்கள் நிலையான வைப்புக்களில் மாற்றம்* (இது உள்நாட்டுக்காரணி)

இது பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது :

அ) வணிக வங்கிகளின் வட்டிவீத மாற்றம் (+)

ஆ) இதர நிதிநிறுவனங்களின் வட்டி வீத மாற்றம் (-)

இ) வங்கியல்லாத ஏனைய துறைகள் மீதான நம்பிக்கைத்தன்மை (-)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) வணிக வங்கிகளின் தவணை, சேமிப்பு வைப்புக்களை மாற்றக்கூடிய தன்மை (+)

உ) வணிக வங்கிகளின் வைப்புத்திரட்டல் வசதியின் செறிவுத்தன்மை (+)

(இவை (3அ – உ வரை) போலிப்பண நிரம்பலை (QM), *விரிந்த பணநிரம்பலை* ($M_1$) நிர்ணயிப்பவை)

> குறிப்பு : *ஏனையவை மாறாத நிலையில்* மேற்காட்டியவற்றில்
>
> ❋ 1 அ), ஆ), 2, 3, 4 வதில் அ, ஈ, உ ஆகியவை
> - ◆ பணநிரம்பலுடன் *நேரான தொடர்பும்* (+)
>
> ❋ 4 வதில் ஆ, இ ஆகியவை
> - ◆ பணநிரம்பலுடன் எதிரான தொடர்பும் (-) உடையன என்பதை விளங்கிக் கொள்க.

## *ஏனையவை மாறின் இத்தொடர்பு கட்டாயமல்ல*

உதாரணம் :

1) வங்கிகள் தனியார்துறைக்கு கடன் வழங்கும் போது பணநிரம்பல் குறையலாம்

◆ *காரணங்கள்*

அ) வங்கிகளின் அரசதுறைக்கான கடன் அதைவிட பெருமளவால் குறைந்திருக்கலாம்.

ஆ) வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதைவிட பெருமளவால் குறைந்திருக்கலாம்.

2) *வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்காக* வங்கிகள் *அரசுத் துறைக்கு கடன்* வழங்கும் போது *பணநிரம்பல் குறையலாம்.*

◆ *காரணங்கள் :*

அ) அதைவிட பெருமளவால் தனியார் துறைக்கு வழங்கும் கடன் குறையலாம்.

ஆ) அதைவிட பெருமளவால் வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறையலாம்.

3. சென்மதி நிலுவை மிகை காரணமாக வங்கிகளின் வெளிநாட்டு சொத்துக்கள் அதிகரித்த போதும் பணநிரம்பல் குறையலாம் காரணங்கள் : அதைவிட பெருமளவால் வங்கிகள் உள்நாட்டில்;

❋ தனியார் துறைக்கு வழங்கும் கடன் குறையலாம்.

❋ அரசுத் துறைக்கு வழங்கும் கடன் குறையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## D இலங்கையின் பணநிரம்பல் கட்டமைப்பு
## Composition / Structure of Money Supply in Sri Lanka.

அ) குறுகிய பணநிரம்பல் $M_1$ கட்டமைப்பு

- "குறிப்பிட்ட காலப் பகுதியில் குறுகிய பணநிரம்பலில் சட்டப்பணம், வங்கிப்பணம் என்பன கொண்டிருக்கின்ற சதவீதப்பங்கு எவளவாக உள்ளது எனக் கூறுவது அதன் கட்டமைப்பாகும்."

  உ+ம் : 1998ல் இலங்கையின் குறுகிய பணநிரம்பலில் சட்டப்பணம் 54% வங்கிப்பணம் 46% ஆக இருந்தது.

- குறிப்பிட்ட கால இடைவெளியில் இத்தகைய சதவீதப் பங்கில் ஏற்படும் மாற்றம் குறுகிய பணநிரம்பல் கட்டமைப்பு மாற்றமாகும்.

| ஆண்டு | சட்டப்பணம் % | வங்கிப்பணம் % |
|---|---|---|
| 1970 | 49 | 51 |
| 1980 | 44 | 56 |
| 1988 | 57 | 43 |
| 1993 | 53 | 47 |
| 1995 | 56 | 44 |
| 1997 | 53 | 47 |
| 1998 | 54 | 46 |

*1970 - 1980* காலப்பகுதி *மாற்றம்*

1) சட்டப் பணத்தின் பங்கு குறைந்துள்ளது.
2) வங்கிப் பணத்தின் பங்கு அதிகரித்துள்ளது.

*காரணங்கள்*

அ) அரச வ. செ. திட்ட *பற்றாக்குறைக்கான நாணயவெளியீடு* குறைந்தமை
ஆ) வங்கித்துறை வளர்ச்சியினால் *காசோலைக்* கொடுக்கல் வாங்கல் அதிகரித்தமை

***1980 - 1988 காலப்பகுதி மாற்றம்***

1) சட்டப்பணத்தின் பங்கு அதிகரித்தமை
2) வங்கிப் பணத்தின் பங்கு குறைந்தமை

*காரணங்கள்*

அ) சமூக பொருளாதார அபிவிருத்தி, பாதுகாப்புச் செலவினங்கள் காரணமாக அதிகரித்த அரச வ. செ. திட்டப் பற்றாக்குறைக்காக நாணய வெளியீடு அதிகரித்தமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) இனக்கலவரம் (1983) *பயங்கரவாத நடவடிக்கைகள்* காரணமாக வங்கிக்கிளைகள் மூடப்பட்டதுடன், ***காசோலை*** நடவடிக்கை காசோலை நடவடிக்கை பாதிக்கப்பட்டமை

இ) 500, 1000 ரூபா தாள் நாணயங்கள் வெளியிடப்பட காசோலை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டமை.

*1988 - 1993 காலப்பகுதியில் மாற்றம்*

1) சட்டப் பணத்தின் பங்கு குறைந்தமை.
2) வங்கிப் பணத்தின் பங்கு அதிகரித்தமை.

*1990 - 1998 காலப் பகுதியில்* (முக்கியமானது)

கட்டமைப்பில் ஒரு தளம்பல் நிலை காணப்படுகிறது.

❋ குறுகிய பண நிரம்பலில் நாணயத்தின் பங்கு 53 - 56 சதவீதத்திற்கு இடைப்பட தளம்பலடைந்துள்ளது.

❋ மறுபுறம் வங்கிப் பணத்தின் பங்கு 44 - 47 சத வீதத்திற்கு இடையில் தளம்பியுள்ளது.

❋ இவ்வாறு சட்டப் பணத்தின் பங்கு உயர்வாகவும், வங்கிப் பணத்தின் பங்கு குறைவாகவும் இருப்பதற்கான *காரணங்கள்* /(கருத்துரைகள்) :

1) உள்நாட்டு யுத்தநிலைமைகளால் வங்கிப்பழக்கம், காசோலை மீதான நம்பிக்கை குறைந்தமை
2) கூடிய பெறுமதியுடைய (500 ரூபா, 1000 ரூபா, 5000 ரூபா) நாணய வெளியீடு அதிகரித்தமை. (உயர் பணவீக்கங்கள் கொண்ட நிலையில் இவை அவசியம்)
3) வ. செ திட்டப்பற்றாக்குறைக்கான நாணய வெளியீடு அதிகரித்தமை

❋ *அமெரிக்கா, பிரித்தானியா* போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளின் *குறுகிய பணநிரம்பலில் வங்கிப் பணத்தின் பங்கு* **80%** இற்கும் கூடுதலாகவுள்ள போதும் *இலங்கையில்* ***50%*** *இற்கு குறைவாகவே* உள்ளது. *இவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் :*

1) பணச்சந்தை வளர்ச்சி நிலைமைகள்
   அங்கு வங்கித்துறை வளர்ச்சியடைந்துள்ளதால் காசோலைப் புழக்கம் அதிகம்
   - இங்கு அவ்வாறில்லை
2) வ. செ. திட்ட பற்றாக்குறை நாணய வெளியீடு அங்கு குறைவு/ இல்லை
   - இங்கு அதிகம்
3) யுத்த நிலைமைகள் அங்கு இல்லை
   - இங்கு உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இலங்கையின் விரிந்த பணநிரம்பல் கட்டமைப்பு ($M_2$)*

| ஆண்டு | சட்டப்பணம் | வங்கிப்பணம் | போலிப்பணம் |
|---|---|---|---|
| 1970 | 30 | 33 | 37 |
| 1985 | 20 | 19 | 61 |
| 1989 | 26 | 20 | 54 |
| 1998 | 16 | 14 | 70 |

*1989 - 1998 காலப்பகுதியில் (1990 களில்) மாற்றம்*

1) சட்டப் பணத்தின்பங்கு குறைந்தமை
2) வங்கிப் பணத்தின் பங்கு குறைந்தமை
3) போலிப் பணத்தின் பங்கு அதிகரித்தமை

*காரணங்கள்*

அ) வணிக வங்கி வைப்பு மீதான வட்டி வீதங்கள் உயர்வாக இருந்தமை
ஆ) இதர நிதிநிறுவனங்களின் வட்டி வீதங்கள் குறைவாக இருந்தமை
இ) வணிக வங்கி அல்லாத ஏனைய துறைகள் மீதான நம்பிக்கை குறைந்தமை
ஈ) வணிக வங்கி வைப்புக்களை இலகுவாக மாற்றக்கூடிய வசதி - தன்னியக்க டெலர் பொறிகள்
உ) வணிக வங்கிகளின் வைப்புத் திரட்டல் வசதிகளின் செறிவுத் தன்மை அதிகரித்தமை.

## 1998 இல் பணநிரம்பல் - கருத்துரை

1998 இல் இலங்கையில் 50 சதவீதத்திற்கு மேலான குறுகிய பணநிரம்பல் ($M_1$) சட்டப்படி செல்லுபடியாகும் பணமாகவும், 69 சதவீதத்திற்கு மேலான விரிவாக பணநிரம்பல் ($M_2$) சேமிப்பு கால வைப்புக்களையும் கொண்டவையாக உள்ளன. இத் தரவுகளிலிருந்து பின்வரும் முடிவுகளைக் கூறலாம்.

- இலங்கையில் குறுகிய பணநிரம்பலில் ($M_1$) இல் தான் குற்றி நாணயங்களின் பங்கு ஒப்பீட்டு ரீதியில் அதிகமாக உள்ளது. (54%)
  - தாள் குற்றி நாணயங்களை விடக் **காசோலைகளின் புழக்கம் குறைவாக** உள்ளது. (46%)
- இலங்கையின் மொத்தப் பணநிரம்பலில் ($M_2$) தாள் குற்றி நாணயங்களினதும், கேள்வி வைப்புக்களினதும் பங்கு சுமார் 31% திலும் குறைவாக உள்ளது.
  - அதேநேரம் சேமிப்பு தவணை வைப்புக்களின் (போலிப்பணத்தின்) பங்கு உயர்வாக 70% வரை காணப்படுகிறது.
- இது மக்களிடையே பெருமளவில் **சேமிப்புப் பழக்கம்** காணப்படுவதை வெளிப்படுத்துகிறது. மக்கள் வட்டி உழைக்காத காசு காசோலைகளுக்கு பதில் **வட்டி, வருமானம் உழைக்கும்** சேமிப்பு வடிவில் செல்வத்தை வைத்திருக்க விரும்புவதைக் காட்டுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| |
|---|
| நாணயத்தளம் X நாணயப்பெருக்கி = விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$) |
| நாணயப்பெருக்கி = $\frac{\text{விரிந்த பண நிரம்பல் } (M_{2b})}{\text{நாணயத்தளம்}}$ |
| நாணயத்தளம் = $\frac{\text{விரிந்த பணநிரம்பல் } (M_2)}{\text{நாணயப்பெருக்கி}}$ |

- நாணயத்தளம் / ஒதுக்குப்பணம் / உயர்வலுப் பணம் / தள நாணயம் Monetary Base / Reserve Money / High Powered Money / Base Money
- நாணயப் பெருக்கி / பணப் பெருக்கி – Money Multiplier (இவை பற்றி பின்னிணைப்பில் மேலதிக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது)

## கடந்த காலப் பரீட்சை வினாக்கள் 1977 – 1998

- கட்டுரையின் உபதலைப்புக்கு ஏற்பவும், அவற்றின் தொடர்ச்சிக்கு ஏற்பவும் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது)
- விடைகள் அவ்வப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.
- அவசியமானவற்றிற்கு விடைகள் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

**I.** *பண்டமாற்றுப் பொருளாதாரம்*
பண்டமாற்று முறையுடன் ஒப்பிடும் போது பணத்தின் பயன்பாட்டின் அனுகூலங்கள் யாவை? (1983)

**II.** *பணத்தின் தோற்றம் - வளர்ச்சி*
பண்டைக் காலத்தில் பணமாகப் பயன்படுத்தப்பட்ட மூன்று பொருட்களைக் கூறுக.

**III.** *பணத்தின் வரைவிலக்கணம்*
பணம் என்றால் என்ன? (1981 பழைய)

**IV.** *பரிமாற்றூடகத்தின் பண்புகள்*
ஒரு நல்ல நாணயத்தின் அத்தியாவசிய குணாதிசயங்கள் யாவை?

**V.** *பணத்தின் தொழிற்பாடுகள்*

1) பணத்தினது பிரதான தொழிற்பாடுகளைக் கூறுக. (1997, 1991 விசேட)
2) பணத்தினது தொழிற்பாடுகளை விளக்குக. (1979, 1981)
3) "பணம் ஒரு பண்டமாற்று ஊடகமாகும்" என்ற கூற்றினால் கருதப்படுவது என்ன? (1979, 1990)
4) பணத்தின் குறிப்பிட்ட தொழிற்பாட்டின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக. (1990)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) "பணம்" ஒரு பெறுமானத்திரட்டாகும். இக்கூற்றினால் கருதப்படுவது என்ன? (1980, 1983, 1986, 1990, 1991)

6) பணத்தினது பயனுடைமையை ஒரு பெறுமானத் திரட்டாகச் சுருக்கும் காரணிகள் யாவை? (1980)

7) பணத்தினை மற்றைய சொத்துக்களில் இருந்து வேறுபடுத்தும் பிரதான இயல்பு என்ன? (1997 - புதிய - பகுதி - 1)

8) பணத்தின் முக்கியமான ஒரு தொழிற்பாடு பெறுமானத்திரட்டாக இருப்பதாகும். எவ்வித வட்டி வருமானத்தையோ தராத நிலையிலும் மக்கள் தமது செல்வத்தின் ஒரு பகுதியினைப் பண வடிவில் வைத்திருப்பது ஏன்? (1993, 1994)

9) "பணம் செல்வத்தின் களஞ்சியமாகும்" இத்தொழிற்பாட்டை நிறைவேற்றுவதில் பணத்தின் வரையறைகள் யாவை? (1990)

10) எச்சந்தர்ப்பத்தில் மக்கள் பணத்தினை ஒரு திரட்டாகக் கருதாதுவிடுவார்? (1993)

11) பின்வரும் எண்ணக்கருக்களிடையிலான வேறுபாட்டைத் தருக.
பணம் மாற்றூடகமாகவும், பெறுமானத்திரட்டாகவும் (1998 புதிய)

12) பணத்தின் மிக முக்கியமான அம்சம்
i. அது ஒரு கணக்கு அலகு
ii. அது பண்டமாற்றில் உள்ள கஷ்டங்களை நீக்குகின்றது.
iii. அது ஒரு பெறுமானத் திரட்டாகப் பயன்படக் கூடியது
iv. நிறைவான திரவத்தன்மை கொண்டது (1991) (பகுதி I)

13) பணமானது பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமம் எனப்படுவது ஏன்? (1985)

14) ஒரு தற்காலப் பொருளாதாரத்தில் பணத்தின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக. (1982)

15) "பணத்தின் உபயோகமின்றி நவீன பொருளாதாரத்திற்கு அடிப்படையான சிறப்புப் பயிற்சி, நாணய மாற்று என்பவைசார் சிக்கல் வாய்ந்த முறைமை சாத்தியமன்று" இக்கூற்றினை விளக்குக. (1990)

16. "இன்றைய நவீன பொருளாதாரமொன்றில் சிறக்குமியல்பும் தொழிற்பிரிப்பும் விருத்தியடைவதற்கு உதவியுள்ள முக்கிய ஒரு காரணி பணம் உபயோகிக்கப் படுகின்றமையாகும்" இக்கூற்றினை விளக்குக. (1994)

17. ஒரு பொருளாதாரத்தில் பணம் ஆற்ற வேண்டிய பங்கினைப் பணவீக்கமானது எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதை விளக்குக. (1994)

18. பணம் திறமையாகத் தனது தொழிற்பாடுகளை நிறைவேற்றும் தன்மை, அதனது கொள்வனவுச் சக்தியின் நிலைத் தன்மையில் பெருமளவுக்குத் தங்கியுள்ளது. இக்கூற்றினை விளக்குக (1998புதிய)

**VI.** பணத்தின் வகைகள்

1) நவீன சமூகமொன்றில் பயன்படுத்தப்படும் பணத்தின் வேறுபட்ட வகைகளைக் குறிப்பிட்டு, அவற்றை இனம் காண்க. (1989, 1991 விசேட)

2) சட்டப்படியான, பணம், வங்கி (வைப்பு)ப் பணம் என்பவற்றை வேறுபடுத்துக (1980, 1981)

3) வேறுபாட்டை எடுத்துக் காட்டுக
நாணயமும், வங்கிக் காசோலையும் (1990 விசேட)

4) வணிக வங்கிகளில் உள்ள கேள்விவைப்புக்கள் ஏன் பண நிரம்பலில் ஒரு பகுதியாகக் கொள்ளப்படும்.
i. அவற்றைச் சட்டப்படி செல்லுபடியாகும் பணமாக இலகுவாக மாற்றிக் கொள்ளலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. கொடுக்கல் வாங்கல்களைச் செய்துகொள்வதற்கு அவற்றைக் காசோலையினூடாக மாற்றமுடிகின்றது.

iii. அவை பாதுகாப்பானதும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு இலகுவானதாக-வும் விளங்குகின்றன.

iv. செல்வத்தினை சேகரித்து வைத்துக் கொள்வதற்கான ஒரு வழியாகின்றது. (1999) பகுதி I)

5) நாணயம், கேள்வி வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், நிலையான அல்லது தவணை வைப்புக்கள் ஆகிய வைப்புக்களிடையே உள்ள வேறுபாடுகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுக. (1979)

6) பின்வருவனவற்றை எந்தளவுக்குப் பணமாகக் கருதுவீர்?
வணிக வங்கியிலுள்ள சேமிப்பு வைப்புக்கள்
வணிக வங்கியிலுள்ள தவணை வைப்புக்கள் (1982)

7) ஒடுங்கிய பணம், அகன்ற பணம் என்பவற்றுக்கிடையேயுள்ள வித்தியாசத்தை விளக்குக. (1982, 1990, விசேட, 1995)

8) விரிவானபணம் என்று பொருள் தருவது

i. $M_1$ உம் சேமிப்பு வைப்புகளும்

ii. காசும் கேள்வி வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும், கடன் அட்டைகளும்

iii. சட்டப்படி செல்லுபடியாகும் பணமும் கேள்விவைப்புகளும், கிட்டிய பணமும்

iv. உயர்சக்திப் பணமும் சேமிப்பு வைப்புக்களும், நிலையான வைப்புக்களும் (1999 பகுதி I)

9) கீழ்வருவனவற்றுள் எவை அகன்ற பணத்தைச் சேராதவை?

i. குறுகிய பணம்

ii. அரசாங்க ஆவணங்கள்

iii. தொகுதிக் கடன்கள் (திபெஞ்சர்கள்)

iv. வர்த்தக வங்கிகளிலுள்ள நிலையான வைப்புக்கள் (1998 புதிய பகுதி I)

10) பணத்திற்கும் அண்மிய பணத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்குக? (1980, 1981, 1990, விசேட)

11) அண்மிய பணம் என்பதன் மூலம் கருதப்படுவது யாது? மூன்று உதாரணங்கள் தருக? (1990)

12) பின்வரும் சொத்துக்களில் எவற்றினைக் கிட்டிய பணமாகக் கருதுவீர்? நீர் தெரிவு செய்த விடையின் கீழ்க் கோடிடுக.

i. மூன்றுமாத திறைசேரி உண்டியல்கள்

ii. சேமிப்புக் கணக்குகள்

iii. நிலையான வைப்புக்கள்

iv. அரசாங்கப் பிணைகள்

v. ஒரு கம்பனியில் பங்குகள்

vi. காணித் துண்டொன்று (1997 புதிய - பகுதி - 1)

13. கிட்டிய பணம் என்பது என்ன? ஒரு பொருளாதார முறையினுள்ளே கிட்டிய பணத்தின் முக்கியத்துவம் என்ன? (1985)

14. வேறுபாட்டை எடுத்துக்காட்டும் வகையில் சிறுகுறிப்புக்கள் எழுதுக.
"அடையாள நாணயம் - அண்மிய (கிட்டிய) பணம்" (1992)

15. நாணயத் தாள்களை அச்சிடுவதற்கு ஏற்படும் செலவிலும் பார்க்க அவற்றின் பெறுமானம் கூடுதலாக இருப்பதேன்? (1985)

16. தனக்கென எவ்வித பெறுமதியற்ற கடதாசிப் பணமானது பெறுமதிமிக்க பண்டங்-களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யக் கையாளப்படுவது ஏன் (1993)

17. பணம், கிட்டியபணம், பணப்பதிலீடுகள் என்பவற்றை உதாரணங்களைக் கையாண்டு வேறுபடுத்திக் காட்டுக. (1993)

18. வேறுபாடுத்திக் காட்டுக. (1993)
- உண்ணாட்டுப் பணமும் வெளிநாட்டு நாணயமாற்றும் (1990விசேட)
- பணப்பதிலீடுகளும் கிட்டிய பணமும் (1998 புதிய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VII) *பணத்தின் கேள்வி*

1) திரவத் தேர்வு என்பதன் பொருள் யாது? (1997)
2) பின்வருவனவற்றில் எது ஏனையவற்றை ஒத்ததன்று?
   i) திரவத்தேர்வு
   ii) பணத்திற்கான கேள்வி
   iii) பணத்தின்நிரம்பல்
   iv) காசு நிலுவைகளுக்கான தேவை (1997 புதிய - பகுதி I)
3) திரவத் தன்மையையும் திரவத்தன்மை முன்னுரிமையையும் வேறுபடுத்துக. (1998 புதிய)

## VIII) *பண நிரம்பல்*

1) *பணநிரம்பல்* என்றால் என்ன? (1976)
2) வணிக வங்கிகளிலுள்ள *கேள்விவைப்புக்கள்* (வைப்புப்பணம்) பணவழங்கலின் (நிரம்பலின்) ஒரு பகுதியாக ஏன் கருதப்படுகிறது? (1980, 1981)
3) இலங்கை மத்திய வங்கியானது இருவகைப் பண நிரம்பல் சம்மந்தமாகப் புள்ளி விபரங்களை அளிக்கின்றது. இவ்விருவகைகளையும் தெளிவாக வேறுபடுத்துக (1993)
4) பின்வருவனவற்றை எந்தளவுக்குப் பணமாகக் கருதுவர்?
   அ) வணிக வங்கிகளில் உள்ள கேள்விவைப்புக்கள்
   ஆ) வணிக வங்கிகளில் உள்ள தவணை வைப்புக்கள் (1982, 1987)
5) இலங்கையில் பயன்படுத்தப்படும் பணநிரம்பல் பற்றிய பின்வரும் வரைவிலக்-கணங்களின் இடைவெளிகளை நிரப்புக.
   அ) $M_1$ = ............................ + ......................
   ஆ) $M_2 = M_1$ + ...............................................
   (1997 புதிய - பகுதி - 1)
6) வர்த்தக வங்கிகளிலான கால சேமிப்பு வைப்புக்கள் விரிந்த பண நிரம்பலின் ஒரு கூறாகக் கொள்ளப்படுவது ஏன்? (1988)
7) *"கிட்டியபணம்"* என்பது என்ன? (1995, 1990)
   ஒரு பொருளாதார முறையினுள்ளே கிட்டிய பண வழங்கலின் *முக்கியத்துவம்* என்ன?
   அண்மிய பணத்திற்கு மூன்று உதாரணங்கள் தருக (1990)
8) 1995இல் விரிந்த பணநிரம்பல் ($M_2$) 19.2 சதவீதத்தால் அதிகரிக்க குறுகிய பணநிரம்பல் ($M_1$) 6.7 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது.
   அ) $M_1$ ஐயும், $M_2$ ஐயும் வேறுபடுத்துக.
   ஆ) எச்சந்தர்ப்பங்களில் $M_2$, $M_1$ இலும் பார்க்கக் குறிப்பிடத்தக்க உயர்ந்த வேகத்தில் அதிகரிக்கக்கூடும் (1996)
9) அகன்ற (விரிந்த) பணநிரம்பலை மதிப்பீடு செய்வதன் நோக்கம் யாது? (1989)
10) *எக்காரணிகள்* ஒரு நாட்டின் பணநிரம்பலைத் தீர்மானிக்கின்றன?
11) ஒரு நாட்டின் *ஒடுங்கிய பணநிரம்பலில்* மாற்றங்களை உண்டாக்கும் *காரணிகள்* யாவை? (1982)
12) ஒரு நாட்டின் *பண வழங்கலில்* பின்வருன எத்தகைய *தாக்க விளைவை* உண்டாக்கும்?
   அ) வங்கித் தொழில் முறையின் வெளிநாட்டு ஒதுக்குகளில் உண்டாகும் வீழ்ச்சி
   ஆ) மத்திய வங்கியிலிருந்து அரசாங்கக் கடன்படலில் உண்டாகும் அதிகரிப்பு (1986)
13) அண்மை ஆண்டுகளில் *இலங்கையின் ஒடுங்கிய பணநிரம்பலின் கட்டமைவு* – (Composition) யாதாயிருந்தது? (1982)
14) அண்மைக்காலத்தில் இலங்கையிலே பணவழங்கலின் ($M_1$) அமைப்பினைச் சுருக்கமாக விபரித்துக் கருத்துரை வழங்குக. (1991)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) 1980இல் இலங்கையின் *ஒடுங்கிய பணநிரம்பலில் அதிகரிப்பை,* ஏற்படுத்திய பிரதான மூலகங்கள் யாவை? (1982)

16)

| *ஆண்டு* | *பொதுமக்கள் வைத்திருந்த நாணயம்(மில் - ரூபா)* | *பொது மக்கள் வைத்திருந்த கேள்வி வைப்புக்கள் (மில் - ரூபா)* |
|---|---|---|
| 1978 | 3015 | 2 921 |
| 1979 | 3777 | 3 895 |
| 1980 | 4181 | 5 247 |

மேற்போந்த தரவிலிருந்து பணநிரம்பல் சம்மந்தமாக நீர் பெறக்கூடிய *முக்கியமான முடிவுகள்* யாவை? (1981)

17) பின்வரும் கூற்றுக்களை விளக்கிக் கருத்துரை தருக.

i) 1982 ஆம் ஆண்டினூ*டாக* $M_1$ *இன் கேள்வி வைப்புக்கூறானது* 52 சத வீதத்திலிருந்து 49 சத வீதத்திற்குக் குறைந்தது.

ii) 1982 ஆம் ஆண்டில் முடிவில் *கிட்டிய மொத்த பணநிரம்பலானது* 18750 மில்லியன் ரூபாத் தொகையாக இருந்தது. $M_1$ ஆனது 11780 மில்லியன் ரூபாத் தொகையாக இருந்தது (1984)

18) இலங்கையின் பண நிரம்பலில் ($M_1$) நாணயத்தின் முக்கியத்துவம் 1983இல் 49 சதவீதத்திலிருந்து 1986 இல் 55 சதவீதத்திற்கு அதிகரித்தது. இத்தகைய ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய *காரணிகள்* யாவை?
மேலே குறிப்பிட்ட காலப்பகுதியைப் பொறுத்தளவில் இவற்றுள் *இலங்கைக்குப் பொருத்தமான மிக முக்கிய காரணி* எது? (1987)

19) இலங்கையில் 50 சதவீதத்திற்கு மேலான குறுகிய பணநிரம்பல் ($M_1$) சட்டப்படி செல்லும்படியாகும் பணமாகவும், 79சதவீதத்திற்கு மேலான விரிவான பணநிரம்பல் ($M_2$) சேமிப்பு காலவைப்புகளையும் கொண்டவையாக உள்ளன. இத்தரவுகளில் இலிருந்து என்ன முடிவுகளைக் கூறுவீர்? (1999)

20) பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் தொடர்பாக நீர் எம் முடிவுக்கு வரலாம்?

i) பணநிரம்பலில் ($M_1$) *கேள்விவைப்புக்களின் பங்கு* 1983 - 1988 காலப் பகுதியில் 51 சதவீதத்திலிருந்து 43 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

ii) மொத்த நாணய வெளியீட்டில் *ரூபா 1000, ரூபா 500* நாணயத் தாள்களில் பங்கு 1983 - 1988 காலப்பகுதியில் 43 சதவீதத்திலிருந்து 66 சதவீதமாக அதிகரித்துள்ளது. (1989)

21) 1995 இல் *சென்மதி நிலுவையில் சமூலக்குறைநிலை* காணப்பட்டதுடன் பண நிரம்பலின் மீது *வெளிநாட்டுக் காரணிகளின் அமுக்கம்* இருக்கவில்லை. இக் கூற்றின்றும் விளங்கிக் கொள்வது யாது? (1996)

22) இலங்கையின் பண வழுங்கலின் அமைப்பை விவரித்து அது *அபிவிருத்தியடைந்த முதலாளித்துவ நாடொன்றின்* பணவழுங்கலின் அமைப்பினின்றும் எவ்வாறு வேறுபடுகின்றதெனக் காட்டுக. (1981)

23) *"ஐக்கிய அமெரிக்காவில்* மொத்தப் பணவழுங்கலிலே வங்கிப்பணத்தின் விகித சமம் ஏறத்தாழ 80 சதவீதமாக இருந்தபோதும் இலங்கையிலே இதற்கு ஒப்பான விகிதசமம் கிட்டத்தட்ட 50 சதவீதமாக மாத்திரமே இருக்கின்றது" இரு நாடுகளுக்கிடையேயுள்ள இந்த வித்தியாசத்திற்கு எவ்வாறு காரண விளக்கங் கூறுவீர்? (1986)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சி வினாக்கள்

- அவசியமானவற்றிற்கு விடைகள் இறுதியில் வழங்கப்பட்டுள்ளன.
- ஏனையவற்றிற்கு அந்த உப பகுதியை திரும்பப் படிப்பதன் மூலம் பெறலாம்.

I) 1) ........................................................ என்ற கருவி அறிமுகப்படுத்தப்பட முன்னர் *பண்டமாற்றுப் பொருளாதாரமே* நிலவியது.

2) பண்டமாற்று முறையிலுள்ள குறைபாடுகள் யாவை?

3) பின்வருவனவற்றில் பண்டமாற்று முறையிலுள்ள பிரச்சினையாக கருதக்கூடிய-வற்றின் கீழ் கோடிடுக.

i) பொருளாதாரக்கொடுக்கல் வாங்கல் விரிவடையத் தடையாக அமைந்தது
ii) தொழிற்பிரிப்புநிலை காணப்பட்டமை
iii) பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்தியது
iv) நாணய மாற்றுச் சிக்கல்கள் தோன்றியது
v) இரட்டைத் தேவைப் பொருந்துகை நிலவியது

II) 1) பரிமாற்று ஊடகமொன்று ஏன் அவசியமானது?

2) பணம் தோன்றக் காரணம் .................... நிலவிய குறைபாடுகளாகும்

3) பணமாகப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு பொருட்களைக் குறிப்பிடுக.

4) பண்டங்களைப் பணமாகப் பயன்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் யாவை?

5) பணத்தின் வளர்ச்சிப் படிநிலைகளை ஒழுங்குபடுத்துக.
பிரதிநிதித்துவ நியமப்பணம், பண்டப்பணம், அடையாளப்பணம்.

6) "பிரதிநிதித்துவ நியமப்பணம்" என்பதற்கு விளக்கம் தருக.

7) பின்வருவனவற்றில் அடையாளப்பணமாக கொள்ளக்கூடிய

i) சட்டப்பணம் ii) தங்கநாணயங்கள்
iii) தங்கப்பற்றுச்சீட்டு iii) காசு
v) கட்டளைப் பணம் vi) நாணயங்கள்

III) பணம் என்பதற்கு *வரைவிலக்கணம்* கூறுக.

IV) 1) *பரிமாற்று ஊடகமொன்றிற்கு* இருக்க வேண்டிய மிக முக்கிய *பண்பு* யாது?

2) பரிமாற்றூடகம் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்

i) சுமக்கப்படும் தன்மை ii) பிரிபடாத்தன்மை
iii) அருமைத் தன்மை iv) போலிகள் அற்ற தன்மை
v) ஒத்ததன்மையின்மை

3) இலங்கையில் வெளியிடப்படும் நாணயங்களில் பரிமாற்றூடகத்திற்குரிய எவ்வெப் பண்புகள் ஓரளவு இல்லாதிருக்கின்றன என்பதை உதாரணங்கள் மூலம் குறிப்பிடுக

V) 1) i) *பணத்தின் தொழிற்பாடுகளைக்* குறிப்பிடுக.

ii) அவற்றை முதன்மைத் தொழிற்பாடுகள், வருவிக்கப் பெற்ற (வழிவந்த) தொழிற்பாடுகள் எனப் பாகுபடுத்துக.

iii) அதேபோல அவற்றை பரிமாற்றுத்தொழிற்பாடுகள், சொத்துத் தொழிற்பாடுகள் எனப் பாகுபடுத்துக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) பணம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துவதற்கு அவசியமான அதன் இரு முக்கிய தொழிற்பாடுகள் எவை?

3) "பணம் செலாவணி ஊடகமாகத் தொழிற்படுகிறது" என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

4) பணத்தின் பரிமாற்றூடகத் தொழிற்பாட்டை விளக்கும் சரியான தொடர்பு
   i) பணம் ............................ பண்டம்1. .................................. பண்டம்2
   ii) பண்டம்1 ............................ பணம் .................................. பண்டம்2
   iii) பணம். ............................ பண்டம .................................. பணம் 2
   iv) பண்டம் 1. ............................ பண்டம் 2. .................................. பணம்
   v) பணம் 1. ............................ பண்டம் 1. .................................. பணம் 2

5) தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி, சர்வதேச வர்த்தகம், நாணயமாற்று என்பன பணத்தின் - தொழிற்பாட்டின் அடிப்படையில் தோன்றியதாகும்.

6) i) "பணம் ஒரு கணக்கீட்டு அலகு ஆகும்" என்பதனாற் கருதப்படுவது யாது?
   ii) பணத்தின் இக் குறிப்பிட்ட தொழிற்பாட்டின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக.

7) பணத்தின் பெறுமானத்திரட்டுத் தொழிற்பாட்டின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக.

8) பணத்தை வைத்திருப்பதற்கான அமயச்செலவு யாது?

9) "திரவத்தன்மை" என்பதற்கு வரைவிலக்கணம் தருக.

10) பின்வரும் சொத்துக்களைத் திரவத்தன்மையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்துக.
   i) திறைசேரி உண்டியல் ii) அரச ஆவணங்கள்
   iii) 50 ரூபா iv) வீடு
   v) வங்கி நடைமுறைக்கணக்கு v) தனியார் கம்பனியின் சாதாரண பங்கு

11) பணரீதியற்ற சொத்துக்களின் வடிவத்தில் செல்வத்தை வைத்திருப்பதிலுள்ள அனுகூலம் யாது? பிரதிகூலம் யாது?

12) பணத்தின் பெறுமானத்திரட்டு தொழிற்பாட்டை ஊக்குவிக்கும் காரணிகள் யாவை?

13) உயர் பணவீக்கம் நிலவும் போது பணத்தின் (உள்ளீட்டுப்பெறுமதி/கொள்வனவு ஆற்றல்) (உயர்ச்சி /வீழ்ச்சி) அடைவதனால் மக்கள் பணத்தினைப் பெறுமானத் திரட்டாக (கருதுவர் / கருதாதுவிடுவர் /பேண முற்படுவர்)

14) நாணயமற்ற சொத்துக்களைக் காசாக மாற்றுவது இலகுவானால் பணத்தை வைத்திருப்பது (விரும்பப்படும் / விரும்படமாட்டாது)

15) அ) பணத்தின் பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமத் தொழிற்பாட்டின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக
   ஆ) இத்தொழிற்பாட்டிற்கு மிக அவசியமானது
      i) பணத்தை இலகுவாக எடுத்துச் செல்ல முடிதல்
      ii) பணத்தை இலகுவாக இனங்காண முடிதல்
      iii) பணத்தின் பெறுமதி உறுதியாக இருத்தல்
      iv) ஒரே மதிப்புள்ள நாணயம் ஒரே தன்மை கொண்டதாக இருத்தல்
      v) போலிகள் இல்லாதிருத்தல்

16) பணத்தின் தொழிற்பாடுகளைப் பணவீக்கம் எவ்வகையில் பாதிக்கும் என்பதைச் சுருக்கமாக விளக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI) *பணத்தின் வகை*

1) "நாணயங்கள் ஏன் "சட்ட இறுமதி (Legal Teder)" என அழைக்கப்படுகின்றன?
2) சட்டப்பணம் = தாள் நாணயங்கள் + ..................................................
3) புழக்கப்பணம் .................................. ஆல் வெளியிடப்படுகின்றது. அது தனது .................................. அடிப்படையில் அவற்றை வெளியீடு செய்கின்றது. ..................................கும் புழக்கப்பண வெளியீட்டிற்குமிடையே (நேரான / எதிரான/ பூச்சிய) தொடர்புண்டு
4) சட்டப்பணம் ஏற்கப்படாத சந்தர்ப்பங்கள் எவை?
5) வரையறுக்கப்பட்ட சட்டப்பணம் வரையறுக்கப்படாத சட்டப்பணம் என்பவற்றை வேறுபடுத்துக.
6) வர்த்தக வங்கியிலுள்ள பொதுமக்களின் கேள்விவைப்புக்களைப் பணமாகக் கருதுவதற்கான காரணம் யாது?
7) பணம், நாணயம் என்பவற்றை வேறுபடுத்துக.
8) பின்வரும் சொற்களை பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.
(கிட்டிய/ வங்கிப் / சட்டப் /போலிப் /பிரதிப்)
   i) மத்திய வங்கியினால் வெளியிடப்படும் நாணயங்கள் .................. பணம்
   ii) விரைவாகவும் எளிதாகவும் பணமாக மாற்றத்தக்க சொத்துக்கள் .............. பணம்
   iii) வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் பெயரிலுள்ள கேள்வி வைப்புக்கள் .................................. பணம்
   iv) கடன் அட்டைகள் .................................. பணம்
   v) வர்த்தக வங்கியிலுள்ள தனியார் துறையின் தவணை சேமிப்புக்கள் .................................. பணம்
   vi) திறை சேரி உண்டியல்கள் .................................. பணம்
9) போலிப் பணத்தின் முக்கிய கூறுகள் எவை?
10) .................................. = சேமிப்புவைப்பு + தவணை வைப்பு
11) சேமிப்பு, தவணை வைப்புக்கள் பணமாகக் கருதப்படுவதற்கான காரணங்கள் யாவை?
12) பொருளாதாரமொன்றில் போலிப்பணத்தின் முக்கியத்துவம் யாது?
13) கிட்டிய பணம் குறித்து சரியான கூற்று/ கூற்றுக்கள்
   i) பரிமாற்றூடமாகத் தொழிற்படுகிறது.
   ii) பெறுமானத்திரட்டாக தொழிற்படுகிறது
   iii) பரிமாற்றூடகமாகத் தொழிற்படுவதில்லை
   iv) பெறுமானத்திரட்டாகத் தொழிற்படுவதில்லை
   v) பரிமாற்றூடகமாகவும், பெறுமானத்திரட்டாகவும் தொழிற்படுகிறது
   vi) உயர் திரவத்தன்மை வாய்ந்தவை
14) கிட்டிய பணமாகவும் போலிப்பணமாகவும் கருதப்படுபவை யாவை?
15) போலிப்பணத்திற்கு மேலதிகமாக கிட்டிய பணத்திற்குள் அடங்குபவை யாவை?
16) பணத்திற்கும், அண்மிய பணத்திற்குமான பிரதான வேறுபாடு யாது?
17) குறுகிய பணத்தின் முக்கிய இரு கூறுகள் யாவை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) i) $M_0 + DD =$ ....................

ii) $M_2 = M_0 +$ ........... + ..........

19) பொதுவாகப் பணமெனக் கருதப்படுவது (வங்கிப்/ குறுகிய / விரிந்த / அண்மிய / போலிப்) பணம்.

20) குறுகிய பணத்திற்கு மேலதிகமாக விரிந்த பணத்திற்குள் அடங்குவது (சட்டப் /வங்கிப் / அண்மிய/ பிரதிப்) பணம்

21) i) $M_2 =$ ......................... + அண்மியபணம்

ii) $M_2 =$ ............................ + போலிப் பணம்

iii) $M_2 =$ ............................ + சேமிப்புவைப்பு + தவணைவைப்பு

iv) $M_2 =$ சட்டப்பணம் + ...................... + போலிப்பணம்

v) $M_2 =$ சட்டப்பணம் +....................... + தவணைசேமிப்பு வைப்பு

22) குறுகிய பணநிரம்பலுக்குள் அடங்குவன,

i) வங்கிகளிலுள்ள நாணயங்கள்

ii) வங்கிகளிலுள்ள சேமிப்பு வைப்புக்கள்

iii) வர்த்தக வங்கிகளிலுள்ள பொது மக்களின் நடைமுறைக் கணக்கு

iv) பொதுமக்களிடமுள்ள நாணயங்கள்

v) மத்திய வங்கியிலுள்ள நாணயங்கள்

23) விரிந்த பணத்தைப் பிரதிபலிக்கக் கூடிய இரு கூறுகள்

i) பிரதிப்பணம்

ii) குறுகிய பணம்

iii) சட்டப்பணம்

iv) வங்கிப்பணம்

v) அண்மியபணம்

vi) சேமிப்புவைப்பு

24) பிரதிப்பணம் என்பதால் கருதப்படுவது யாது?

25) (சட்டப் / வங்கிப் / பிரதிப் / போலிப் / கிட்டிய) பணம் அதிகளவுக்கு பயன் படுத்தப்படுவதனால் பணப் புழக்கமற்ற சமூகம் உருவாகிறது

26) பணப்பதிலீடு குறித்துச் சரியான கூற்றுக்கள்

i) பரிமாற்றூடகம்

ii) பெறுமானத்திரட்டு

iii) பரிமாற்றூடகமல்ல

iv) பெறுமானத்திரட்டு அல்ல

v) காசு காசோலைக்கு பதிலாக பாவிக்கப்படுபவை

vi) இதன் பாவனை அதிகரிப்பது சட்டப்பணத்தின் சுழற்சி வேகத்தை அதிகரிக்கும்

27) பின்வரும் பணவகைகள் பற்றி நீர் விளங்கிக் கொள்வது யாது?

i) நியமப் பணம்

ii) அடையாளப் பணம்

iii) கட்டளைப்பணம்

iv) உள்நாட்டுப்பணம்

v) வெளிநாட்டு நாணயமாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28) திறைசேரி உண்டியல்கள் கடன்அட்டைகள், காசுத்தாள், சேமிப்புத்தவணை வைப்பு, மாற்றுண்டியல், வைப்புச் சான்றிதழ் மாஸ்டர்காட், நாணயக்குற்றிகள்- இவற்றைப் பின்வருமாறு பாகுபடுத்துக.

| பணம் | கிட்டிய பணம் | பணப்பதிலீடுகள் |
|---|---|---|
| | | |

VIII) 1) *பணத்திற்கு கேள்வி* எழுவதற்கான காரணிகள்/ தூண்டுதல்கள் யாவை?

2) பணத்திற்கான கேள்வியை நிர்ணயிக்கும் இரு பிரதான காரணிகள் எவை?

3) பின்வருவனவற்றிற்கு விளக்கம் தந்து அவற்றை நிர்ணயிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக.
   i) பணத்தின் கொடுக்கல் வாங்கல் நோக்க கேள்வி
   ii) பணத்தின் முன்னெச்சரிக்கை நோக்க கேள்வி
   iii) பணத்தின் ஊக நோக்க கேள்வி

4) திரவத்தேர்வு என்பதனால் கருதப்படுவது யாது?

5) திரவத் தேர்வு அதிகரித்தல் என்பதனால் கருதப்படுவது யாது?

6) சேமிப்பு - பணத்திற்கான கேள்வி இரண்டையும் வேறுபடுத்துக.

7) எதிர்பார்க்கும் வட்டிவீதம் பணத்திற்கான கேள்வியில் எப்படிச் செல்வாக்குச் செலுத்துகின்றது?

8) ஒருவரின் சராசரி வாராந்த வருமானம் 700 ரூபா எனவும், அதனை வாரம் முழுவதும் கொடுக்கல் வாங்கல்களுக்குச் சமமாகச் செலவிட்டு முடிக்கிறார் எனவும் கொள்வோம்.
   i) வாராந்தம்
   ii) மாதாந்தம் - சம்பளம் வழுங்கப்படின் சராசரியாக அவர் வைத்திருக்கும் பணத்தின் அளவு யாது?
   iii) வருமானம் இரட்டிப்பின் அது மேற்காட்டிய (i), (ii) இற்கான விடைகளை எப்படிப் பாதிக்கும்?

9) ஏனையவை மாறாத நிலையில் வைத்திருக்கும் பணநிலுவைகளை அதிகரிக்கச் செய்யக் கூடியது / கூடியவை
   1) சம்பளம் முழுவதும் வாராந்தம் வழங்கப்படுவதற்குப் பதில் மாதாந்தம் வழங்கப்படுதல்
   2) மொத்த வருமான மட்டத்தில் வீழ்ச்சி
   3) வட்டிவீதம் உடனடியாக உயர் மட்டத்திற்கு அதிகரிக்கும் என மக்கள் எதிர் பார்த்தல்

   i) 1வது ii) 1வதும் 3வதும் iii) 2வதும் 3வதும் iv) 1வதும் 2வ்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) எந்நிலைமையில் பணத்திற்கான வட்டிசார் நெகிழ்ச்சி முடிவிலியாக இருக்கலாம்?

11) பின்வரும் மாற்றங்கள் பணத்திற்கான கேள்வியை எவ்வகையில் பாதிக்கும் என்பதை விளக்குக.

i) கடன் அட்டைப் பாவனை அதிகரித்தல்
ii) முறிகளில் (Bonds) இருந்தான விளைவு வீதம் (Rate of Return) அதிகரித்தல்
iii) பொது விலை மட்ட வீழ்ச்சி
iv) வட்டி வீத வீழ்ச்சி
v) கிட்டிய பணத்தின் பாவனை அதிகரித்தல்

12) வேறுபடுத்துக.

i) பணத்தின் கொடுக்கல் வாங்கல் கேள்வி - முன்னெச்சரிக்கைக் கேள்வி
ii) பணத்தின் கொடுக்கல் வாங்கல் கேள்வி - ஊகநோக்கக் கேள்வி
iii) பணத்தின் செய்வினை நிலுவை - செயற்பாட்டு நிலுவை


13) (கொடுக்கல் வாங்கல், முன்னெச்சரிக்கை, ஊக) என்பவற்றில் பொருத்தமானதை இடைவெளிகளில் பயன்படுத்துக,

i) *நிதிச்சொத்துக்களில் முதலிடுவதற்காக* வைத்திருக்கும் பணத்தின் அளவு பணத்தின் ................................ நோக்ககேள்வி.
ii) *திட்டமிட்ட செலவுக்காக* ஒதுக்கி வைத்திருக்கும் பணத்தின் அளவு பணத்தின் ................................ நோக்ககேள்வி
iii) *திட்டமிடப்படாத செலவுக்காக* ஒதுக்கிவைத்திருக்கும் பணத்தின் அளவு பணத்தின் ................................ நோக்கக்கேள்வி

14) பணத்தின் செய்வினை நிலுவைக் கேள்வி (வருமானத்தின் / வட்டிவீதத்தின்) ஒரு தொழிற்பாடாகும். அதனுடன் (நேரான / எதிரான / பூச்சியத்) தொடர்புடையதாகும். அது (வருமானத்துடன் / வட்டிவீதத்துடன் / பொதுவிலை மட்டத்துடன்) தொடர்பற்றதாகும்.

15) பணத்தின் புழக்கக் கேள்வி + பாதுகாப்பு கேள்வி = ................................ இது பிரதானமாக ........................................ ஒரு தொழிற்பாடாகும்.

16) வரைபடம் குறித்து சரியானது/ சரியானவை.




i) பணத்தின் புழக்க கேள்விக்கோடு
ii) பணத்தின் முன்னெச்சரிக்கைக் கேள்விக் கோடு
iii) பணத்தின் ஊகநோக்க கேள்விக்கோடு
iv) பணத்தின் கேள்விக்கோடு
v) திரவத்தேர்வு வளையி

17) எதிர்கால வட்டிவீதத்திற்கும் முறிகளின் விலைக்குமிடையிலான தொடர்பை விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) பரிமாற்றூடகம் / பெறுமானத்திரட்டு ஆகியவற்றில் மிகப் பொருத்தமானதை இடைவெளியில் எழுதுக.

i) புழக்க கேள்வி ................................ ii) பாதுகாப்புகேள்வி ..........................

iii) ஊககேள்வி .................................... iv) செய்வினை நிலுவை .......................

v) செயற்பாட்டுநிலுவை .......................

19) i) $MD_T + MD_P +$ ........................... = MD = L

ii) வட்டிவீதம் என்பது ................................................ விலையாகும், ஏனையவை மாறாத நிலையில் பணத்தின் .................................. அதிகரிப்பின் வட்டிவீதம் அதிகரிக்கும் பணத்தின் ..............................அதிகரிப்பின் வட்டிவீதம் குறையும்.

20) பின்வரும் தகவல்களின் அடிப்படையில் வட்டிவீதத்தைக் காண்க.

i) மொத்தப்பண நிரம்பல் 6000 மி.ரூபா

ii) தற்போதைய தேசிய வருமான மட்டத்தில் பணத்தின் செய்வினை நிலுவைக் கேள்வி 2000 மில். ரூபா

iii)

| *வட்டிவீதம்* | *பணத்தின் செய்வினையற்ற நிலுவைக்கேள்வி (மில்.ரூபா)* |
|---|---|
| 10 | 2000 |
| 9 | 2400 |
| 8 | 4000 |
| 7 | 7000 |
| 6 | 11000 |

VIII) 01) பின்வருவனவற்றில் மிகக்குறுகிய பணநிரம்பலிற்குள் அடங்குவது /அடங்குவன.

i) திறைசேரியிலும் கச்சேரியிலும் வைத்திருக்கப்பட்ட நாணயங்கள்

ii) பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயங்கள்

iii) பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்விவைப்புக்கள்

iv) மத்தியவங்கியிலும் வர்த்தக வங்கியிலுமுள்ள நாணயங்கள்

v) வர்த்தக வங்கிகளிலுள்ள பொதுமக்களின் கேள்வி வைப்புக்கள்

02) i) மிகக்குறுகிய பணநிரம்பல் ii) குறுகிய பணநிரம்பல்

iii) விரிந்த பணநிரம்பல் iv) மேலும் விரிந்த பணநிரம்பல்

அ) ஒவ்வொன்றையும் விளக்குக.

ஆ) ஒன்றிலிருந்து அடுத்ததை வேடுபடுத்தும் அம்சங்களை இனங்காண்க.

03) i) குறுகிய பணநிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

ii) அவற்றுக்கு மேலதிகமாக விரிந்த பணநிரம்பலை/போலிப் பணநிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

iii) பண நிரம்பலை நிர்ணயிக்கும் உள்நாட்டுக் காரணிகள் யாவை?

iv) பணநிரம்பலை நிர்ணயிக்கும் வெளிநாட்டுக் காரணிகள் யாவை?

04) பின்வரும் மாற்றங்கள் பணநிரம்பலில் கட்டாயமாகவே அதிகரிப்பினை ஏற்படுத்துமா? விளக்கம் தருக.

i) தனியார் துறைக்கான வணிக வங்கிக்கடன் அதிகரிப்பு

ii) அரசுக்கான வங்கிக்கடன் அதிகரிப்பு

iii) மத்திய வங்கியிலுள்ள தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் அதிகரிப்பு

05) அண்மை ஆண்டுகளில் இலங்கையின் குறுகிய பணநிரம்பலில் சட்டப்பணம், வங்கிப்பணம் என்பவற்றின் முக்கியத்துவம் யாது? அது பற்றி கருத்துரைக்குக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06) இலங்கையின் பணநிரம்பல் தொடர்பாக $M_{2b}$ என்பதனால் கருதப்படுவது யாது?

07. அண்மை ஆண்டுகளில் இலங்கயில் விரிந்த பணநிரம்பலின் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை? அம்மாற்றங்களை ஏற்படுத்திய காரணிகள் யாவை?

08. அண்மை ஆண்டுகளில் இலங்கையின்,

அ) குறுகிய பணநிரம்பலில் சட்டப்பணத்தின் முக்கியத்துவம் எவ்வளவு?

i. 20 – 30 ii. 30 – 40 iii. 50 – 60

iv. 70 – 80 v. 80 – 90 சதவீதம்

ஆ) விரிந்தபணநிரம்பலில் போலிப்பணநிரம்பலின் முக்கியத்துவம் எவ்வளவு?

i. 35 – 45 ii. 45 – 55 iii. 55 – 65

iv. 65 – 75 v. 85 – 95 சதவீதம்

09. அண்மையாண்டுகளில் மொத்தப் பணநிரம்பலில் போலிப்பணநிரம்பலின் பங்கு அதிகரித்தமைக்கான காரணங்கள் யாவை?

10. i) .................................................. × நாணயப்பெருக்கி = விரிந்த பணநிரம்பல்

ii) நாணயப்பெருக்கி = விரிந்தபணநிரம்பல் ÷ ..................................................

11.

| | (மில். ரூபாவில்) |
|---|---|
| மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட மொத்த நாணயங்கள் | 53100 |
| ◆ அரசிடமுள்ள (திறைசேரி, கச்சேரியிலுள்ள) நாணயங்கள் | 100 |
| ◆ மத்திய வங்கியிலும் வர்த்தக வங்கியிலும் உள்ள நாணயங்கள் | 7400 |
| ◆ மத்திய வங்கியிலும் வர்த்தகவங்கியலுமுள்ள மொத்தக் கேள்வி வைப்புக்கள் | 127000 |
| ◆ மத்திய வங்கியிலும் வர்த்தக வங்கியிலுமுள்ள அரச கேள்வி வைப்புக்கள் | 16000 |
| ◆ வங்கிகளுக்கிடையிலான கேள்வி வைப்புக்கள் | 70000 |
| ◆ வர்த்தக வங்கிகளுடனான தனியார்துறையின் தவணை சேமிப்பு வைப்புக்கள் | 202000 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக

i. மிகக்குறுகிய பணநிரம்பல் ($M_0$)

ii. குறுகிய பணநிரம்பல் ($M_1$)

iii. விரிந்த பண நிரம்பல் ($M_2$)

iv. போலிப்பணநிரம்பல் (Qm)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள் (அவசியமானவற்றிற்கு மட்டும்)

## *கடந்த காலப் பரீட்சை வினாவுக்கான விடைகள்*

**V** 7. பூரணதிரவத்தன்மை, 12. (iv)

**VI** 4. (ii) 8.(iii) 9. (ii),(iii) 12. (i), (ii), (iii)

**VII** 2. (iii)

**VIII** 5. (i) **பொதுமக்களிடமுள்ள** நாணயங்கள் + பொதுமக்களின் கேள்விவைப்புக்கள்

(ii) **வர்த்தகவங்கிகளிலுள்ள தனியார்துறையின்** தவணை சேமிப்புவைப்புக்கள்

16. 1978 - 1980 காலப்பகுதியில்,

- பொதுமக்கள் வைத்திருந்த நாணயத்தின் அதாவது **புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு** அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பினைக் கொண்டு இலங்கையின் பணநிரம்பல் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது.
- இதுபோன்றே பொதுமக்கள் வைத்திருந்த கேள்வி வைப்புக்களின் தொகையும் **நாணயத்தை விட கூடுதலாக அதிகரித்துள்ளது**. இவ்வதிகரிப்பும் நாட்டின் பணநிரம்பல் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது.
- பணநிரம்பல் பொதுமக்களிடமுள்ள நாணயங்களை (சட்டப்பணத்தை) விட, **கேள்விவைப்புக்களின் [வங்கிப்பணத்தின்] பங்கு கூடியுள்ளது.** இது மக்களிடையே வங்கிப்பழக்கம் கூடியுள்ளது என்பதைக் காட்டுகின்றது.

17. (i) $M_1$ – பொதுமக்களின் சட்டரீதியான பணத்தையம், கேள்வி வைப்புக்களையும் குறிக்கும்.

- எனவே இது **சட்டரீதியான பணத்தின் பங்கு கூடுதலையும், வங்கிப்பழக்கம் குறைதலையும்** குறிக்கின்றது.

(ii) ◆ இலங்கையில் கிட்டிய பணநிரம்பல் என்பது வர்த்தகவங்கிகளிலுள்ள தனியார்துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்களைக் குறிக்கின்றது.

- விரிந்த பணநிரம்பல் ($M_2$) என்பது குறுகிய பணநிரம்பலுடன் ($M_1$) கிட்டிய பணநிரம்பலையும் உள்ளடக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M2 = M1 + சிட்டிய பணநிரம்பல்
= 11780 + 18750
= 30530 மில். ரூபா

- 1982இல் விரிந்தபணநிரம்பலில் ($M_2$), குறுகிய பணநிரம்பலிலும் ($M_1$) பார்க்க கிட்டிய பணநிரம்பலின் பங்கு கூடுதலாக இருந்துள்ளது.

20. i) கொடுக்கல் வாங்கல்களுக்கு காசோலையினை உபயோகிப்பதில் (வங்கிப்பழக்கத்தில்) ஏற்பட்ட சார்பு வீழ்ச்சியினைக் குறிக்கின்றது.

- பாதுகாப்புக் காரணங்களால் நாட்டின் சிலபகுதிகளில் வங்கிச்சேவைகளில் ஏற்பட்ட சார்பு வீழ்ச்சியினைக் குறிக்கின்றது.

ii) நாட்டில் பணவீக்கநிலையினை இது குறிக்கின்றது.

- விலை அதிகரிப்புக்களால் பரிமாற்றப்படும் பெறுமதிகள் கூடியிருப்பதால் பெறுமதிகூடிய நாணயத்தாள்களின் பங்கும் அதிகரிக்க வேண்டியதாயிற்று.

21
- 1995இல் சென்மதிநிலுவையில் சமூலக்குறைநிலை காணப்பட்டதால், வங்கித்துறையின் **தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறைவடைந்தன.**
- எனவே பணநிரம்பல்மீது வெளிநாட்டுக்காரணிகளின் விரிவாக்கத்தாக்கம் இருக்கவில்லை.

## *விடைகள் (பயிற்சி வினாக்களுக்கானவை)*

I 1. பணம் 2. (i),(ii)

II 2. பண்டமாற்று முறையில்
5. பண்டப்பணம் → பிரதிநிதித்துவநியமப்பணம் → அடையாளப்பணம்
7. (i), (iv), (v), (vi)

IV 2. (i), (iii), (iv) 4. (ii)

V 8. நாணயமற்ற சொத்துக்களால் பெறக்கூடிய வட்டி போன்ற வருமானங்கள்
10. (iii), (v), (i), (ii), (vi), (iv)
13. கொள்வனவு ஆற்றல் - வீழ்ச்சி - கருதாதுவிடுவர்
14. விரும்பப்படமாட்டாது.
15. (ஆ) (iii)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI 8. (i) சட்டப் (ii) கிட்டிய (iii) வங்கிப் (iv) பிரதிப் (v) போலிப் (vi)கிட்டிய

9. வர்த்தக வங்கிகளிலுள்ள தனியார்துறையின்
A) தவணைவைப்பு B) சேமிப்புவைப்பு

10. போலிப்பணம்

11. (ii), (iii), (vi)

14. 9வது வினாவின் விடை

15. திறைசேரி உண்டியல்கள், வரிஒதுக்குச் சான்றிதழ்கள்

16. பூரணதிரவத்தன்மை - பணத்திற்கு உண்டு; அண்மியபணத்திற்கு இல்லை.

17. A பொதுமக்களிடமுள்ள நாணயங்கள் /சட்டப்பணம்
B பொதுமக்களின் கேள்வி வைப்புக்கள்/ வங்கிப்பணம்

18. (i) $M_1$ (ii) பொதுமக்களின் கேள்வி வைப்புக்ள் (DDP)
+ வர்த்த்தக வங்கிகளிலுள்ள தனியார் துறையின் தவணை சேமிப்பு வைப்புக்கள் (QM)

19. குறுகிய 20. அண்மிய 21. (i) $M_1$, (ii)$M_1$, (iii)$M_1$
(iv) வங்கிப்பணம் (v) வங்கிப்பணம் 22. (iii)(iv) 23. (ii) (v)

25. பிரதிப் 26. (i), (iv), (v)

28. பணம் - காசுத்தாள், நாணயக்குற்றிகள்
கிட்டிய பணம் - திறைசேரி உண்டியல்கள், சேமிப்புத்தவணை வைப்பு, மாற்றுண்டியல், வைப்புச்சான்றிதழ்
பணப்பதிலீடுகள் - கடன் அட்டைகள், மாஸ்டர்காட்

VIII 01. ♦ கொடுக்கல் வாங்கல் நோக்கம் - நாளாந்த செலவுக்காக.
♦ பாதுகாப்பு நோக்கம் - எதிர்பாராத செலவுக்காக.
♦ ஊகநோக்கம் - எதிர்காலத்தில் முதலிடுவதற்காக.

02. (i) வருமானம் (ii) வட்டிவீதம்

05. பணத்திற்கான கேள்வி அதிகரிப்பதை, அதாவது மக்கள் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு அதிகரிப்பதைக் குறிக்கின்றது.

07. நேரான தொடர்பு விளக்கப்படவேண்டும்

08. (i) 350ரூபா (ii) 1400 ரூபா (iii) அவையும் இரட்டிக்கும்

09. (ii) 10. வட்டிவீதம் அதிதாழ்ந்த மட்டத்தை அடைந்துள்ள நிலையில் - வட்டி வீதம் அதிகரிக்கும் என எல்லோரும் எதிர்பார்க்கும் நிலை.

11. ivவது மட்டும் பணகேள்வியை அதிகரிக்கும். ஏனையவை குறைக்கும் என்பது விளக்கப்பட வேண்டும்.

13. (i) ஊக (ii) கொடுக்கல் வாங்கல் (iii) முன்னெச்சரிக்கை

14. வருமானத்தின் - நேரான - வட்டிவீதத்துடன்.

15. பணத்தின் செய்வினை நிலுவைக்கேள்வி - வருமானத்தின்

16. (iii) (iv) (v) 17 எதிரான தொடர்பு விளக்கப்படவேண்டும்

18. (i) (ii) (iv) பரிமாற்றூடகம், (iii) (v) பெறுமானத்திரட்டு

19. (i) MDs (ii) பணத்தின் - கேள்வி - நிரம்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. 8% (செய்வினை நிலுவை 2000 + செய்வினையற்றநிலுவை 4000 = பணத்துக்கான கேள்வி 6000 மில்.ரு = பணநிரம்பல் 6000 மில். ரூபா)

## VIII

01. (ii), 8 (அ) (iii), (ஆ) (iv),

10. (i) (ii) இரண்டிற்கும் நாணயத்தளம்/ ஒதுக்குப்பணம்

11. (i) $M_O = 53100 - (100 + 7400) = 45600$ மில். ரூபா

(ii) $M_1 = 45600 + [127000 - (16000 + 70000)] = 86600$

(iii) $M_2 = 86600 + 202000 = 2886000$ மில். ரூபா

(iv) $Qm = 202000$ மில். ரூபா

| நாடுகள் | | நாணயங்கள் |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | - | அமெரிக்க டொலர் |
| ஐக்கிய இராச்சியம் | - | பவுண் |
| யப்பான் | - | யென் |
| சோவியத் ரசியா | - | ரூபிள் |
| சீனா | - | யு ஆங் |
| சவூதி அரேபியா | - | றியால் |
| கனடா | - | கனடா டொலர் |
| அவுஸ்திரேலியா | - | அவுஸ்திரேலிய டொலர் |
| சிங்கப்பூர் | - | சிங்கப்பூர் டொலர் |
| நோர்வே | - | குரோன் |
| தாய்லாந்து | - | பாத் |

| | | | |
|---|---|---|---|
| 1) | ஜேர்மன் | - | மார்க் |
| 2) | பிரான்ஸ் | - | பிராங் |
| 3) | பெல்ஜியம் | - | பிராங் |
| 4) | லக்சம்பேர்க் | - | பிராங் |
| 5) | ஒஸ்ரியா | - | சிலிங் |
| 6) | நெதர்லாந்து | - | கில்டர் |
| 7) | இத்தாலி | - | லீரா |
| 8) | ஸ்பெயின் | - | பெசெற்றா |
| 9) | அயர்லாந்து | - | ஐரிஸ்பவுண் |
| 10) | போர்த்துக்கல் | - | எஸ்லியூடோ |
| 11) | பின்லாந்து | - | மார்க் |

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த இந்தப் 11 நாடுகளும் 01.01.1999 முதல் "யூரோ" வைப் **(Euro)** பொதுநாணயமாக ஏற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்சேர்க்கை

## $M_2b$ மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

- "ஒருநாட்டின் பண நிரம்பலின் பெறுமதி, அதன் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் கூட்டுத்தொகைக்குச் சமமானதாகும்"
- அதன் பிரகாரம் $M_{2b}$ மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3 **ஐந்தொகை**களுக்கூடாக பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவையாவன.

I. **மத்திய வங்கி** ஐந்தொகையின் தகவல்கள்

II. **வர்த்தக வங்கிகளின்** ஒன்றிணைந்த ஐந்தொகையின் தகவல்கள்

III. **வெளிநாட்டு நாணய வங்கி அலகுகளின்** ஐந்தொகையின் தகவல்கள்

- இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு $M_{2b}$யின் மீது செல்வாக்கச் செலுத்தும் **காரணிகளை** பின்வருமாறு தொகுத்துக் கூறமுடியும்.

$$M_{2b} = NFA + NDA$$

இங்கு 1. NFA = தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்
Net Foreign Assets

2. NDA = தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்
Net Domestic Assets.

1) NFA/ தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்

- பின்வரும் முறையில் கணிப்பிடப்படுகிறது.

$$NFA = FA - FL$$

இங்கு FA = ஒருங்கிணைந்த **வங்கி அமைப்பின்** மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள்.

FL = ஒருங்கிணைந்த வங்கி அமைப்பின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (Liabilities)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) NDA/ தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்

◆ பின்வரும் முறையில் கணிப்பிடப்படுகின்றது.

| |
|---|
| NDA = DA + OI |

இங்கு DA = உள்நாட்டுச் சொத்துக்கள் (தேறியது)
OI = ஏனைய விடயங்கள் (தேறியது)
Other Items (Net)

◆ DA/ உள்நாட்டுச் சொத்துக்களில் 3 விடயங்கள் உள்ளடக்கப் படுகின்றன.
(i) ஒருங்கிணைந்த வங்கி அமைப்பினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தேறியகடன்
(ii) அரசகூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்
(iii) தனியார்துறைக்கு வழங்கப்பட்ட கடன்

◆ OI/ ஏனைய தேறிய விடயங்கள் என்பவை
- ஒருங்கிணைந்த வங்கி அமைப்பின் ஏனைய சொத்துக் களிற்கும் ஏனைய பொறுப்புக்களிற்குமிடையிலான வித்தியாசமாகும்.

| |
|---|
| குறிப்பு: ஒருங்கிணைந்த வங்கி அமைப்பு = மத்திய வங்கி + வர்த்தக வங்கிகள் |

வினாக்கள்: (i) $M_{2b}$ என்பதனால் கருதப்படுவது யாது?
(ii) $M_2$, $M_{2b}$ ஆகியவற்றை வேறுபடுத்துக.
(iii) $M_{2b}$ மீது செல்வாக்குச் செலுத்தும் தகவல்களை எவற்றினூடாக பெற்றுக் கொள்ளலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயத்தளம் Monetary Base

## தளநாணயம் / ஒதுக்குப்பணம் / உயர்வலுப்பணம்
## (Base Money/ Reserve Money/ High Powered Money)

நாணயத்தளம் என்பது மத்திய வங்கியினால் உருவாக்கப்பட்டு பொருளாதாரத்திற்கு வழங்கப்படுவது. இது வணிக வங்கிகளினால் நாளாந்த நடவடிக்கையில் கடனாக்கம் செய்யவும், வைப்புக்களை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நாணயத் தளம் பொது மக்கள் வணிக வங்கிகள் என்பவற்றிற்கான மத்திய வங்கியின் பொறுப்புக்களை உள்ளடக்கியதாக இருக்கும். அரசாங்கப் பொறுப்பக்கள் இதனுள் அடங்காது. இந் நாணயத்தளம் **மத்திய வங்கியின் பின்வரும் பொறுப்புக்களை உள்ளடக்கியிருக்கும்.** (பயன்பாட்டுப்பக்கம்- Use Side)

1) பொது மக்களிடமும், வணிக வங்கிகளிடமும் உள்ள நாணயங்கள் [CP + CKP ]
2) மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கிகளின் வைப்புக்கள் [R R]
3) மத்திய வங்கியிலுள்ள ஏனைய நிறுவனங்களின் வைப்புக்கள் [DOI]

$$\text{நாணயத்தளம் } B = CP + CKB + RR + DOI$$

**மத்திய வங்கியிடமுள்ள தேறிய உள்நாட்டு வெளிநாட்டுச் சொத்துக்களுக்கு சமனாக** நாணயத் தளம் விளங்கும். பின்வரும் காரணிகளில் ஏற்படும் மாற்றம் நாணயத் தளத்திலும் அதே வகையில் மாற்றத்தை ஏற்படுத்தும். (மூலவளப்பக்கம் - Source Side)

i) வணிக வங்கிகளுக்கான முற்பணங்கள் (AKB)
ii) அரசிற்கான மத்திய வங்கியின் தேறியகடன் (NCGCB)
iii) மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் (NFACB)
iv) தேறிய ஏனைய சொத்துக்கள் (NOACB)

$$B = AKB + NCGCB + NFACB + NOACB$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட காரணிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் மத்திய வங்கி நாணயத் தளத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும். இந்த நாணயத் தளமானது பணப்பெருக்கிக் கேற்ப நாட்டின் பணநிரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

வினாக்கள் :

1) ஒரு மத்திய வங்கியின் எளிமைப் படுத்தப்பட்ட ஐந்தொகை வருமாறு:

| பொறுப்புக்கள் | மில்.ரூபா | சொத்துக்கள் | மில்.ரூபா |
|---|---|---|---|
| பொதுமக்களிடமுள்ள நாணயம் | 10, 000 | வணிக வங்கிகள் ஏனையவற்றுக்கான முற்பணங்கள் | 17, 000 |
| வணிகவங்கிகளிடமுள்ள நாணயம் | 20, 000 | அரசிற்கான கடன்கள் | 10, 000 |
| | | சர்வதேச ஒதுக்குகள் | 13, 000 |
| வணிக வங்கிகளின் வைப்புக்கள் | 2, 000 | ஏனைய சொத்துக்கள் | 2, 500 |
| ஏனைய நிறுவனங்களது வைப்புக்கள் | 1, 000 | | |
| அசாங்க வைப்புக்கள் | 1, 500 | | |
| வெளிநாட்டுப் பெறுகைகள் | 5, 000 | | |
| ஏனைய பொறுப்புக்கள் | 3, 000 | | |
| | 42. 500 | | 42, 500 |

அ) நாணயத் தளத்தின் அளவினைக் கணிப்பிடுக. (இது பயன்பாட்டுப் பக்கம்)

(மில். ரூபா)

| | | |
|---|---|---|
| i) | பொது மக்களிடமுள்ள நாணயம் | 10. 000 |
| ii) | வணிக வங்கிகளிடமுள்ள நாணயங்கள் | 20. 000 |
| iii) | வணிக வங்கிகளின் வைப்புக்கள் | 2. 000 |
| iv) | ஏனைய நிறுவனங்களது வைப்புக்கள் | 1. 000 |
| | நாணயத்தளம் | 33. 000 |

ஆ) மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டு வெளிநாட்டுச் சொத்துக்களின் பெறுமதியைக் கணிப்பிடுக. (இது மூலவளப்பக்கம்)

| | | |
|---|---|---|
| i) | வணிக வங்கிகளுக்கான முற்பணம் | 17, 000 |
| ii) | அரசிற்கானமத்திய வங்கியின் தேறியகடன் | 8, 500 |
| iii) | மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டச் சொத்து (சொத்து 13000 - பொறுப்பு 5000) | 8, 000 |
| iv) | தேறிய ஏனைய சொத்துக்கள் | - 500 |
| | மொத்த தேறிய உள்நாட்டு வெளிநாட்டுச் சொத்துக்கள் | 33. 000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தளப்பணம் ஏன் **"உயர்வலுப்பணம்" (High Powerd Money)** எனப்படுகிறது?

தளப்பணமானது வர்த்தக வங்கிகளின் உள்ளீடாக இருந்து பல மடங்கு வைப்புக்களையும் கடன்களையும் உருவாக்க வழிவகுப்பதனால் உயர் வலுப்பணம் என அழைக்கப்படுகிறது.

3. 1992ஐ விட 1993இல் இலங்கை மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 24676 மில்லியன் ரூபாவால் அதிகரித்த போதும் ஒதுக்கு நாணயம் (நாணயத் தளம்) 11609 மில்லியன் ரூபாவால் மட்டுமே வளர்ச்சியடைந்தது. இது பற்றிய உமது விளக்கம் யாது?

1992ஐ விட 1993இல் மத்தியவங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 13067 மில்லியன் ரூபாவால் குறைந்துள்ளது.

4. "மத்திய வங்கியினால் பொதுமக்களுக்கு உள்நாட்டு நாணயத்திற்கு தங்கம் விற்பனை செய்யப்படல் நாணயத்தளத்தில் வீழ்ச்சியொன்றினை விளைவிக்கும்" இக்கூற்று சரியா? தவறா? விளக்கம் தருக.

சரி

நாணயத் தளம் $B = AKB + NCGCB + NFACB + NOACB$

பொதுமக்களுக்கு உள்நாட்டு நாணயத்திற்கு தங்கம் விற்பனை செய்யப்பட்டால் தேறிய ஏனைய சொத்துக்கள் (NOACB) குறைவடைய நாணயத் தளம் வீழ்ச்சியடையும்.

## பணப்பெருக்கி

"பண நிரம்பலுக்கும் நாணயத் தளத்திற்குமிடையிலான விகிதம் பணப் பெருக்கி எனப்படும்."

$$\text{பணப் பெருக்கி} = \frac{\text{விரிந்த பண நிரம்பல}}{\text{நாணயத் தளம்}} = \frac{M_{2b}}{RM}$$

RM = ஒதுக்குப்பணம் (Reserve money)

வினாக்கள்

1. நாணயத் தளம், பணப்பெருக்கி, பணநிரம்பல் என்வற்றுக்கிடையிலான தொடர்பை ஓர் எளிய சமன்பாட்டைப் பயன்படுத்தி விளக்குக.

பண நிரம்பல் என்பது நாணயத் தளத்தைப் பணப் பெருக்கியால் பெருக்குவதன் மூலம் பெறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$MS = mB$$

(**MS** – விரிந்த பண நிரம்பல், **m** – பணப்பெருக்கி. **B**- நாணயத்தளம்)

உதாரணம்: நாணயத் தளம் 20, 000 மில்லியன் ரூபா பணப்பெருக்கி 2.5

∴ பண நிரம்பல் $MS = mB$

$= 2.5 \times 20,000$

$= 50.000$ மில். ரூபா

| |
|---|
| குறிப்பு : பணநிரம்பல் ≠ நாணயத்தளம் |
| பணநிரம்பல் = நாணயத்தளம் X பணப்பெருக்கி |

2 பணப்பெருக்கி 3இற்குச் சமனானதாயின் நிதிக்கம்பனியொன்றிற்கு மத்தியவங்கியினால் வழங்கப்படும் ரூபா 100 மில்லியன் கடன் ஒன்றின் தொடர்நிகழ்வான பணநிரம்பல் விரிவாக்கம் ரூபா 600 மில்லியனாகும். இக்கூற்றுசரியா? பிழையா? விளக்கம் தருக.

பிழை $Ms = mB$

$MS = 3 \times 100$

$= 300$ மில். ரூபா

எனவே மேற்படி சமன்பாட்டின் படி 300 மில். ரூபா மட்டுமே பண நிரம்பல் விரிவாக்கம் ஏற்படும்.

## பௌதிகப் பணமும் உட்கிடைப் பணமும்
## Physical Money and Implicit Money

- கண்ணால் பார்க்கவும், தொட்டுணரவும் கூடியதான பணம் **பௌதிகப் பணமாகும்.** உ-ம் : தாள், உலோக நாணயங்கள்.
- ஆனால் **உட்கிடைப்பணம்** கண்ணால் பார்க்க முடியாததாகவும், புத்தகப் பதிவுகளாகவும் (Book entry) மக்களது நம்பிக்கைகளாகவும் இருக்கும். உ-ம் : கேள்வி வைப்பு, கடன் அட்டைகள், இலத்திரனியல் அட்டைகள்.
- உட்கிடைப் பணத்தின் **அனுகூலங்கள் :**
  1) ஆபத்துக் குறைவு (Less risk)
  2) வசதித் தன்மையும் (Convenience)
     - பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்குமான குறைந்த செலவும்
  3) குறைந்த பரிமாற்றச் செலவு (Lower transaction Costs)
  4) விரைவான தீர்ப்பனவும், நேரச் சேமிப்பும் (Time Saving)
  5) பௌதிகப் பணத்தை உற்பத்தி செய்யப் பயன்படுத்தும் வளங்களைச் சேமித்தலும் (Resource saving)
     - வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்த முடிதலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♥ உட்கிடைப் பணவளர்ச்சியின் **பாதிப்புக்கள் :**

i) நாணய வெளியீட்டின் மூலம் பெறப்படும் இலாபத்தையும் (Seigniorage), வருமான மூலத்தையும் **அரசு** இழத்தல்.

| | | |
|---|---|---|
| | நாணயத்தாள் முகப் பெறுமதி | 1000 ரூபா |
| | அதன் உற்பத்திச் செலவு | 5 ரூபா |
| ∴ | Seigniorage | 995 ரூபா |

ii) உட்கிடைப் பணமானது நாணயக் கொள்கைக்கு வெளியே அமைவதால் **மத்திய வங்கி** பணநிரம்பலைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை இழக்க நேரிடும். புதிய கொள்கை வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கும்.

iii) **காசுப் புழக்கமற்ற சமூகம்** (Cashless Society) உருவாகும்.

♥ இப்புத்தாயிரமாம் ஆண்டின் முதல் 10 ஆண்டின்போது **தொழில்நுட்ப மாற்றங்கள்** பௌதிகப் பணத்தின் பரிமாற்றத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, ஸ்மாட்காட்டுகள், மற்றும் இலத்திரனியல் பணக்காட்டுக்கள் முதலானவற்றின் பரவலான உபயோகத்தை எடுத்து வர முடியுமென்றும், சிலவேளை 21ஆம் நூற்றாண்டின்போது **தனியொரு உலகளாவிய நாணயம்** உருவாக முடியுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# இலத்திரனியல் பணம்
## Electronic Money / E-Cash

♥ **இலத்திரனியல் சாதனங்களுடாக** கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்ற **கடன்அட்டைகள், பேபோன் அட்டைகள், இலத்திரனியல் காசோலைகள்** போன்றவற்றை உள்ளடக்கியதே இலத்திரனியல் பணமாகும்.

♥ **தகவல் தொழில்நுட்பத்தில்** ஏற்பட்டுவரும் துரித முன்னேற்றத்தின் விளைவாக இலத்திரனியல் பணம் உருவாகியுள்ளது.

- இது ஓர் உட்கிடைப் பணமாகும்.

♥ இலங்கையில் முதல் தடவையாக **பிளாஸ்டிக் பணவடிவ**மொன்றாக (Plastic Money) **இலத்திரனியல் பணப்பை** (Electronic Purse) எனவும் அழைக்கப்படும் **சிமாட் அட்டையை** (Smart Card) 1998 இன் நடுப்பகுதியில் மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியது.

- "கொடுக்கல் வாங்கலுக்கு உதவும் வகையில் வங்கியினால் வெளியிடப்படும் இலத்திரனியல் பணப்பையாகப் பயன்படும் பிளாஸ்டிக் அட்டை சிமாட் அட்டை ஆகும்"
- இது **பல்பயன்பாடுடைய** இலத்திரனியல் பணப்பையாகவும், கடன் அட்டையாகவும், தன்னியக்க ரெலர் அட்டை (ATM Card) ஆகவும் பயன்படக்கூடியதாகும்.
- இப்பணப்பையின் சிப்புக்குள் **சேமிப்பு வைப்பு** பேணப்படுகின்றது. வைப்பாளர் சிமாட்காட் வியாபாரியிடமோ, வங்கிக் கிளைகளிலோ சென்று பணப்பையில் வைப்பை இடவோ அல்லது பணத்தை மீளப் பெறவோ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அத்துடன் மீள நிரப்பும் நிலையத்திற்குச் சென்று தனது கணக்கி-லிருந்து பணத்தை பணப்பையில் மீள நிரப்பவும் முடியும்.
- இதில் இரகசிய கணக்கு இலக்கமும், கணக்குப் பதிவுகளும் நிலுவை விபரமும் பேணப்படும்.
- பாதுகாப்பானது : இரகசிய இலக்கத்தைக் கொண்டுள்ளதால் வேறு எவரும் இதனை உபயோகிக்க முடியாது. இது தொலைந்தால் / களவாடப்பட்டால் சிமாட் காட் மையத்திற்கு தெரிவிப்பின் அந்தக் காட் இரத்துச் செய்யப்பட்டு பணத்திற்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.
- வசதியானது :
  (i) கடன் கொடுக்கல் வாங்கல்களில் மேற்கொள்ளப்படுவது போல கையொப்பங்களோ, அதிகாரம் வழங்குவதோ அவசியமில்லை.
  (ii) சிறு சிறு கொடுக்கல் வாங்கல்களிலும் கூடப் பயன்படுத்தலாம்.
  (iii) துரித சேவையும், எளிமையும் இதன் சிறப்புக்களாகும்.

♥ இலத்திரனியல் பணமானது **Cyber Cash, Digital Cash** என இருவகையில் அமைகின்றது.

♥ இலத்திரனியல் பணப் பரிமாற்றம் இரு முறைகளில் பயன்படுகிறது
(i) **On-line System :** இது இலகுவானது. பணம் முன்னர் செலவிடவில்லை என்பதை வியாபாரி உடன் அறிய முடியும். ஒவ்வொரு செலவும் செய்தவுடன் OK என்ற பதிலை வியாபாரி பெற முடியும்.
(ii) OFF-line System : இது சிக்கலானது. இதில் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலிலும் வியாபாரி வங்கியுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கும்

♥ **Mondex Card** உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்றுள்ளது.

♥ **Euro Card** என்பது ஒரு நாட்டு நாணயத்தை எந்த நாட்டிற்கும் கொண்டு சென்று செலவிடக்கூடியதாகும்.

♥ நுகர்வோர், வியாபாரிகள், அரசுகள், கல்வி நிறுவனங்கள் உலகளாவிய ரீதியில் இலத்திரனியல் பணத்தை **2000 ஆம்** ஆண்டில் **9 பில்லியன்** கொடுக்கல் வாங்கல்களுக்கும், **2005 ஆம்** ஆண்டில் **30 பில்லியன்** கொடுக்கல் வாங்கல்களுக்கும் பயன்படுத்துவர் என Killen & Associates மதிப்பிட்டுள்ளது. வழமையான நாணயத்தின் இடத்தை இந்த நவீன பணம் மிக வேகமாக சுவீகரித்து வருகின்றது. எனவே 21 ஆம் நூற்றாண்டில் உலகம் விரைவாக காசற்ற சமூகமாக மாறி விடும் எனலாம்.

## *மீட்டல் வினாக்கள்*

(சகல பகுதிகளும் படித்து முடிந்தபின் விடையளிக்க முயற்சிக்கவும்)

01. பரிமாற்றூடகமொன்று கொண்டிருக்க வேண்டிய மிக முக்கியமான இயல்பு யாது?
   i) சட்டரீதியான அங்கீகாரமுடையதாக இருத்தல்
   ii) இலகுவில் அடையாளங் காணக்கூடியதாக இருத்தல்.
   iii) பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுதல்
   iv) பூரண திரவத்தன்மையுடையதாக இருத்தல்.
   v) எளிதாக கொண்டுசெல்ல முடிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. i) மக்கள் வங்கியிலுள்ள 2000 ரூபா சேமிப்பு வைப்பு.
ii) 1000 ரூபா நாணயத்தாள்
iii) இலங்கை வங்கியிலுள்ள நடைமுறைக்கணக்கு நிலுவை.
iv) இலங்கை வங்கியினால் வெளியிடப்பட்ட கடனட்டை
v) மக்கள் வங்கியிலுள்ள 2 வருட முதிர்ச்சி உண்டியல்
vi) 5000 ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்.

மேற்காட்டியவற்றில் பின்வருவனவற்றை பிரதிபலிக்கும் இலக்கங்களைக் குறிப்பிடுக.
அ. பணம் ........................................ ஆ. அண்மிய பணம் ........................................
இ. பிரதிப்பணம் ........................................

03. பின்வருவனற்றில் எவை ஒத்ததன்மையானவை?
i) திரவத் தேர்வு
ii) பணத்திற்கான கேள்வி
iii) காசு நிலுவைக்கான தேவை
iv) பண நிரம்பல்

04. பின்வருவனற்றில் நீர் ஏற்றுக்கொள்ளக் கூடியவற்றை இனங்காண்க.
i. பண்டமாற்றுப் பொருளாதாரத்தல் நேரில் பரிமாற்றமே இடம்பெற்றது.
ii. தங்கப் பற்றுச்சீட்டு ஓர் பிரதிநிதித்துவ நியமப்பணமாகும்.
iii. இலகுவில் உருவாக்க முயாத அடையாளங்களை உடையவையே அடையாளப்பணமாகும்.
iv. பணவீக்க காலத்தில் மக்கள் பணத்தினை ஒரு திரட்டாகப் பேணுவதை விரும்பமாட்டார்.
v. நாணயங்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுவதால் காசோலை ஒரு பணப்பதிலீடு ஆகும்.

05. கெயின்சின் திரவத்தேர்வுக் கோட்பாட்டின்படி பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பினால் ஏற்படக்கூடிய விளைவுகளை இனங்காண்க.
i. நிதிச் சொத்துக்களின் விலை உயர்தல்
ii. நிதிச் சொத்துக்களின் விலை குறைதல்
iii. வட்டி வீதம் குறைதல்
iv. மக்கள் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு அதிகரித்தல்

06. சீராக்கப்பட்ட விரிந்த பணநிரம்பலிற்குள் அடங்கும் கூறுகள் யாவை?
i. விரிந்த பணநிரம்பல் ($M_2$)
ii. தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள்
iii. வதிவற்றோரின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள பொதுமக்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள்.
iv. வெளிநாட்டு நாணய வங்கி அலகுகளிலுள்ள உள்நாட்டவர்களின் வைப்புக்கள்
v. வெளிநாட்டு நாணயவங்கி அலகுகளிலுள்ள வெளிநாட்டவர்களின் வைப்புக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பணத்திற்கான கேள்விக்கோட்பாட்டில் பணத்தின் கொடுக்கல் வாங்கல் கேள்வி எதனால் நிர்ணயிக்கப்படுகிறது?
   i. நுகர்வோரது வருமானமட்டம்
   ii. வட்டிவீத மாற்றங்கள் பற்றிய எதிர்பார்ப்பு
   iii. முறிகளின் விலை மாற்றங்கள் பற்றிய எதிர்பார்ப்பு
   iv. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களினதும், குற்றிகளினதும் மட்டம்.

08. பின்வருவனவற்றில் பண நிரம்பலில் வீழ்ச்சியை பெரும்பாலும் ஏற்படுத்தக்கூடியது எது?
   i. வட்டிவீதத்திலான வீழ்ச்சி
   ii. அரச ஆவணங்கள் மத்தியவங்கியால் கொள்வனவு செய்யப்படல்
   iii. அரச ஆவணங்கள் மத்திய வங்கியால் விற்பனை செய்யப்படல்
   iv. வணிகவங்கிகளால் வைத்திருக்கப்பட்ட நாணயங்கள் அதிகரித்தல்

09. பின்வருவனவற்றில் பொருளாதாரமொன்றின் பணநிரம்பல் என்பதனை விபரிப்பது எது?
   i. மத்தியவங்கியினால் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களும் குற்றிகளும்
   ii. வணிகவங்கிகளால் உருவாக்கப்பட்ட பணம்
   iii. நாணயத்தாள்கள், குற்றிகள் மற்றும் வங்கிவைப்புக்கள்
   iv. சட்டநியமமாகவுள்ள, எல்லா விடயங்களும்

10. பின்வருவனவற்றில் பொது மக்களிடமுள்ள தாள் குற்றி நாணயங்களை மட்டுமே குறிப்பிடும் பணநிரம்பல் குறியீடு எது?
   i. $M_1$   ii) $M_2$   iii) $M_{2b}$   iv) Qm   v) மேற்கூறியஎதுவுமில்லை

11. பின்வருவனவற்றில் அண்மியபணமாகக் கொள்ளமுடியாதது எது?
   i. வைப்புச்சான்றுப்பத்திரம்   ii) திறைசேரி உண்டியல்
   iii) சேமிப்புச்சான்றிதழ்   iv) பிரயாணிகள் காசோலைகள்
   v) தவணை வைப்புக்கள்

12. இலங்கையின் குறுகிய பணநிரம்பலுக்குள் ($M_1$) அடங்காத விரிந்த பண நிரம்பலுக்குள் ($M_2$) அடங்கும் விடயங்களை இனம் காண்க.
   i. தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள தனியார் துறையின் தவணை சேமிப்பு வைப்புக்கள்
   ii. வர்த்தக வங்கிகளிலுள்ள தனியார் துறையின் கேள்வி வைப்புக்கள்.
   iii. வர்த்தக வங்கிகளிலுள்ள தனியார் துறையின் கால வைப்பக்கள்.
   iv. பொதுமக்களிடமுள்ள நாணயங்கள்.
   v. வர்த்தக வங்கிகளிலுள்ள தனியார் துறையின் சேமிப்பு வைப்புக்கள்.

13. பின்வருவனவற்றில் பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் எவை?
   i. வணிக வங்கிகளிடமுள்ள தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்
   ii. அரசிடமுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள்
   iii. தேசிய சேமிப்ப வங்கியிலிருந்தான அரசின் கடன்படல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. மத்திய வங்கியிடமுள்ள தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்
v. வங்கிகளின் தனியார் துறைக்கான கடன் வழங்கல்.

14. உங்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய கூற்றுக்களை இனங் காண்க.
   i. வருமானத்திற்கும் பணத்தின் செய்வினை நிலுவைக்கமான தொடர்பு நேரானதாகும்.
   ii. வட்டிவீதத்திற்கும் பணத்தின் கொடுக்கல் வாங்கல் கேள்விக்குமான தொடர்பு நேரானதாகும்.
   iii. வட்டி வீதத்திற்கும் திரவத் தேர்வுக்குமான தொடர்பு நேரானதாகும்.
   iv. எதிர்கால வட்டி வீதத்திற்கும் பணத்தின் ஊக நோக்கக் கேள்விக்குமான தொடர்பு நேரானதாகும்.
   v. சேமிப்பு என்பதற்கான ஒரு மாற்றுச் சொற்றொடர் பணத்திற்கான கேள்வி ஆகும்.

15. பணத்தின் கேள்வியை அதிகரிக்க் கூடியவற்றை இனங்காண்க.
   i. செலவிடத்தக்க வருமானத்தில் அதிகரிப்பு
   ii. வட்டிவீதத்தில் வீழ்ச்சி
   iii. பங்குகளின் விலைகள் வீழ்ச்சியடையும் என்ற எதிர்பார்ப்பு
   iv. பண நிரம்பலில் வீழ்ச்சி

16. பின்வருவனற்றில் நீர் ஏற்றுக்கொள்ளும் கூற்றுக்களை அடையாளப்படுத்துக.
   i. நாணயங்களும் வைப்புச் சான்றிதழ்களும் மத்திய வங்கியால் வெளியிடப்படுகின்றன.
   ii. காசோலையும் மாற்றுண்டியலும் புழக்கப்பணங்களாகும்.
   iii. அண்மிய பணமென்பது திரவச்சொத்தாகும்.
   iv. நாணயத்தளம் என்பது பணநிரம்பலுக்கானமற்றுமொரு சொல்லாகும்.
   v. இலங்கையின் மொத்தப் பணநிரம்பலில் திரவச் சொத்துக்களின் பங்கு ஏறத்தாழ முக்கால்பங்காக விளங்குகிறது.

## விடைகள் (மீட்டல் வினாக்களுக்குரியவை)

01) (iii)  02) அ. (ii), (iii)  ஆ. (i), (v), (vi)  இ. (iv)
03) (i), (ii), (iii)  04) (ii), (iv)  05) (i), (iii), (iv)  06) (i), (iii), (iv)
07) (i)  08) (iii)  09) (iii)  10) (v)
11) (iv)  12) (iii), (v)  13) (i), (iv), (v)  14) (i), (iv)
15) (i), (ii), (iii)  16) (iii), (v)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள் - References


01. Modern Economics – J. Harvey (1993) P. 277 – 290
02. An Introduction to Modern Economics –Philip Hardwick, Bahadur khan, John Langmead (1996) P. 374 – 410
03. Economics Explained – Maunder. Myers, Wall, Miller (1997) P.310 – 314, 487 – 491
04. Introductory Economics – Barry Harrison, Charles Smith and Brinley Davies (1992) P.208 – 213
05. First Principles of Economics – Richard G. Lipsey, Colin Harbury (1994) P. 334 – 345
06. Economics for Professional and Bussines Studies - R. Powell (1994) P. 288 - 304
07. An Introduction to Positive Economics – Richard G. Lipsey (1993) P. 516 – 550
08. A Level Economics – Ray Powell (1995) P. 165 – 176
09. A Level Economics – Sue Grant & Richard Young (1996) P.186 – 193
10. Modern Economics – H. L Ahuja (1997 P. Part V. 195 – 219, 247
11. Dictionary of Modern Economics – David W. Pearce (1995)
12. CIMA Practice & Revision kit – Stage 1 Paper 3 Economic Environment (1995)
13. CIMA – Past Paper : Economic Environment – Oxonia Institute (1999)
14. 40th Anniversary Commemorative Volume of the Central Bank of SriLanka (1950 – 1990) P.49 – 73
15. Monthly Bulletin – Central Bank of SriLanka (January 1998)
16. Bankers' Journal (March / June 1999) P.15-22 (June 1999) P.78 - 82
17. பணம் - மா. சின்னத்தம்பி (1991)
18. கற்றல் கற்பித்தல் வழிகாட்டி, க.பொ.த. (உயர்தரம்) பொருளியல் பகுதி II – தேசிய கல்வி நிறுவக வெளியீடு ( 1997) பக். 01 – 07
19. க. பொ. த. உயர்தரப் பரீட்சைப்புள்ளியிடற் திட்டங்கள் - இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் (1977 - 1999)
20. இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள்
21. பொருளியல் நோக்குகள் - மக்கள் வங்கி வெளியீடு (ஜுன்-டிச. 1998, ஏப்ரல்-மே 1998, டிச. 1994, ஏப். 1994)
22. முகாமை நோக்கு (1999) யாழ் பல்கலைக்கழகம் முகாமைத்துவ மாணவர் மன்ற வெளியீடு பக். 82 – 89
23. வணிக முன்னோக்கு (1999) சண்டிக்குளி மகளிர் கல்லூரி வணிக மாணவர் மன்ற வெளியீடு பக். 7 - 10.


கங்கை ஓ(f)செற் கொம்பியூட்டர் பிறின்ட் (பிறவுண் வீதிக்கு அருகாமையில்) நாவலர் றோட், யாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நூல்கள்

1) வெளிவாரி விளைவுகள்
2) பேரினப் பொருளாதாரம்
3) பொதுப் பொருளாதாரம்
4) சர்வதேச வர்த்தகம்
5) வர்த்தக மாற்றுவீதம்
6) பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள்
7) நடைமுறை விடயங்கள்
8) பணம்

## விற்பனையாகும் இடங்கள்

யாழ்ப்பாணம் - ஸ்ரீலங்கா புத்தகசாலை
- பூபாலசிங்கம் புத்தகசாலை
- பகவான் மெடிக்கல்ஸ்

சுன்னாகம் - துர்க்கா ஸ்ரேஷனர்ஸ்

நெல்லியடி - மொடேர்ண் புத்தகசாலை

கங்கை ஓ(f)செற் கொம்பியூட்டர் பிறின்ட்
(பிறவுண் வீதிக்கு அருகாமையில்)
நாவலர் ரோட், யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org